# தமிழரசு

ஆகஸ்ட் 2007
விலை ரூ.10/-

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.07.2007 அன்று,
ஈரோட்டில் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான மண்டலக் கருத்தரங்கில் பங்கேற்று குடிநீர் மற்றும் சுகாதாரம் குறித்த
விழிப்புணர்வுத் தகவல் கையேட்டினை வெளியிட, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்
உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உள்ளனர்.

# தமிழரசு

செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038

ஆடி – ஆவணி ஆகஸ்ட் 2007

மலர் : 39 இதழ் : 2

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,**இ.ஆ.ப.,

இயக்குநர் மற்றும்

அலுவலால் அரசு இணைச் செயலாளர்

செய்தி–மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**

துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**

உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**

**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க.இராஜராஜேஸ்வரி**

**இரா.சுரேஷ்**

**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**

**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**

**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**

**ஜெ.ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.ராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்**

**ஆர்.பாலாஜி**

(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை – தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை–600 002.

தொலைபேசி : 25368926/25364906

தொலைநகல் : 25364906

மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in

இணையதளம் : www.tn.gov.in




**குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு**

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின்
அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...


- சுதந்திரத் திருநாள் விழா ..... 2
  - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை
- மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுடன்
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு ..... 10
- டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு தொடர்ந்து
  முன்னேறி இதர மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது
  - திருமதி.சோனியாகாந்தி அவர்கள் புகழாரம் ..... 11
- மத்திய அரசின் திட்டங்களுக்கு மாநில அரசு தொடர்ந்து ஒத்துழைப்பை
  நல்கி வருகின்றது - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ..... 13
- மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (ம) காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
  மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ..... 18
- தமிழகத்தையே பூங்காவாக மாற்றுவோம்
  - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ..... 49
- அமர்த்தியா சென் ஆய்ந்து அறிவிப்பது என்ன?
  - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிக்கை ..... 55
- கிருஷ்ணகிரியில் உலகத்தரத்தில் ரூ.2,300 கோடி மதிப்பில் புதிய தொழில் மையம் ..... 58
- இந்தியாவிலேயே அதிக மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்ற
  மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது ..... 60
- உள்ளாட்சித்துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்கு
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு ..... 62
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன்
  மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அர்ஜுன் சிங் அவர்கள் சந்திப்பு ..... 64
- தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் அரசு கால்நடை
  மருத்துவமனைகளில் 220 கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம் ..... 65
- வேலை உறுதியளிப்புத் திட்டம் - இந்தியாவிலேயே தமிழகத்தில்தான்
  சிறப்பாகச் செயல்படுகிறது
  - மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ..... 66
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் புதிய உதவிப் பொறியாளர்களுக்கு
  பணி நியமன ஆணையினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம)
  உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார் ..... 68
- மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்
  தலைமையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏழு மாவட்ட கிராம ஊராட்சித்
  தலைவர்கள் பங்கேற்ற மண்டல கருத்தரங்கம் ..... 70
- போக்குவரத்துக் கழகங்களில் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில்
  பணி ஆணை - மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்
  வழங்கினார் ..... 74
- சென்னைப் பெருநகர வளர்ச்சிக்காக அரசு பல சிறப்புத் திட்டங்களை
  செயல்படுத்தி வருகிறது - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் ..... 77


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை :* **சுதந்திரத்திருநாள் விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றினார்**
(15.8.2007)

*நான்காம் பக்க அட்டை :* **மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார்கள்** (25.7.2007)

# சுதந்திரத் திருநாள் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களின்

சுதந்திரத் திருநாள் உரை - 15.8.2007





தாய்மார்களே,

பெரியோர்களே,

உழைக்கும் வர்க்கமே,

உயிரினும் மேலான
என் அன்பு உடன்பிறப்புக்களே,

இந்நாள் ஆகஸ்டு 15 –

இந்தத் திருநாடு விடுதலை பெற உழைத்த – உயிர் விடுத்த – சிறைப்பட்ட – தியாகத் திரு விளக்குகளின் திருவடிகளில் சிரம் வைத்து, கரம் குவித்துத் தொழுதிடுவோம்.

“ஏற்றுக் கொண்டுள்ள சூளுரையாம்
ஏழையின் சிரிப்பில் இறைவனைக்
காண்போம்”

என்ற அண்ணாவின் அமுத மொழி – ஏட்டில், எழுத்தில், சொல்லில், கல்லில் என்று மட்டுமல்லாமல் நம் இதயத் துடிப்பில் மூச்சில் இழையோடும் புரட்சி கீதமாக ஒலித்துக் கொண்டேயிருப்பதற்கு இந்நாள் நமக்கு ஊக்கமளிக்கட்டும் – ஆக்கமும் – தாக்கமும் – அதற்கென அமையட்டும்!

விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்களின் எண்ணிக்கைக்கு ஏறத்தாழ நிகரானது வீராங்கனைகளின் எண்ணிக்கை என்பதை நினைத்துப் பார்க்குமிடத்து நாடு சுதந்திரம் அடைந்த அறுபதாண்டுகள் கடந்து 61–வது ஆண்டு தொடங்கும் வேளையில் நமது நாட்டின் குடியரசுத் தலைவராக பெண்மணிகளில் ஓர் மாமணியாம் திருமதி. பிரதிபா பட்டீல் அவர்கள் பொறுப்பேற்றிருப்பது, நமக்குப் பொற்காலம் உதயமாகிறது என்பதை உணர்த்தும் ஓர் வெற்றி விடியல் அன்றோ!

“கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு” என்று அண்ணல் காந்தியடிகள் சொன்ன வாசகத்தை மறவாமல் – நாடு, நகரம், கிராமம், குக்கிராமம், பட்டிதொட்டி அனைத்திலும் இந்த அரசின் பணிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, மின்சாரம், மருத்துவ வசதி, உணவு, உடை, உறைவிடம் போன்ற மக்களின் தேவைகளை

நிறைவு செய்யவேண்டும் என்ற குறிக்கோளை நோக்கித்தான், இந்த அரசின் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

"வீடுகள் தோறும் கலையின் விளக்கம் வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி" என்று பாடிய பாரதியாரைப் போல, தெருவெங்கும் பள்ளிகளை அமைத்துத் தந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களைத் தொடர்ந்து, கல்வி வளர்ச்சிப் பணிகளில், குறிப்பாக உயர்கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டு, இன்றைய அரசும் பல கல்வி நிறுவனங்களை வளர்த்து, மாணவ மாணவியர்க்கும், இளைஞர்களுக்கும் ஏராளமான சலுகைகளை வழங்கி வருகின்ற காரணத்தினால் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த இளைஞர் பட்டாளத்தின் வேலை வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் இந்த ஆட்சி அமைந்த கடந்த 15 மாதங்களில், 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டில் 11 புதிய தொழில்கள் தொடங்கப்படுவதற்கும், அவற்றின் மூலம் ஏறத்தாழ 1 இலட்சத்து 25 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாவதற்கும், இந்த அரசு வழி வகுத்துத் தந்துள்ளது.

தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை அளித்து வருகின்ற காரணத்தினால் இத்துறை சார்ந்த தொழில்கள் சென்னையிலும், புறநகரங்களிலும் வளர்ந்துள்ளதைப் போல இத்தொழில் மதுரை, கோவை, நெல்லை, திருச்சி, சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளிலும் வேகமாக வளர்வதற்கு இந்த அரசு வழி வகுத்துள்ளது.

மாநில அரசு, மத்திய அரசுடன் கொண்டிருக்கும் இணக்கமான நல்லுறவின் அடையாளங்களாக 2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேது சமுத்திரத் திட்டம், தமிழர்களின் நூறாண்டு காலக் கனவான தமிழ் செம்மொழி என்ற



பிரகடனம், சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம், 1,553 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் சேலம் உருட்டாலை சர்வதேச அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு புதிய குளிர் உருட்டாலை போன்ற திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

சுதந்திரத்தின் பயன் ஒவ்வொருவருக்கும் கிடைத்திட வேண்டும் எனும் நோக்குடன், பல சமூகநலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அவற்றின் மூலம் ஒவ்வொரு குடும்பமும் பயன்பெற்று வருவதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி உங்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் கிடைக்கிறது.

ஏழை எளிய தாய்மார்களின் இதயம் குளிர, நியாய விலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில், ரவை, மைதா ஆகியவைகள் குறைந்த விலையில் வழங்கப்படுவதுடன், தற்போது ஆட்டா மாவும் வழங்கிட அனுமதிக்கப் பட்டுள்ளது.

வரலாற்றில் இதுவரையில் இல்லா வகையில், 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, கிராமம் தோறும் பலர் பயன் பெற்றுள்ளதை நீங்கள் காணமுடியும்.

எல்லோருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. பயன் பெற்றோர் மகிழ, மற்றவர்களையும் தேடி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வந்து கொண்டிருக்கின்றன.



அடுப்பு ஊதும் பெண்களின் அல்லல் தீர்த்திட 3 இலட்சம் எரிவாயு இணைப்புகளுடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டு, இவ்வாண்டில் மேலும் 15 இலட்சம் குடும்பங்களுக்குத் தொடர்ந்து வழங்கப்பட உள்ளன.



91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு 1 இலட்சத்து ஓராயிரத்து 623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிலம் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

10 ஆண்டுகளுக்கு மேல் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி வாழும் 61 ஆயிரத்து 211 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நகர்ப்புறங்களில் 1 இலட்சத்து 51 ஆயிரத்து 453 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றுக்கு 20 இலட்ச ரூபாய் வீதம் 5 ஆயிரத்து 75 ஊராட்சிகளுக்கு, 1,015 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் சாலை, குடிநீர், சுகாதாரம் மற்றும் மின்வசதி முதலிய அடிப்படை வசதிகள் முழுமை பெறுகின்றன.

பேரூராட்சி ஒன்றுக்கு 50 இலட்ச ரூபாய் வீதம் 561 பேரூராட்சிகளுக்கு, 280 கோடியே 50 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், பேரூராட்சிப் பகுதிகள் அனைத்திலும் அடிப்படை வசதிகள் முழுமை பெறுகின்றன.

எஞ்சிய ஊராட்சி, பேரூராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டங்கள் தொடர்ந்து விரிவுபடுத்தப்படுகின்றன.

குழந்தைகளின் உடல் நலம் பேணிட, 71 இலட்சம் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்க்குச் சத்துணவுடன் வாரம் 3 முட்டைகள் அளிக்கப்பட்டு உங்கள் வீட்டுக் குழந்தைகள் பயன் பெற்று வருவதை பாராட்டாதார் எவர் உளர்?

வேலை வாய்ப்பினைத் தேடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் விரக்தி அடைவதைத் தடுத்து, ஊக்கமளித்திட, மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் 3 இலட்சத்து 38 ஆயிரத்து 818 படித்த இளைஞர்கள் பயன்பெறுகின்றனர். இவர்களில் சிலர், உங்கள் குடும்பப் பிள்ளைகளாகவோ,

உங்கள் வீடுகளின் அருகில் உள்ளவர்களாகவோ இருந்திடக் கூடும்.

படித்த இளைஞர்களில், இதுவரை ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 797 பேர் வேலை வாய்ப்பைப் பெற ஆணைகள் இட்டு, பணியில் அமர்த்தி அழகு பார்க்கிறது இந்த அரசு.

விவசாயத் தொழிலாளர்கள், உடல் உழைப்பு தொடர்பான பல்வேறு

10ஆம் வகுப்பு படித்த பெண்களின் திருமண உதவிக்காக வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை இடையில் நிறுத்தப்பட்டிருந்ததையும், தற்போது இந்த அரசினால் அது 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்படுவதையும் உங்கள் குடும்பத்திலோ, அருகிலுள்ள குடும்பங்களிலோ பயன் பெறுவோரைக் கண்டு நீங்கள் உணர்ந்திட முடியும்.




தொழில்களில் ஆங்காங்கே ஈடுபட்டுள்ள அமைப்புசாராத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் என அனைவருக்கும் தனித்தனி நல வாரியங்கள் மூலம் உதவித் தொகைகள் அளிக்கப்படுகின்றன.

முதியோர் உதவித் தொகை 200 ரூபாய் என்பது 400 ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இந்த அரசின் "வருமுன் காப்போம் திட்டம்" உங்கள் நலம் காக்கும் திட்டம். பயன்பெற வேண்டுகிறேன்.

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற இந்த அரசின் கொள்கைப்படி, விழுப்புரம், திருவாரூர், தருமபுரி ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன.

2 ஆயிரத்து 327 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. மேலும் 3 ஆயிரம் புதிய பேருந்துகள் நடப்பு ஆண்டில் மக்கள் சேவையில் அணிவகுக்க இருக்கின்றன.

ஏழை விவசாயிகளும், எளிய நுகர்வோரும் மகிழ்ந்து போற்றிய உழவர் சந்தைகள் முடங்கிக் கிடந்ததை மறந்திருக்க மாட்டீர்கள். அந்த உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. மீண்டும்



பயன்தந்துவரும் 103 உழவர் சந்தைகளுடன், மேலும் 50 புதிய உழவர் சந்தைகள் ஓரிரு மாதங்களில் அமைக்கப்பட உள்ளன.

சாமான்ய மக்களையும் அச்சுறுத்தி வரும் இதயநோயிலிருந்து காத்திட, ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்குத் தனியார் மருத்துவமனைகளில் இதயத்தை திறக்காமல் செய்யப்படும் சாதாரண இதய அறுவை சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சைக்கு 30 ஆயிரம் ரூபாயும், கடினமான திறந்த இதய அறுவை சிகிச்சைக்கு 70 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கி ஏழை எளிய குடும்பங்களைக் காத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இப்படி ஏழை எளியவர்களின் நலன்கள் காத்திட வேண்டுமானால் சுதந்திரத்தின் பயன் ஒவ்வொருவருக்கும் கிடைத்திட வேண்டும். அதற்குரிய பணிகள் அரசு மூலம் தொடர்ந்து நடைபெறவேண்டும். இவை என்றும் எம் சிந்தையை விட்டு அகன்றிடவில்லை. இந்த உணர்வோடுதான் ஒவ்வொரு நாளும் நாம் கடமையாற்றுகிறோம்.

உங்களிடம் வாக்குறுதி அளித்து, வாக்குகளைப் பெற்று, ஆட்சி அமைத்து, பொறுப்பேற்ற அந்தக் கணத்திலிருந்து இந்தக் கணம் வரை,

என் தமிழ்நாடு,
என்னுடைய தமிழக மக்கள்,
என் அருமைத் தமிழ்மொழி

என்ற உணர்வோடு தான் திட்டங்களைச் சிந்திக்கிறேன்; தோழமை கண்டுள்ள நண்பர்களின் துணையோடு அவற்றைச் செயல்படுத்துகிறேன். உங்கள் வாழ்வு சிறக்க, தமிழகம் செழிக்க ஓய்வு ஒழிவின்றிச் செயலாற்றி வருகிறேன்.

தமிழகம் இந்தியாவின் இதர மாநிலங்களுக்குப் பல வழிகளில் முன்னோடியாக நின்று வழிகாட்டுகிறது என்று அண்மையில் திருமதி. சோனியாகாந்தி அவர்கள் மதுரையில் நடைபெற்ற விழாவில் குறிப்பிட்டதை நினைவூட்டுகிறேன். எந்தவொரு பணிக்கும் தமிழகமே முன்னோடி என்ற நிலை வரவேண்டும்; அது நிலைபெறவும் வேண்டும். தமிழக மக்கள் அனைவர் வாழ்வும் வளம் பெற வேண்டும். அதற்காக இந்த அரசு நிறைவேற்றிடும் திட்டங்களுக்கு அனைவரின் ஒத்துழைப்பும் தொடர்ந்து கிடைத்திட வேண்டும் என்று இத்திருநாளில் என் தமிழக மக்கள் அனைவரிடமும் அன்புடன் வேண்டுகிறேன்.

வாழ்க சுதந்திரம்!

வாழ்க தமிழகம்!

வாழ்க தமிழ் மக்கள்!

வணக்கம்

◆

## படமும் செய்தியும்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.8.2007 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழாவையொட்டி சென்னை அருள்மிகு அகத்தீஸ்வரர் மற்றும் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற 60ஆவது சுதந்திர தின சமபந்தி விருந்தில் கலந்து கொண்டார்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், 15.8.2007 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழாவையொட்டி சென்னை அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற 60ஆவது சுதந்திர தின சமபந்தி விருந்தில் கலந்து கொண்டார்.



# மேதகு குடியரசுத் தலைவர் திருமதி. பிரதிபா பட்டீல் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சந்திப்பு

இந்தியாவின் குடியரசுத் தலைவராக, முதன் முதலில் பெண்மணி ஒருவர் வரவேண்டுமென்பதற்காகத் துவக்கத்திலிருந்து குரல் கொடுத்து, அதிலே மகத்தான வெற்றியும் கண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருமதி.பிரதிபா பட்டீல் அவர்கள் வேட்பாளராக இருந்தபோதே, முதலில் தமிழகத்திற்கு அழைத்துவந்து மிகப் பெரிய மகளிர் பேரணி ஒன்றை நடத்தினார். குடியரசுத் தலைவராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு 25.7.2007 அன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியேறிய பின்னர், முதல் பார்வையாளராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குடும்பத்தினருடன் சென்று குடியரசுத் தலைவரைச் சந்தித்தபோது, முதலமைச்சரையும், அவரது குடும்பத்தினரையும் குடியரசுத் தலைவர் திருமதி. பிரதிபா பட்டீல் அவர்களும், அவரது கணவரும் அன்போடு வரவேற்று உபசரித்தனர். □




**டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறி இதர மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது**

இந்த விழா முதலில் இராமேசுவரத்தில் நடப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அங்கு வரும் மிகப் பெருமளவிலான பக்தர்களுக்கு எந்த விதமான அசவுகரியமும் ஏற்படக்கூடாது என்பதற்காக, விழா இந்த அழகான மதுரை நகரில் நடப்பதற்காக மாற்றப்பட்டது. இந்த மதுரை நகரம் பல நூற்றாண்டுகளாக தமிழ்நாட்டின் மகத்துவத்தை, அதன் உன்னதமான பண்பாட்டை, இலக்கியத்தை, கலைகளை, கட்டட, சிற்பக் கலைகளை, இசையை உலகிற்கு எடுத்துக்காட்டி வருகிறது. மதுரை நகரம் உலகம் முழுவதும் புகழ்பெற்று விளங்கி வருகிறது. மதுரை தமிழகத்தின் பெருமை மட்டுமல்ல, இந்த நகர் இந்தியாவின் பெருமையாக இந்திய கலாச்சாரத்தை, பண்பாட்டை அவற்றின் உன்னதமான வடிவம் பிரதிபலித்து வருகிறது.



இராமேசுவரம்
அகல ரயில்பாதை தொடக்க விழாவில்
திருமதி. **சோனியா காந்தி** அவர்கள்
புகழாரம் (12.08.2007)

குறிப்பாக நான் மதுரையிலிருந்து, 'தெற்கு காசி' என்று போற்றப்படும் இராமேசுவரம் வரை உள்ள தூரம் முழுவதையும் அகல ரயில்பாதை மூலம் இணைக்கும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அகல ரயில்பாதை மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் வழியாகச் சென்று இலட்சக்கணக்கான மக்களுக்கும், நாடு முழுவதுமிருந்து வரும் யாத்திரீகர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக விளங்கும்.

நாட்டிலுள்ள அனைத்துமீட்டர் கேஜ் ரயில் பாதைகளையும் அகல ரயில்பாதைகளாக மாற்றும் பணி முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் தொடங்கப்பட்டு அப்போது முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால் டெல்லியில், மத்திய அரசில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகுதான் தென்னிந்தியாவில் அகல ரயில்பாதைக்கு மாற்றும் பணி மிகவும் விரைவுபடுத்தப்பட்டது என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 25 திட்டங்கள், புதிய தடங்கள், அகல ரயில் பாதையாக மாறுதல், இரட்டைப் பாதைகள் போடுதல் மற்றும் மின் மயமாக்குதல் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. இவை முழுமையாக நிறைவேற்றப்பட்டு முடியும்போது தமிழகத்திற்கு 2,000 கிலோ மீட்டர் அகல் ரயில்பாதை கிடைக்கும். மாநிலத்தில் அகல ரயில் பாதை அமைக்கும் பணி வேகப்படுத்தப் பட்டு இந்த 2007–2008 ஆம் ஆண்டிற்கு 350 கிலோ மீட்டர் நீள ரயில் பாதை, அகல ரயில் பாதையாக மாற்றியமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரயில்வே துறை இந்த நாட்டின் பெருமைக்குரியது. அது பொருளாதார நடவடிக்கைகளை நிறைவேற்றுவதுடன், இந்தியாவின் தேசிய ஒற்றுமைக்கும், ஒருங்கிணைப்பிற்கும் முக்கியமான இணைப்பாக விளங்குகிறது. இந்தியரயில்வே உலகத்திலேயே மிக அதிகமான தொழிலாளர்களுக்கு, ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளதாகவும், தினசரி ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பயணிக்கவும் பயன்பட்டு வருகிறது.

எனவே நான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடித்ததற்காக ரயில்வே அமைச்சர் திரு. லாலு பிரசாத் யாதவ் அவர்களையும் இந்திய ரயில்வே துறையையும் பாராட்டுகிறேன். இந்தத் திட்டம் அவ்வளவு இலகுவான திட்டமல்ல என்றும் ஏராளமான பாலங்களையும், புதிய லெவல் கிராசிங்குகளையும் அமைக்க வேண்டியிருந்தது என்றும், இந்தப் பகுதியின் பூகோள அமைப்புக்கும், தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ற வகையில் புதிய வடிவமைப்பு (டிசைன்) உருவாக்க வேண்டியிருந்தது என்றும் லாலு பிரசாத் அவர்கள் என்னிடம் கூறினார். எப்படிப்பட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் நமது ரயில்வே பொறியாளர்களும், ஊழியர்களும் மிகவும் பாராட்டத்தக்க வகையில் அவற்றை எதிர்கொண்டு கடமையை நிறைவேற்றி உள்ளனர் என்பதை நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்த பிறகு, இந்திய ரயில்வே துறை மிகப்பெருமளவில் மாற்றம் கண்டுள்ளது. பயணிகள் சேவைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ரயில்வே துறையின் நிலைமையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் ரயில்வே பட்ஜெட்களில் சாதாரண பயணிகளுக்கு எவ்விதமான சுமையும் சுமத்தப்படவில்லை. பயணிகளும், தொழிற் துறையும் இரயில்வே அளித்து வரும் வேலையில் மிகவும் திருப்தி அடைந்துள்ளன. இதற்காக லாலு பிரசாத் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்திய ரயில்வே துறைக்கு அவர் ஆற்றிவரும் தலைமை பாத்திரத்தை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும். ரயில்வே துறைக்கும், குறிப்பாக இந்த திட்டம் நிறைவேற்றப்படுவதற்கும் பங்களிப்பு ஆற்றிய ரயில்வே குடும்பத்தை நான் பாராட்டுகிறேன்.

நான் எப்போதும் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதிலும், அவரை சந்திப்பதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவர் மூத்த ராஜதந்திரியாகவும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பிரதான தூண்களில் ஒருவராகவும் விளங்குகிறார். அவரது தலைமையின் கீழ் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறி, நாட்டிலுள்ள இதர மாநிலங்களுக்கு வழிகாட்டி உதாரணமாகத் திகழ்கிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலுள்ள நம் அனைவருக்கும் தனித்தனியான அடையாளங்களும், முன்னுரிமைகளும் இருக்கலாம். இருப்பினும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதுதான் தமிழக மக்கள் அளித்த தீர்ப்பாகும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழக மக்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையை நிறைவேற்றுவோம். மீண்டும் உங்கள் அனைவருக்கும், இரயில்வேத் துறையினருக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ◆




# மத்திய அரசின் திட்டங்களுக்கு மாநில அரசு தொடர்ந்து ஒத்துழைப்பை நல்கி வருகின்றது

*மதுரையில் 12.8.2007 அன்று நடைபெற்ற*
*இராமேசுவரம்-மானாமதுரை அகல ரயில் பாதை தொடக்க விழாவில்*
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
**கலைஞர் மு. கருணாநிதி** *அவர்கள் ஆற்றிய உரை*

இன்று நடைபெறுகின்ற இந்த இனிய விழா நீண்ட காலமாக எதிர்பார்த்த அகல ரயில் பாதை அமைக்கப்பட்டதற்காக நாம் எடுக்கின்ற திருவிழாவாகும். இந்த விழா நடைபெறுகின்ற இந்த நேரத்தில் இதற்காகப் பாடுபட்ட அந்தத் துறையின் அமைச்சர் பெருமக்களும், குறிப்பாக ரயில்வே துறையின் அமைச்சர் அருமை நண்பர் லல்லு பிரசாத் அவர்களும், ரயில்வே துறையின் இணை அமைச்சர் அருமை நண்பர் வேலு அவர்களும் நம்முடைய பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்களாவார்கள்.

இந்த அகல ரயில் பாதையைப் பொறுத்த வரையில், இன்றைக்கு தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சியில் இது நடைபெறுகிறது என்றாலும்கூட, இதற்கான தொடக்கம் 1997ஆம் ஆண்டு – அப்போது தி.மு. கழக ஆட்சியில் தான் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது என்பதை நான் பெருமையோடு எண்ணிப் பார்க்கிறேன். அந்த அடிக்கல் நாட்டு விழா அப்படியே கிடப்பிலே போடப்பட்டு விடப்படாமல் இன்று திறப்பு விழாவாக மாறுவதற்கு நிதி ஒதுக்கீடு புரிந்திட உதவிய நம்முடைய நண்பர், நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களுக்கும், பணியாற்றி சிறப்பித்துள்ள நம்முடைய பகுதி மக்களின் அவாவை நிறைவு செய்துள்ள அமைச்சர் பெருமக்கள் லல்லு பிரசாத் அவர்களுக்கும், வேலு அவர்களுக்கும் நான்




நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**சமூக நல்லிணக்கம்**

இன்றைக்கு ஒரு பாலத்தின் திறப்பு விழா வெகு விமரிசையாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாலங்கள் ஊர்களை இணைப்பது மாத்திரமல்ல, சமுதாயங்களை இணைப்பதற்கும், இந்த நாட்டிலே தேவைப் படுகிறது. இனங்களை இணைப்பதற்கும் இந்த நாட்டிலே தேவைப்படுகிறது. அந்தப் பாலங்களையும் இணைக்கக் கூடிய அந்த வல்லமையும், திறமையும் வாய்ந்த ஒருவர் இன்றைக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக அமர்ந்திருக்கின்ற திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களாவார்கள். அவருடைய சிறப்புமிக்க தலைமையில், திறன்மிக்க தலைமையில் இந்தப் பாலங்கள் மாத்திரமல்ல, மானாமதுரை இராமேஸ்வரம் இடையிலே உள்ள பாலங்கள் மாத்திரமல்ல, பல மதங்களுக்கிடையே, சமூக நல்லிணக்கப் பாலங்களையும் அமைப்பதற்கான ஆர்வம், அமைப்பதற்கான திறமை நமக்கெல்லாம் நிச்சயம் உண்டு என்ற எதிர்பார்ப்பு என்னிடத்திலே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இதுபோன்ற நல்ல காரியங்கள் நாட்டிலே நடைபெறும்போது, ஆரம்பிக்கும்போதே அதற்கு இடையூறுகள் வருகின்றன. அதையும் தாண்டித் தான் எவ்வளவு தடங்கல் இருந்தாலும் அதை எதிர்த்து நிறைவேற்ற தடந்தோள் உண்டு நமக்கு என்ற அந்த உணர்வோடு தான் இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் பல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**உறவும் நட்பும்**

நம்முடைய நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல இந்தியாவினுடைய ஆட்சி மத்தியிலே நடைபெறுகின்ற ஆட்சி, தமிழகத்திலே நடைபெறுகின்ற இந்த மாநில ஆட்சி, இந்த இரண்டு ஆட்சிகளும் ஒன்றுக்கொன்று உறவோடு, ஒன்றுக்கொன்று நட்போடு, ஒன்றுக் கொன்று விட்டுக் கொடுக்கின்ற தன்மையோடு நடைபெறுகின்ற காரணத்தினால்தான் மக்கள் பல நன்மைகளை, சாதனைகளைப் பெற முடிகிறது.

என்னுடைய தலைவர், அறிஞர் அண்ணா அவர்கள், தி.மு. கழகத்தின் ஆட்சி

அமைந்தபோது அவர் ஒரு கடிதத்திலே குறிப்பிட்டார். அது பத்திரிகைகளிலே வெளிவந்த, வெளிப்படையான கடிதம். அதிலே சொன்னார். மத்திய அரசு, மாநில அரசு என்று இரண்டு அங்கங்கள் இருந்தாலும், சில பேர் அதை ஒரு தனி இலக்கணமாகக் கருதுகிறார்கள். மத்தியிலே அரசு என்றால், மாநில அரசோடு மோதிக் கொள்ள வேண்டும், அதைப் போல மாநில அரசு மத்திய அரசோடு மோதிக் கொள்ள வேண்டும் என்ற




அந்தக் கருத்துக்கு நான் எதிரானவன் என்று அண்ணா சொன்னார். ஒருவரையொருவர் அரவணைத்துக் கொண்டு, அந்த அரவணைப்பின் காரணமாக நாட்டு மக்கள் பல சாதனைகளைப் பெற நாட்டு மக்களுக்கு பல நன்மைகள் கிடைக்க இரு அரசுகளும் பாடுபட வேண்டும். அப்படி இப்போது மத்தியிலே ஆட்சி அமைந்த பிறகு மாநிலத்திலே உள்ள இந்த ஆட்சி கடைப்பிடித்த இணக்கமான கொள்கை முறையினால், ஏற்பட்டிருக்கின்ற நன்மைகளை ஒன்றிரண்டை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மக்களின் ஒத்துழைப்பு**

2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதே மதுரையில் 2-7-2005 அன்று அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது, சேது சமுத்திரத் திட்டத்திற்கு! அந்தத் திட்டம் வெகு விரைவிலே முடியக் கூடிய அளவுக்கு, வெற்றிகரமாக நடை போட்டுக் கொண்டிருக்கின்றது. அதைத் தடுக்க வேண்டுமென்று மீண்டும் அயோத்தியில் காட்டிய ராமரை, இங்கே காட்ட விரும்புகிறார்கள். ஆனால் அதையெல்லாம் மீறி பொதுமக்கள் எங்களுக்கும் ராமர் வேண்டியவர் தான், எங்களுக்கு ஒன்றும் ராமர் விரோதியல்ல, ராமர் எங்கள் பக்கமும் இருக்கிறார் என்று சாதாரண பாமர மக்கள் இன்றைக்கு சூளுரைத்துக் கொண்டு சேது சமுத்திரத் திட்டம் வெற்றி பெறுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை யெல்லாம் நல்கி வருகிறார்கள்.

அதைப் போலவே நீண்ட காலக் கனவு. நூறாண்டு காலக் கனவு. தமிழ் மொழி, செம்மொழியாக ஆக வேண்டும் என்ற கனவு. அந்தக் கனவை நிறைவேற்றிக் கொடுத்தவர்கள் நம்முடைய அம்மையார் அவர்களும், பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும், அர்ஜுன் சிங் அவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது.

## தமிழுக்குப் பெருமை

தமிழ் மொழிச் சான்றோர்களுக்கும் விருது வழங்க வேண்டுமென்று இரண்டு நாட்களுக்கு முன்புகூட, பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார் என்றால், அது தமிழ் மொழிக்கு இப்போது அண்மையிலே கிடைத்த மற்றொரு பெருமையாகும்.

## மத்திய அரசின் திட்டங்கள்

அதைப் போலவே மத்திய அரசினுடைய தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் ஒன்று 500 கோடி ரூபாய் திட்டத்தில் ஒரகடத்திலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.




ஆட்சி மத்தியிலே அமைந்தவுடன் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது – உங்களுக்கும் நினைவிருக்கும். பொதுவாக நெசவாளப் பெருமக்களுக்கு எல்லாம் நினைவிருக்கும். ஆட்சி அமைந்த மறுநாளே, பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – மத்தியிலேயிருந்து வந்த உத்தரவு, நெசவாளர்களுக்கு கடந்த பா.ஜ.க. ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த "சென்வாட்'' வரியை விலக்கியது தான். அந்த வரியை விலக்கிய காரணத்தால் நெசவாளர்கள் எந்த அளவிற்கு பெருமூச்சு விட்டு மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள் என்பதை நாடறியும், நல்லோர் அறிவார்கள்.

நோக்கியா செல்போன் தொழிற்சாலை தமிழகத்திலே தொடங்கப்பட்டிருக்கிறது.

தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் தமிழகத்தில், தாம்பரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தமிழகத்திலே கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்று மத்திய அரசினால் அறிவிக்கப் பட்டு விரைவிலே தொடங்கப்படுகின்ற நிலையிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது.

மகா பயங்கரமான பொடா சட்டத்தை ரத்து செய்த பெருமை இன்றைக்குள்ள மத்திய ஆட்சிக்குத் தான் உண்டு என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

சேலம் உருட்டாலையை சர்வதேச அளவிற்கு உயர்த்தி, புதிய குளிர் உருட்டாலை அமைத்திட 1,553 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மத்திய சர்க்காரினால்.

கத்திப்பாரா சாலை சந்திப்பு அருகே பிரமாண்டமான மேம்பாலப் பணி இப்போது மத்திய அரசின் உதவியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**"மத்தியிலே நடைபெறுகின்ற ஆட்சி, தமிழகத்திலே நடைபெறுகின்ற இந்த மாநில ஆட்சி, இந்த இரண்டு ஆட்சிகளும் ஒன்றுக்கொன்று உறவோடு, ஒன்றுக்கொன்று நட்போடு, ஒன்றுக் கொன்று விட்டுக் கொடுக்கின்ற தன்மையோடு நடைபெறுகின்ற காரணத்தினால்தான் மக்கள் பல நன்மைகளை, சாதனைகளைப் பெற முடிகிறது."**

2006–2007ஆம் ஆண்டில் மாத்திரம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்கள் பயன்பெறும் வகையில் பத்து புதிய ரயில்கள் இயக்கப்படுகின்றன.

வருமான வரித்துறை மூலம் பல்வேறு சலுகைகளை நம்முடைய நிதியமைச்சர் அவருடைய திறனால் இன்றைக்கு அளித் திருக்கிறார்.

பாரத் நிர்மாண் திட்டம் – இந்தியாவிலே மகத்தான மாபெரும் திட்டம் – ஒரு இலட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் – கிராமப்புற பொருளாதார வசதிகளைப் பெருக்குகின்ற திட்டம் இன்றைக்கு நடைமுறைப்படுத்துப்பட்டு வருகிறது. செல்போன் கட்டணம் குறைக்கப் பட்டுள்ளது.

மதம் மற்றும் சிறுபான்மைப் பிரிவினரின் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக பின்தங்கியோரின் நலத்திற்காக தேசிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

வேலைக்கு உணவு தேசியத் திட்டம் இந்தியாவிலே எல்லோராலும் வரவேற்கப் படுகின்ற திட்டமாக இன்றைக்கு இருக்கின்றது.

2,750 கோடி ரூபாயில் இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## இணக்கமான உறவு

இத்தனை திட்டங்களும் வெற்றிகரமாக அமைய மாநில அரசும் தன்னுடைய ஒத்துழைப்பை தொடர்ந்து நல்கி வருகின்றது. அதைப் போலவே மாநில அரசின் தேவைகளை உணர்ந்து நம்முடைய வேண்டுகோளை மதித்து மத்திய அரசு வழங்குகின்ற திட்டங்களிலே ஒன்று தான் இன்றையதினம் திறப்பு விழா நடத்தப்படுகின்ற இந்த இணைப்புப் பாலத்தினுடைய – அகல ரயில் பாதையினுடைய தொடக்க விழா என்பதை நான் அறிவித்து, இதுபோன்ற நல்ல விழாக்கள் நடைபெற இணக்கமான உறவை மத்திய, மாநில அரசுகளுக் கிடையே ஏற்படுத்த எல்லோரும் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரு நல்ல அரசு நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற அரசு, நீண்ட நாள் நடைபெற, நிலைத்து நடைபெற அனைவரும் ஒத்துழைத்தால்தான் ஜனநாயகத்தினுடைய உண்மையான த்த்துவத்தை அனுபவிக்க முடியும் என்பதையும் எடுத்துக் கூறி, இந்த இனிய விழாவிற்கு வருகை தந்துள்ள நம்முடைய அன்பிற்குரிய தலைவர், திருமதி சோனியா காந்தி அவர்களையும், மற்றும் மத்திய அமைச்சர் பெருமக்களையும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற முறையிலே, தமிழகத்தின் பிரதிநிதியாக நின்று, வரவேற்று, நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# ஏழை, எளியோர் வாழ்வில் இன்பம் காண அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்துக்கும் தோன்றாத் துணையாக இருந்திடுவீர்!

## மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு

நாள் : 30.7.2007



மாண்புமிகு
**தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்கள்
சென்னை தலைமைச் செயலகம்
நாமக்கல் கவிஞர் மாளிகையில்
30.7.2007 அன்று,
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மற்றும் காவல் துறை அதிகாரிகள்
மாநாட்டினைத் தொடங்கிவைத்து
ஆற்றிய தலைமையுரை :

**மா**ண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே! காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே!

அரசு உயர் அலுவலர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

காவல் துறை அலுவலர்களே! நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்.

சொன்னதைச் செய்திடும் நன்னெறி அரசாகத் திகழ்ந்து, மக்களின் முழு நம்பிக்கையையும் பெற்றுள்ள இந்த அரசு வகுத்தளித்திடும் திட்டங்களின் திடமான பலன்களையெல்லாம் சிந்தாமல் சிதறாமல் மக்களிடம் கொண்டு சேர்ப்பித்திடும் மகத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், சட்டம் ஒழுங்கைப் பேணிக்காத்து வரும் காவல் துறை அலுவலர்களையும் இன்று சந்தித்து உரையாடுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

11.7.2007 அன்று தொடங்கி 21.7.2007 வரை தலைமைச் செயலகத்தில் – அரசுத் துறையின் அமைச்சர், செயலாளர், இயக்குனர், துறையின் ஏனைய அதிகாரிகள் என்று ஒவ்வொரு துறையாக அழைத்து, நடைபெற்ற பணிகள், நடைபெற்று வரும் பணிகள், நடைபெற வேண்டிய பணிகள் ஆகியவை குறித்து விரிவாக நான் நடத்திய ஆய்வின் தொடர்ச்சியாக – இன்றைக்கு இந்த மாநாடு நடைபெறுகிறது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு மாதத்திலேயே, 24.6.2006 அன்று கடலோர மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களை அழைத்து கலந்துரை யாடினேன். அதனைத் தொடர்ந்து 18.9.2007 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அழைத்து தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகள், 2006–2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தொடர்ச்சியாக ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விவாதித்து நடவடிக்கைகளை மேற்கொண்டோம். ஏறத்தாழ 10 மாதங்களுக்குப் பிறகு, இன்றைக்கு மீண்டும் நாம் இங்கே கூடி, இனி நாம் நமது மாநிலத்து மக்களுக்கு ஆற்றிட வேண்டிய கடமைகள் குறித்துக் கலந்தா லோசித்து முடிவுகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

**“தேர்தல் அறிக்கையில் 177 வாக்குறுதிகளை தமிழக மக்களுக்கு வழங்கினோம். ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுவரை 107 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். மீதமுள்ள 70 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.”**

சென்ற முறை நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் கூட்டத்தில், தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை முதலாண்டிலேயே நிறைவேற்றி

விடுவோம் என்று நான் உறுதியாகச் சொன்னேன். அப்படிச் சொல்லும் போது உங்கள் அனைவரது உழைப்பையும், ஆற்றலையும், அனுபவத்தையும் நம்பித்தான் அப்படிச் சொல்லுகிறேன் என்றும் சொன்னேன்.

அன்று சொன்னதைப் போலவே உங்களின் ஒத்துழைப்போடு, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்; ஏழைக் குழந்தைகளுக்கான சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டம்; வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்; எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச அடுப்பு வழங்கும் திட்டம்; நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம்; அரசுக்குத் தேவையில்லாத புறம்போக்கு இடங்களில் வீடுகள் கட்டி வாழ்ந்து வருவோர்க்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்; வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்; அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; நோய் நொடிகள் வந்த பின் எதிர்த்துப் போராடி நலம் பெறுவதற்குப் பதிலாக வருமுன் காப்போம் திட்டம்; கர்ப்பிணிப் பெண்ணுக்கு 6,000 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம்; தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் என அடுக்கடுக்கான பல திட்டங்களை, 13.5.2006 அன்று பொறுப்பேற்றது முதல் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வாக்குறுதி களை நிறைவேற்றும் நமது வாய்மையை நிலைநாட்டி இருக்கிறோம்.

தேர்தல் அறிக்கையில் 177 வாக்குறுதிகளை தமிழக மக்களுக்கு வழங்கினோம். ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுவரை 107 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். மீதமுள்ள 70 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22.7.2006ஆம் நாளன்று வழங்கப்பட்ட 2006–2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மொத்தம் 185 அறிவிப்புகள் செய்யப்பட்டன. அவற்றில் 70 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 63 அறிவிப்புகளில் ஆணை வெளியிடப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளன. மீதமுள்ள 52 அறிவிப்புகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

23.3.2007ஆம் நாளன்று வழங்கப்பட்ட 2007–2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மொத்தம் 183 அறிவிப்புகள் செய்யப்பட்டன. இந்த நான்கு மாதங்க ளுக்குள் 38 அறிவிப்புகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. 52 அறிவிப்புகளின்மீது ஆணைகள் வெளியிடப்பட்டு, செயலாக் கத்தில் இருந்து வருகின்றன. மீதமுள்ள 93 அறிவிப்புகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சட்டமன்றத்திலே திட்டங்களைத் தீட்டி அவற்றைச் சட்டமாக்கினால் மட்டும் எல்லாம் முடிந்து விடாது. அரசு நலத்திட்டங்களை யெல்லாம் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டுமானால், அவற்றின் தன்மையை முழுமையாகப் புரிந்து கொண்டு உள்ளன்போடு, உற்சாகத்தோடு நீங்கள் ஆற்றுகின்ற பணிகளால்தான் அனைத்துப் பிரிவினரும் பயன்பெற முடியும். கடந்த ஓராண்டில் நீங்கள் ஆற்றிய அரிய பணிகளுக்கும், அளித்த ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவிப்பதுடன்; வரும் ஆண்டுகளில்

செயல்படுத்த வேண்டிய திட்டங்களை அதற்கென குறிப்பிடப் பட்டுள்ள கால கட்டங்களுக்கு முன்பாகவே நிறைவேற்றி, மக்கள் நலனில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு, நீங்கள் அனைவரும் நற்பெயரும் புகழும் ஈட்டி, இந்த அரசுக்கும் அதனைப் பெற்றுத் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**சட்டம் ஒழுங்கு**

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மனநிறைவு அளிப்பதாக உள்ளது. இதற்குப் பொறுப்பான காவல்துறை அலுவலர்களையும், மாவட்ட ஆட்சியர்களையும் பாராட்டிட விழைகின்றேன். தமிழகத்தை அமைதி தவழும் மாநிலமாகத் தொடர்ந்து பராமரிப்பது உங்கள் அனைவரின் தலையாய கடமை என்பதையும் சுட்டிக்காட்டிட விரும்புகின்றேன். சாதி, சமயம் மற்றும் இனம் சார்ந்த பூசல்களையும், கருத்து வேறுபாடுகளையும் நுண்ணறிவுப் பிரிவின் துணைகொண்டு கண்டு, முளையிலேயே கிள்ளி எறிந்து, முறையான சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம், வளர்ச்சிப் பணிகளில் நாம் நமது முழு கவனத்தையும் செலுத்திட முடியும்.

எத்தகைய இடர்பாடுகளையும் எதிர் கொள்ள எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டிய காவல்துறை, 'வருமுன் காக்கும்' நடவடிக்கைகளைத் தொய்வின்றி மேற்கொள்வதிலும் விழிப்புடன் செயல் படுதல் வேண்டும் என்பது என் அவா.

**15.2.2007 அன்று தொடங்கப்பட்ட 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான இரண்டாவது கட்ட விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. இது நவம்பர் 2007ல் முடிவடையும். 15.7.2007 அன்று வரை 14 இலட்சத்து 62 ஆயிரத்து 179 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகள் 2007 டிசம்பரில் தொடங்கும்.**

வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றம், பெருகியுள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றைத் தவறான வழிகளிலே பயன்படுத்தி குற்றவாளிகள் கொடுஞ் செயல்களை அரங்கேற்றி விடுகின்றனர். இத்தகைய அறிவியல் அறைகூவல்களையும் எதிர்கொண்டு, அமைதிக்கு ஊறு விளைவிப்பவர்களைச் சட்டத்தின் முன்னே நிறுத்தித் தண்டனை பெற்றுத் தர வேண்டியதும், ஏதுமறியா அப்பாவிப் பொதுமக்களை இரு கண்ணெனப் போற்றிப்




பாதுகாப்பதும், உங்கள் அனைவருக்கும் உள்ள தலையாய கடமையும், பொறுப்பும் ஆகும். அதற்குரிய வசதிகள் சாதனங்கள் அனைத்தையும் இந்த அரசு தயக்கமின்றிக் காவல்துறைக்கு வழங்கி வருகிறது; இனிமேலும் வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**காவல் கைதி மரணங்கள்**

சட்டத்தின் ஆட்சி என்ற சமதர்மக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தில், காவல் கைதி மரணம் என்பது மிகக் கொடுமையான குற்றம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்ததை நீங்கள் அறிவீர்கள். எனவே, மனிதநேயத்துடனும், பொறுப்பு மற்றும் பொறுமை உணர்ச்சியுடனும், எச்சரிக்கையோடும் செயல்பட்டு, தமிழகத்தில் காவல் கைதி மரணங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கிடவும், அதைத் தொடர்ந்து பேணிக் காத்திடவும் காவல் துறை அலுவலர்கள் அனைவரும் தத்தமது நடவடிக்கைகளை வகுத்துப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**அகதிகள் வருகை**

இலங்கையில் தொடர்ந்து நிலவிவரும் பதற்ற நிலை காரணமாக 12.1.2006 முதல் இதுவரை 19,520 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகம் வந்துள்ளனர். இவர்களையும் சேர்த்து தமிழகத்தில் உள்ள 117 இலங்கை அகதிகள் முகாம்களில் 19,478 குடும்பங்களைச் சேர்ந்த 74,072 இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வழங்கப்படும் பண உதவியை 1.8.2006 முதல் இரண்டு மடங்காக உயர்த்தி இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு அரசு வழங்கியுள்ள பல்வேறு நலத் திட்ட உதவிகள், முறையாகக் காலத்தில் சென்று சேருகின்றனவா என்பதை விழிப்புடன் கண்காணிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அகதி முகாம்களில் குடிநீர், மின்சாரம், மருத்துவ வசதி மற்றும் சுகாதார வசதிகளைக் குறைவறப் பராமரிக்கவும் கேட்டுக் கொள்கின்றேன்.

அகதிகளாக வரும் ஆதரவற்ற இலங்கைத் தமிழர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்ய நாம் விழையும் அதே நேரத்தில் அகதிகள் என்ற பெயரில் நச்சு மனம் கொண்ட சமூக விரோதிகள் எவரும் தமிழகத்தில் கால்பதித்து விடாமல் விழிப்புடன் செயலாற்றுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**முப்படை வீரர்கள் நலன்**

நமது நாட்டின் முப்படைகளுக்கும் அதிக அளவில் வீரர்களை அனுப்புவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. நமது முப்படை வீரர்கள் நாட்டின் எல்லையையும், இறையாண்மையையும் காத்திடத் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு மிகத் தொலைவில் கடுமையான சூழல்களில் பணியாற்றுவதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் தங்களது நிலம் மற்றும் வீடு தொடர்பான அல்லது பிற கோரிக்கை மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி விரைவு நடவடிக்கை மேற்கொண்டு அவற்றிற்கு உடனடித் தீர்வு கண்டு பதிலளித்திட மாவட்ட ஆட்சியர்களையும், காவல் துறை கண்காணிப்பாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**பொது விநியோகம்**

ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன், குடும்ப அட்டை பெற்றுள்ள எல்லா குடும்பத்தினருக்கும் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்ற விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தகுதியுள்ள அனைவருக்கும் முழுமையாகச் சென்று அடைகின்றதா என்பதையும், வழங்கப்படும் அரிசி தரமானதாக உள்ளதா என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்திட வேண்டும்.

புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைத் தவிர்ப்பதற்காகக் குடும்ப அட்டைகளின் விவரங்களைக் கணினியில் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அதனைக் கண்காணிக்க வேண்டும். மேலும், போலி குடும்ப அட்டைகளைக் களைவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திட வேண்டும்.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா போன்ற பொருட்கள் கட்டுப்படியாகக்கூடிய நியாயமான விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணித்து வெளிச்சந்தை விலைகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம்**

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளுக்கு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திட்டம் 15.9.2006 அன்று தொடங்கப்பட்டது.

15.2.2007 அன்று தொடங்கப்பட்ட 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான இரண்டாவது கட்ட விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. இது நவம்பர் 2007ல் முடிவடையும். 15.7.2007 அன்று வரை 14 இலட்சத்து 62 ஆயிரத்து 179 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக

30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகள் 2007 டிசம்பரில் தொடங்கும்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட இந்த அரசு உறுதி கொண்டுள்ளது. இந்தத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அடுத்த ஊருக்குக் கிடைத்துவிட்டது; இந்த ஊருக்கு இன்னும் கிடைக்கவில்லையே; அடுத்த தெருவில் உள்ள குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைத்து விட்டது; இந்த தெருவிலே உள்ள நமக்கு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கமோ ஐயப்பாடோ யாருக்கும் ஏற்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட ஆதங்கமும் ஐயப்பாடும் ஏற்படாத வண்ணம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறைப் படுத்திட வேண்டும். இந்த திட்டத்தில் வேண்டுமென்றே திசைதிருப்பும் நோக்கத்துடன் சங்கடங்களை உருவாக்கிட முனைவோரின் முயற்சிகளை முறித்துக் களைந்திட வேண்டும்.

**ஊராட்சி நிருவாகம்**

உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட வேண்டி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டம் 7.3.2007 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்று, அதில் நான் கலந்து கொண்டேன். இதன் தொடர்ச்சியாக, மண்டல வாரியாக, ஈரோடு, திருச்சி ஆகிய இடங்களில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் கருத்தரங்குகள் நடை பெற்றுள்ளன; திருவண்ணாமலை, விருதுநகர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளைப் பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் பொறுப்பு கிராம ஊராட்சிகளைச் சார்ந்தது. ஆனால், பல கிராம ஊராட்சிகள் போதிய நிதி வசதியின்றி அடைப்படை வசதிகளை நிறைவு செய்வதில் சிரமப்படுவதால், இந்நிலையினைச் சரிசெய்ய – இவ்வாண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு 47 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது; மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யப்படும் போது, பல சிறிய ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையினை மாற்ற, மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து அனைத்து ஊராட்சிகளுக்கும் 3 இலட்சம் ரூபாய் சமமாக வழங்கவும், மீதமுள்ள தொகையை மக்கள்தொகை அடிப்படையில் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது; மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண் டாவது நிதிக் குழு மானியம் முழுவதையும் (100%) கிராம ஊராட்சிகளுக்கு வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளின் ஆண்டு செலவினத்தில் 70 விழுக்காடு மின்சாரக் கட்டணத்திற்காகச் செலவழிக்கப்படுவதால் மின்வாரியம் தொடர்புடைய நீண்டகால பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் காணப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் : –



1. ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் 40 பைசாவிலிருந்து 3 ரூபாயாகக் குறைக்கப் பட்டுள்ளது;

2. மின் வாரியத்திற்கு ஊராட்சிகள் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராத வரி 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது;

3. இதில், 13.3.2007க்கு முந்தைய அபராத வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது;

4. மின் கட்டணம் செலுத்துவதற்கான கால அளவு 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது;

5. புதிய மின் கம்பங்கள் அமைப்பதில் அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்படுவதைத் தவிர்க்க, ஒரு மின் கம்பத்திற்கு நிலையான கட்டணமாக 9,500 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித் திட்டங்கள்**

கடந்த ஜனவரித் திங்களில் இந்த அரசால் தொடங்கி வைக்கப்பட்ட அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமே தற்போது தமிழகத்தில் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசுத் திட்டங்களில் மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு மற்றும் இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள், தெருவிளக்குகள், மீன்வளர்ப்புக் குளங்கள், கிராமச் சந்தைகள் போன்றவை அமைக்கப்படுகின்றன. 2006–2007ல் 2,540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 45 ஆயிரத்து 285 பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நடப்பாண்டில் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 40 ஆயிரத்து 514 பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்**

2006 – 2007 முதல் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, தற்போது தஞ்சாவூர், திருவாரூர், கரூர், திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2006 பிப்ரவரியில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், 13.5.2006 வரையில் வெறும் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் ஜனவரி 2007 – ல் 111 கோடி ரூபாய் அளவுக்கும், தற்போது 350 கோடி ரூபாய் அளவுக்கும் உயர்ந்துள்ளது. ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெறுவோரில் 85 சதவீதம் பேர் பெண்களே என்பது மகிழத்தக்க

செய்தியாகும். முன்பு, சராசரியாக 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரையே ஊதியம் பெற்ற இப்பெண்கள் தற்போது 80 ரூபாய் ஊதியம் பெறுகின்றனர். இதனால் ஊரகப் பகுதிகளில் பெண் தொழிலாளர்களின் ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதையும் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**விவசாயிகள் – விவசாயத் தொழிலாளர்கள் நலன்**

தமிழ்நாட்டிலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) என்ற சிறப்பானதொரு திட்டத்தின் கீழ்; 15.7.2007 வரை 1 கோடியே 52 இலட்சத்து 37 ஆயிரத்து 495 விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்காக 70 இலட்சத்து 33 ஆயிரத்து 789 குடும்பங்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 62 ஆயிரத்து 688 விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் 18 கோடியே 96 இலட்சத்து 84 ஆயிரத்து 375 ரூபாய் உதவித்தொகையாக வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள உறுப்பினர்களைக் கண்டறிந்து பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுத்து விரைவுபடுத்தி 31.8.2007 – க்குள் அப்பணியை முடிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைகளை உரிய நேரத்தில் அனைத்துப் பயனாளிகளுக்கும் வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

**வேளாண்மை**

2006– 2007 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் இதுவரை இல்லாத அளவிற்கு மிக அதிகமாக 96.24 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தில் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சாதகமாகப் பருவமழை பொழிந்து கொண்டுள்ளது; தென்மாவட்ட அணைகள் நிரம்பி வருகின்றன. மேட்டூர் அணையிலிருந்து 18.7.2007 அன்று பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. 56 விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பியுள்ள நிலையில், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வேளாண்மையில் குறைந்தபட்சம் 4 விழுக்காடு வளர்ச்சியை எட்டுவதற்கு உதவியாக தரமான விதைகள் மற்றும் உரம் போன்ற இடுபொருள்கள் போதுமான அளவில் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவன செய்திட வேண்டும். மேலும், விவசாயிகளுக்குத் தடங்கலின்றிப் பயிர்க் கடன்கள் கிடைப்பதை உறுதி செய்திட மாதமிருமுறை வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கப் படுவதையும் சீராய்வு செய்திட வேண்டும்.

மாநிலத்தில் நீர்ப் பற்றாக்குறையால் நுண்ணீர்ப் பாசனம் மற்றும் பாசன வழி உரமிடுதல் காலத்தின் கட்டாயமாகிறது. எனவே, நுண்ணீர்ப் பாசன முறை முனைப்புடன் செயல்படுத்தப்படுவது அவசியமாவதுடன், மாவட்ட ஆட்சியர்களால் தனிக்கவனம் செலுத்தப்பட்டு கண்காணிக் கப்படவும் வேண்டும்.

வேளாண்மையில், விற்பனை முறை என்பது ஒரு முக்கியமான அம்சமாகும். இதனைக் கருத்திற் கொண்டு ஏற்கெனவே

103 உழவர் சந்தைகள் அமைக்கப் பட்டுள்ளன. மேலும், 50 உழவர் சந்தைகளை இவ்வாண்டில் உருவாக்கிட அரசு முடிவு செய்துள்ளது. இந்த 50 உழவர் சந்தைகளுக்குப் பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்து, அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் இந்த 50 உழவர் சந்தைகளையும் வெற்றிகரமாகச் செயல்படுத்திட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைப்பு சாரா**
**தொழிலாளர் நல வாரியங்கள்**

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல் படுத்தும் பொருட்டு இந்த அரசு – ஏற்கெனவே செயல்பட்டு வந்த 2 வாரியங்களுடன் மேலும் 12 புதிய நலவாரியங்களை ஏற்படுத்தி உள்ளது. இந்த நலவாரியங்களில் பதிவு செய்து 60 வயது அடைந்த அமைப்பு சாரா தொழிலாளர் களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நல வாரியங்களின் மூலம் இதுவரை 1 இலட்சத்து 56 ஆயிரத்து 480 பேருக்கு, 38 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ள செய்தி எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

**பிற்படுத்தப்பட்டோர் நலன்**

சமூக, பொருளாதார மற்றும் கல்வி ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின நல வகுப்பினரின் முன்னேற்றத்தை உறுதி செய்திடவும், சமூக நீதியை நிலை நாட்டிடவும் அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

கிராமப்புறங்களில் வறிய நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் 2001 முதல் முந்தைய அரசினால் கைவிடப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இத்திட்டத்தினை





2006 – 2007 முதல் மீண்டும் செயல்படுத்தி வருகிறது. 2006–2007ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தினை மேலும் திறம்படச் செயல்படுத்திட வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

10 ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற திறன்மிக்க பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியரை ஊக்குவிக்க அவர்கள் விரும்பும் தலைசிறந்த பள்ளிகளில் மேற்கொண்டு பயில உதவித் தொகை வழங்கும் புதிய திட்டத்தை இவ்வரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. பிற்படுத்தப் பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைப்பதற்காக, 50 விழுக்காடு அதிக பட்சமாக 50 ஆயிரம் ரூபாய் வரையிலான அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிந்து சீரிய முறையில் இத்திட்டத்தைச் செயல்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்ட உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது. சிறுபான்மையினர் வேலைவாய்ப்பில் தகுதிபெறச் செய்திட 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் செயல் படுத்தப்படும். இது குறித்த விழிப்புணர்வை மாவட்டங்களில் ஏற்படுத்திச் சிறுபான்மையின இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையச் செய்யுமாறு மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நடப்பாண்டில் 21 ஆயிரம் சிறுபான்மை யினத்தவர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 30 கோடி ரூபாய் கடன் வழங்கவுள்ளது. இதேபோன்று, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 2007 – 2008 ஆம் ஆண்டில் 30 கோடி ரூபாய் கடனுதவி வழங்க விருக்கிறது. இக்கழகங்கள் அளிக்கும் நிதி உதவி தகுதி வாய்ந்தோர்க்குச் சென்றடைய வேண்டும். இத்திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

**ஆதிதிராவிடர் நலன்**

ஆதிதிராவிடர் மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு 2006–2007ஆம் ஆண்டில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன் பயனாக 2006–2007ல் கல்விப் பணிக்கு மட்டும் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 77 சதவிகிதம், அதாவது 437 கோடியே 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதன் பயனாக, 2006 – 2007–ஆம் கல்வியாண்டில் 10–ஆம் வகுப்பில் தேர்ச்சி விகிதம் 70 சதவிகிதத்திலிருந்து 77 சதவிகித மாகவும்; 12–ஆம் வகுப்பில் 54 சதவிகிதத்தில் இருந்து 65 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக விமானப் பணிப்பெண்கள் பயிற்சிக்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 100 ஆதிதிராவிடப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த நிதியாண்டில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன், மேலும் புதிய திட்டங்களான விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியர்க்குப் போர்வைகள் வழங்குதல், விடுதிகளில் 1,000 கூடுதல் இடங்கள் ஏற்படுத்துதல், விடுதிகளுக்குப் புதிதாகக் கட்டடங்கள் கட்டுதல், புதிதாக விடுதிகள் தொடங்குதல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், விடுதிகளுக்கு உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்குதல், உண்டி, உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் சமையலர்களுக்குக் குடியிருப்பு இல்லம் கட்டுதல் மற்றும் அப்பள்ளிகளில் பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்குதல் போன்ற பணிகளில் மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த ஈடுபாடு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமண நிதியுதவித் திட்டங்கள்**

வறுமைச் சூழ்நிலையிலுள்ள பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தங்கள் பெண்களின் திருமணத்திற்கென நிதியுதவி பெறவும், பெண்களின் கல்வி நிலையினை மேம்படுத்துவதற்காகவும் சமூகநலத் துறையால்,

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்;
2. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரின் மகள் திருமண நிதியுதவித் திட்டம்;
3. அன்னை தெரசா நினைவு ஆதரவற்றோர் திருமண நிதியுதவித் திட்டம்;
4. டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு ஏழை விதவை மறுமண நிதியுதவித் திட்டம்;
5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்;

ஆகிய ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 45 ஆயிரத்து 999 ஏழைப் பெண்களுக்கு, 69 கோடி ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு 50 ஆயிரம் ஏழைப் பெண்கள் பயன்பெறும் வகையில், 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு திருமண நிதி உதவிக்கான மற்ற நான்கு திட்டங்களின் மூலம் 4,587 பயனாளிகளுக்கு 6 கோடியே 32 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டது. இதுபோன்றே இவ்வாண்டும் இத்திருமண நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்திட 6 கோடியே 95 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து 16.7.2007 அன்று நான் ஆய்வு செய்தபோது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபாய் வீதம்

நிதியுதவி வழங்கப்படுவதைப் போல; திருமண நிதியுதவிக்கான அனைத்துத் திட்டங்களிலும் தற்போது வழங்கப்படும் நிதியுதவியான 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

மேலும், ஒவ்வொரு நிதியாண்டிலும் அனைத்துத் திருமண நிதியுதவித் திட்டங்களையும் தடையின்றிச் செயல்படுத்தி, நிதியுதவிகள் விரைவில் ஏழை மக்களைச் சென்றடைவதற்கு உதவியாகக் காலாண்டு நிதிக் கட்டுப்பாட்டு முறை நீக்கப்பட்டுள்ளதால், பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை முன்னுரிமையின் அடிப்படையில் ஆய்வு செய்து காலதாமதமின்றி நிதியுதவி வழங்கிடுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கல்வி இயக்கம்**

மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்குவதின் ஒரு கூறாகப் பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைக் கட்டடங்கள், பள்ளித் தொகுப்பு வள மையக் கட்டடங்கள் ஆகியவற்றைச் செய்து தருவதிலும் அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டம் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

மாவட்டங்களில் இத்திட்டத்தின் மூலம் நடைபெறும் கட்டுமானப் பணிகளை விரைந்து நிறைவேற்றிடவும், செயல்வழிக் கற்றல் முறையினைத் தொடக்கப் பள்ளிகளில் செம்மையாகச் செயல் படுத்திடவும் மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"Go to the people; Live among them; Learn from them; Love them; Serve them; Plan with them; Start with, what they know; Build on, what they have." அதாவது, "மக்களிடம் செல்; அவர்களுடன் சேர்ந்து வாழ்; அவர்களி டமிருந்து அறிந்துகொள்; அவர்களிடம் அன்பு செலுத்து; அவர்களுக்குத் தொண்டு செய்; அவர்களுடன் திட்டமிடு; அவர்களுக்கு எது தெரியுமோ, அதிலிருந்து தொடங்கு; அவர்கள் எதைக் கொண்டுள்ளார்களோ அதைப் பயன்படுத்தி அவர்கள் முன்னேறப் பாடுபடு'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய சீரிய வழியில் நடைபோட்டு வரும் இந்த அரசு, தான் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளையும், நிதிநிலை அறிக்கைகளிலே குறிப்பிட்ட அறிவிப்புகளையும் குறைவற நிறைவேற்றி, குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழ்ந்து வருகிறது.

ஏழை எளியோர் வாழ்வில் இன்பம் காணவும், நலிந்தோர் நலம் பெறவும், உடல் ஊனமுற்றோர் ஒளிபெறவும், மகளிர் மாண்புகள் பெருகிடவும், உழவர், உழைப்பாளர், பாட்டாளி மக்கள் உயர்ந்திடவும், நெசவாளர், மீனவர், கைவினைஞர் நிம்மதியாக வாழ்ந்திடவும் தொழில்வளம் தொடர்ந்து ஓங்கிடவும், மொழி, கலை, பண்பாடு முன்னிலை பெற்றிடவும், மாநிலம் முழுதும் மனிதநேயமும், அன்பும், அமைதியும் நிரம்பிடவும் அரசு அடுத்தடுத்து எடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்திற்கும் தோன்றாத் துணையாக இருந்திடுவீர்! ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தி அனுதினமும் பணிபுரிவீர்! என்று கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவரையும் வாழ்த்தி – எனது தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 31.7.2007 அன்று, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய உரை




இன்று காலை முதல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைகளின் செயலாளர்கள் குழுமியுள்ள இந்த மாமன்றத்தில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி, மக்கள் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி, சமுதாய நலன் விளைவிக்கத் தேவையான பிரச்சினைகளைப் பற்றி ஒரு அரசு நல்ல வழியில் மக்களை நடத்திச் செல்லவும், தானும் நல்வழியில் நடைபோடவும், என்னென்ன சாத்தியக் கூறுகள் உண்டு என்பதையெல்லாம் சிந்தித்து அவ்வழி நடப்பதற்கான பல கருத்துக்களை இங்கே எடுத்துப் பேசி, பல நல்ல முடிவுகளையும் கண்டிருக்கிறோம்.

நேற்றைய தினம் காவல் துறை அதிகாரிகள், நண்பர்கள், அலுவலர்களுடைய கருத்தரங்கு இங்கே நடைபெற்று, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு, அமைதி தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டு மென்பதையும், எள்ளளவும் அதற்குச் சேதாரம் வந்திடக்கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்பது பற்றியும் விவாதித்திருக்கிறோம்.

அது காவல் துறையினுடைய, அதிகாரிகள் தொடர்புடைய பிரச்சினை மாத்திரமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒத்துழைப்போடு நடைபெறவேண்டிய ஒன்று தான், சட்டம், ஒழுங்கு, அமைதியைப் பாதுகாக்கின்ற காரியமாகும். அந்த வகையில் நேற்றும் இன்றும் நடைபெற்றுள்ள இந்த விவாத அரங்கில் நாம் மகிழ்ச்சியடையத்தக்க வகையில் பல பிரச்சினைகளை நாம் விவாதித்திருக்கிறோம்.




தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் 13.5.2006 முதல் 30.6.2007 முடிய பெறப்பட்ட மனுக்களின் மீது சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் மூலம் பொதுமக்கள் பயனடைந்திட சீரிய பணியாற்றிய மூன்று சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. எஸ்.எஸ். ஜவஹர், இ.ஆ.ப., அவர்கள் முதல் பரிசை பெற்ற போது எடுத்த படம்.

என்னைப் பொறுத்தவரையில் நான் அரசு அதிகாரிகளை எந்த வகையிலே அணுகுகிறேன் என்றால், அவர்களை நான் முதல் அமைச்சர் அல்லது அதிகாரப் பொறுப்பிலே உள்ளவர்களுக்கெல்லாம் தலைவன், மற்றவர்கள் எனக்கு அடுத்தபடிதான், எனக்கு அடங்கி நடக்க வேண்டியவர்கள் என்ற அந்த அகந்தையோடு, அந்தப் பெருமிதத்தோடு நான் அணுகு வதில்லை. அனைவரையும் நண்பர்களாகப் பாவித்துத்தான் நான் அரசு அதிகாரிகளை அணுகுகின்றேன்.

அப்படி தோழமை உணர்வோடு, நட்பு மனப்பான்மையோடு நண்பர்களாக அவர்களைக் கருதுகின்ற காரணத்தால் சில நேரங்களிலே நண்பர்களையும் சினந்து கொள்வதுண்டு, நண்பர்களிடத்திலே உரிமையோடு சில கருத்துக்களை எடுத்துச் சொல்வதுமுண்டு, நண்பர்களாக இருந்து நாட்டைப் பரிபாலிக்கின்ற இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று ஒரு நல்ல முடிவெடுத்து தொண்டு செய்வதுமுண்டு.

அப்படிப்பட்ட தொண்டினை இப்போது ஐந்தாவது முறையாக நான் பொறுப்புக்கு வந்துள்ள இந்தக் கால கட்டத்தில் மாத்திரமல்ல, 1967ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நான் தமிழகத்தின் பொதுப்பணித் துறை, போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலந்தொட்டு, நான் உங்களோடு, அரசு அதிகாரிகளோடு, அலுவலாளர்களோடு நெருங்கிப் பழகவும், நட்பு கொண்டாடவும் அத்தகைய ஓர் உணர்வோடு உங்களோடு நான் உறவாடியிருக்கிறேன். இன்றைக்கும் அதிலே எந்தவிதமான சேதாரமும் கிடையாது, என்றைக்கும் அந்தச்




தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் 13.5.2006 முதல் 30.6.2007 முடிய பெறப்பட்ட மனுக்களின் மீது சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் மூலம் பொதுமக்கள் பயனடைந்திட சீரிய பணியாற்றிய மூன்று சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். கடலூர் மாவட்ட ஆட்சியர் திரு. இராஜேந்திரரட்னூ, இ.ஆ.ப., அவர்கள் இரண்டாவது பரிசைப் பெற்ற போது எடுத்த படம்.

சேதாரம் ஏற்படாது என்ற அந்த உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அதற்குப் பதிலாக எனக்குச் செய்ய வேண்டிய கைமாறு – எனக்கல்ல, என் பெயரால் இந்தச் சமுதாயத்திற்கு, இந்த நாட்டிற்கு, இந்த அரசின் சார்பாக ஆற்ற வேண்டிய பணி என்னவென்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நேற்றும் இன்றும் நாம் உரையாடிய, விவாதித்த இந்த விஷயங்கள் எல்லாம் நமக்காக மாத்திரமல்ல, நம்முடைய நாட்டு மக்களுக்கு, நம்மால் ஆளப்படுகின்ற மக்களுக்கு, நம்முடைய மாநில மக்களுக்குப் பயன்படக் கூடிய, அவர்களை வாழ வைக்கக் கூடிய பல காரியங்களை நாம் பேசியிருக்கிறோம்.

அவைகளையெல்லாம் நினைவுகூர்ந்து தொடர்ந்து நாம் இந்த மாநாட்டிலே பேசினோம், பேசியதில் என்னென்ன கருத்துக்களை இங்கே விதைத்தோமோ, எந்தெந்த கருத்துக்களை எடுத்து நட்டோமோ, எந்தெந்த கருத்துக்கள் இந்த மாமன்றத்தில் விழுதுகளாக இறங்கியிருக்கிறதோ, அவைகள் எல்லாம் நம்மால் மறந்து விடக் கூடியவைகள் அல்ல. அவைகள் விழுதுகளாக இறங்கியது இந்த மாமன்ற மண்டபத்திலே அல்ல, நம்முடைய நெஞ்சத்திலே அது பதிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, தொடர்ந்து அவ்வழியிலே நீங்கள் பணியாற்ற வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு அரசு என்னதான் நல்ல காரியங்களைச் செய்தாலும், மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைத் தொடர்ந்து அலுப்பின்றி, சலிப்பின்றி ஆற்றி வந்தாலுங்கூட, அது ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமைகளை, தப்பித் தவறி ஒன்றிரண்டில் தவறுமேயானால், நேரம் பார்த்து, சமயம் பார்த்து அதைக் கேலி செய்யவும், அதற்கு எதிர்க்குரல் கொடுக்கவும் ஜனநாயகத்தில் தங்களுக்கு இருக்கின்ற உரிமையைப் பயன்படுத்திக் கொள்ள அரசியல் கட்சிகள் தயாராக இருப்பார்கள்.

நான் அரசியல் கட்சிகள் என்று எந்தக் கட்சியையும் இங்கே குறிப்பிட்டுப் பேசி குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால் அவர்கள்




தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் 13.5.2006 முதல் 30.6.2007 முடிய பெறப்பட்ட மனுக்களின் மீது சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் மூலம் பொதுமக்கள் பயனடைந்திட சீரிய பணியாற்றிய மூன்று சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் மூன்றாவது பரிசைபெற்ற போது எடுத்த படம்.

ஜனநாயகக் கடமையை ஆற்றுகிறார்கள் என்ற அளவில் நான் அதை எதிர்பார்த்து, அவர்கள் என்ன சொல்லுகிறார்கள், எந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், எந்தக் கருத்தை அலட்சியப்படுத்த வேண்டும், எந்தக் கருத்துக்கு செவிசாய்க்கக் கூடாது என்பதைச் சிந்தித்து செயல்பட்டால் நாடு அமைதியான முறையில், மக்கள் அமைதியான முறையில் வாழ வழியுண்டு. அப்படி தொண்டாற்ற நீங்கள் எல்லாம் எனக்குத் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில மாதங்களில் எத்தனையோ பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டி வந்தது, நாம் வெளிநாடுகளைப் பார்க்கிறோம், பக்கத்து நாடுகளைப் பார்க்கிறோம். அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றங்களைக் காணுகிறோம். அந்த முற்போக்கை, அந்த முன்னேற்றத்தை, அந்த வாய்ப்பு வசதிகளை இங்கே தோற்றுவிக்க வேண்டுமென்று நாம் கருதி, செயல்பட்டால் உடனடியாக அதற்கு எத்தனையோ தடங்கல், இடையூறுகள் அதற்கு வருவதை நாம் காண்கிறோம்.

அதிலே அரசியல் முலாம் பூசப்பட்டு விடுகிற காரணத்தால் நேரடியாக அதை எதிர்க்கக்கூடிய வல்லமை இருந்தாலும், தேவையில்லை என்று அதை ஒதுக்கி வைத்து விட்டு, நாம் ஒதுங்கிப் போக நேரிடுகிறது. அப்படித்தான் உங்களுக்குத் தெரியும், மறந்திருக்க மாட்டீர்கள்,

சென்னைக்குப் பக்கத்தில் ஒரு துணை நகரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினோம். எல்லோருடைய கருத்தையும் கேட்டோம், ஆமாம் வேண்டுமென்று தான் எல்லோரும் சொன்னார்கள். ஏனென்றால் சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசல், மக்கள் படுகின்ற அவதி இதை பாதியளவாவது குறைப்பதற்கு அந்த துணை நகரம், சாட்டிலைட் டவுன் ஒன்று நிச்சயமாகத் தேவை என்பதை உணர்ந்து எல்லோரும் வரவேற்றார்கள். ஆனால் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. அந்த எதிர்ப்பு எங்கே போய் முடியும் என்று நான் எண்ணினேனோ அந்த இடத்திற்கு அந்த எதிர்ப்பின் உச்சக் கட்டம் வரத் தொடங்கியதும், இதற்கு மேல் இதை அனுமதிக்கக்கூடாது என்று என்னை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊனமுற்றோருக்கு உதவிகள் வழங்கியதில் சிறந்த மாவட்ட ஆட்சியராக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. சத்யபிரதா சாகு, இ.ஆ.ப., அவர்களுக்கு விருது வழங்கினார்.

நான் அந்தப் பக்கம் அனுமதித்துக் கொள்ளவில்லை.

மற்றவர்களைத் தடுப்பதை விட நாமே நம்மைத் தடுத்துக் கொண்டால், சுமூகமாக, அமைதியாக காரியங்கள் நடைபெறும் என்ற அந்த அளவிலேதான் நான் அந்த முடிவை எடுத்தேன்.

இப்படி சிலபல முற்போக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியவில்லை என்றாலும்கூட அடித்தட்டிலே இருக்கிற மக்களுடைய வாழ்விற்காக – ஏழையெளியவர்களுடைய வாழ்விற்காக – உழவர்களுடைய வாழ்விற்காக – குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுடைய வாழ்விற்காக நாம் நம்முடைய அரசின் சாதனைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், அதுவே நம்முடைய மனதிற்கு ஓர் ஆறுதலை, புராணிகர்கள் சொல்வார்களே, ஆத்ம திருப்தி என்று அதை அளிக்கும் என்ற அந்த எண்ணத்தோடு தான் நான் செயல்பட்டு வருகிறேன், இந்த அமைச்சரவை செயல்பட்டு வருகிறது, நீங்களும் அதை உணர்ந்து செயல்பட்டு வருகிறீர்கள் என்பதை நான் உணருகிறேன்.

நீங்கள் எனக்குத் தர வேண்டிய, இந்த அரசுக்குத் தரவேண்டிய ஆதரவு நேற்றும் இன்றும் பேசப்பட்ட இந்த பிரச்சினைகளை யெல்லாம் செயல் வடிவமாக காணுகின்ற நேரத்தில் உங்களுடைய முழு ஒத்துழைப்பு அந்தப் பிரச்சினைகளுக்கு கிடைத்தாக வேண்டும். குடிசைகளை கோபுரங்களாக ஆக்க வேண்டும் என்பதற்காக உங்களை யெல்லாம் நான் அழைக்கவில்லை. இருக்கிற குடிசைகளைக் காப்பாற்ற வேண்டும், அந்தக் குடிசைகளிலே இருக்கின்ற ஏழையெளியவர்கள் அழக்கூடாது, அவர்களுடைய வாழ்வை உத்தரவாதம் அளித்து நாம் ஒளி பெறச் செய்ய வேண்டும் என்ற அந்தக் காரியத்திற்கு நீங்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

நேற்றும் இன்றும் நாம் பல தலைப்புகளிலே மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருக்கிறோம். ஒவ்வொரு தலைப்பையும் மீண்டும் நான் நினைவுபடுத்த விரும்பவில்லை. ஏனென்றால் அதற்கே நாம் இரண்டு நாள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவைகளைப் பற்றிப் பேசிட இன்னும் நேரம்

போதாது. பேசியதையெல்லாம் செயலாக்க நீங்கள் ஊர் திரும்ப வேண்டும். நீங்கள் பணியாற்றுகின்ற மாவட்டங்களுக்கு செல்ல வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். சென்று பணியாற்றுங்கள் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்மை இந்த இடத்திலே உட்கார வைத்தவர்கள் யார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. சாதாரண, சாமான்ய மக்கள், ஏழையெளிய மக்கள், எளியோர் – அவர்களுக்கு நாம் பாடுபட வேண்டும். அவர்களுக்காகப் பாடுபடுகின்ற பிரதிநிதிகள் யாராக இருந்தாலும், அவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் தான் முதலமைச்சராக இருக்கிறோமே என்று நான் இன்னொருவரை அலட்சியப்படுத்தினால் அவர் நேரடியாகச் சொல்லாவிட்டாலும், இவரை முதலமைச்சராக ஆக்கினோமே என்று தவறாக எண்ணிக் கொண்டு போனால், அதன் விளைவு இப்போது தெரியாது, அது ஓட்டிலே தெரியும், வாக்குச் சாவடியிலே தெரியும் என்று நான் பயப்படவில்லை.

அவர்களுடைய வாக்கிலே தெரிந்தால் கூட, அது எனக்குப் பெரும் தீங்கு, எனக்குப் பெரும் சாபம், எனக்குப் பெரும் இழிவு என்று நான் கருதுவதைப் போல ஒவ்வொருவரும், உயர்ந்த நிலையிலே இருக்கின்ற ஒவ்வொருவரும் அவர் கலெக்டராக இருந்தாலும், தாசில்தாராக இருந்தாலும், கவர்னராக இருந்தாலும், அமைச்சரவையிலே ஒருவராக இருந்தாலும், அதிகாரிகளில் ஒருவராக இருந்தாலும், ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருந்தாலும், காவல் துறை நண்பராக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்கள் குடிமக்களை, குடிமக்களுடைய பிரதிநிதிகளை மரியாதை கொடுத்துப் பழகி அவர்களிடத்தில் மனம் கோணாமல் – நமக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம், அந்தப் பிரச்சினைகளையெல்லாம் மறைத்துக் கொண்டு, முகமலர்ச்சியோடு – நடிப்பு என்பார்களே – அந்த நடிப்பைக் கூடப் பயன்படுத்த வேண்டும்.

அப்போது தான் வருகிறவர், நம்மிடத்திலே உதவி கேட்க வருபவர்களுக்கு நாம் இல்லை என்று சொன்னால் கூட, உண்மையில் கொடுக்க முடியாது, செய்ய முடியாது என்ற நிலை இருந்தால்கூட, அதைக் கூட சிரித்துக் கொண்டே சொன்னால் அவர்களும் ஆறுதலாகச் செல்வார்கள். ஆகவே நம்முடைய பிரஜைகளை, நாட்டு மக்களை ஏழையெளியவர்களை, நமக்கு வாக்களித்த வர்களை, நம்மை இந்த இடத்திலே உட்கார வைத்தவர்களை, நமக்குப் பொறுப்பு வழங்கியவர்களை நாம் மதிக்க வேண்டும்.

அப்படி மதித்து நடந்து அவர்களுக்கும் நாம் இந்த நாட்டிலே ஆக வேண்டிய காரியங்களை, ஆகக் கூடிய காரியங்களாக இருந்தால் செய்து கொடுத்து, முடிந்தவரையிலே அவர்களோடு ஒத்துழைத்து நம்முடைய ஆட்சியைத் திறம்பட நடத்துவோம், சிறப்போடு நடத்துவோம், அப்படி நடத்துவதற்கு உங்களுடைய துணை தான் எனக்குத் தேவை. நான் என்னையே நம்பி இருப்பவன் அல்ல, நான் என்னையே நம்பியிருக்கிறேன் என்றால், உங்களை நம்பி இருப்பதால்தான் நான் என்னையே நம்பியிருக்கின்ற அந்தத் துணிவைப் பெற முடிகிறது என்பதை எடுத்துச் சொல்லி, நேற்றும் இன்றும் மிக அழகாக, மிக அறிவுப்பூர்வமாக, மிக ஆக்கப்பூர்வமாக நல்ல கருத்துக்களை எடுத்துரைத்த உங்களுக் கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்து தொடர்ந்து இத்தகைய பணிகளை ஆற்றிக் கொண்டேயிருப்போம் என்று கூறி, என்னுடைய உரையை இந்த அளவிலே நிறைவு செய்கிறேன்.

தொடர்ச்சி 45ஆம் பக்கம் பார்க்கவும்




# நதிகளை இணைத்து இந்தியாவின் ஒற்றுமையை பலப்படுத்துவோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் உரை

செம்பரம்பாக்கத்தில் நடைபெறுகின்ற இந்தத் தொடக்க விழா மனிதர்களுக்கு மிக மிக இன்றியமையாத ஒரு தேவையை நிறைவு செய்ய பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அரசு ஆற்ற வேண்டிய கடமைக்கு – அந்தக் கடமையின் வெற்றிக்கு நடத்துகின்ற வெற்றி விழாவாகும். ஏறத்தாழ 1996ஆம் ஆண்டு திட்டமிட்டு பணம் ஒதுக்கி, பிரான்ஸ் நாட்டோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, மத்திய அரசின் உதவிகளைப் பெற்று, தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு நம்மால் நம்முடைய ஆட்சியால் நிறைவேற்றி வைக்கப்பட்டு, பயன்பெறுகின்ற விழா நாளில் நாமெல்லாம் இங்கே வீற்றிருக்கிறோம். நம்முடைய மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்கிறோம்.



இங்கே தொகுப்புரையாற்றிய வர்ணனையாளர் ஒவ்வொருவரும் ஆற்றிய உரையைப் பற்றி மாத்திரமல்ல, ஆற்ற வேண்டிய உரைகளுக்கான குறிப்புக்களையும் தந்து உற்சாகப்படுத்தியதிலிருந்து அந்த உற்சாகம் கொஞ்சமும் குறையாமல் இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற இந்தப் பகுதி தமிழ்ப் பெருங்குடி மக்கள், ஏழையெளிய மக்கள், சாதாரண சாமான்ய பெருமக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இத்தகைய அரசு நலத்திட்டங்களால் அடைகின்ற பயனை எந்த அளவிற்கு விரும்புகிறார்கள், எந்த அளவிற்கு அந்தப் பயன்களோடு தங்களை ஒன்ற வைத்துக் கொள்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்ற நிகழ்ச்சியாக இது அமைந்திருக்கின்றது.

**நாங்கள் பெறும் இன்பம்**

நாங்கள் இந்த விழாவிற்கு வருகின்ற நேரத்தில் வழக்கம்போல் என்று சொன்னாலுங்கூட, வழக்கத்தையும் மீறிய அளவில் வழியெங்கும் தோரணங்கள், கொடிகள், வரவேற்புரைகள், வாழ்த்து முழக்கங்கள் என்ற அளவிலும் நீண்ட நெடிய சாலைகளில் எல்லாம் பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்கள், சாதாரண சாமான்ய மக்கள் எங்களை வரவேற்று மகிழ்ந்து இங்கே இந்த இடத்திற்கு வழியனுப்பி வைத்த நிகழ்ச்சிகளும் கண்கொள்ளா காட்சிகளாக அமைந்திருந்தன. இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், நான் இந்த வழியாக வந்தவன், அந்த வழியாக துரைமுருகனும் வந்திருக்கிறார். தம்பி ஸ்டாலினும் பலமுறை வந்திருக்கிறார், வந்தாலும்கூட இன்றைக்கு நாங்கள் புதிதாக ஒப்பனை செய்து கொண்டு வரவில்லை. அதே கருணாநிதி தான், அதே துரைமுருகன் தான், அதே வீராசாமிதான், அதே ஸ்டாலின் தான். ஆனால் பல மடங்கு மகிழ்ச்சியோடும், பூரிப்போடும் எங்களை வரவேற்றதற்கு என்ன காரணம்? நாங்கள் மாற்றம் பெற்று வரவில்லை, நாங்கள் வேடமணிந்து வரவில்லை, நாங்கள் புதிதாக ஒப்பனை செய்து கொண்டு வரவில்லை, என்றைக்கும் கட்டிக் கொண்டிருக்கின்ற வேட்டி, சட்டை துண்டு இவைகளோடு தான் வருகிறோம் என்றால், நீங்கள் இப்படி வரவேற்றதற்கு என்ன காரணம் என்றால், என்றைக்கும் இருப்பவன், இன்றைக்கும் நமக்காக இருக்கிறான் என்ற அந்த உணர்வோடுதான் நாங்களும் உங்களை அந்த அளவிற்கு நேசிப்பதற்கும், அந்த அளவிற்கு உங்களைப் பார்த்தவுடன் கண்கள் எல்லாம் பூரிப்பு பொங்க உங்களைக் காணுகிறோம் என்றால், அதற்குக் காரணமும் இதுதான். என்றைக்கும் பார்க்கின்ற அதே முகத்தைப் பார்க்கிறோம். இருந்தாலும் இன்றைக்கு அந்த முகத்திலே எவ்வளவு பரவசம்? அவர்களுடைய இல்லத்திலே, சொந்தத்திலே எவ்வளவு துக்கங்கள் இருந்தாலும், எவ்வளவு சோதனைகள் இருந்தாலும், அதையெல்லாம் ஒருகணம் மறந்து விட்டு எங்களைச்



சந்திப்பதில், எங்களைக் காண்பதில் நீங்கள் அடைகின்ற பூரிப்பு அதே நிலையிலே எவ்வளவுதான் அன்பு துயரங்கள் இருந்தாலும், துன்பச் சுமைகள் மூட்டை மூட்டையாக எங்கள் தலையிலே, முதுகிலே, தோளிலே இருந்தாலும், அவைகளையெல்லாம் இறக்கி வைத்ததைப் போன்றதொரு இன்பத்தை உங்களைக் காணுகின்ற நேரத்திலே நாங்கள் பெறுகிறோம் என்றால், நாமெல்லாம் ஒரு குலம், தமிழ்க் குலம், இந்தத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்களின் குலம். எனவே, இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்காக நடைபெறுகின்ற காரியங்கள்–தமிழக அரசால் நடத்தப்படுகின்ற காரியங்கள் தமிழ்நாட்டிலே உள்ள ஏழையெளிய சாதாரண சாமானிய மக்களுக்காக நடத்தப்படுகின்ற காரியங்கள் – அண்ணா வழியில் தந்தை பெரியார் வழியில் சமத்துவ நிலையிலே ஆற்றப்படுகின்ற திட்டங்கள் இவைகள் நிறைவேறும்போது நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியோடு நீங்கள் எங்களைப் பார்ப்பதும், நாங்கள் உங்களைப் பார்ப்பதும் இயல்பான ஒன்றுதான்.

**உயிர்ப் பிரச்சினை**

அதைத்தான் இங்கே தம்பி ஸ்டாலின் பேசும்போது சொன்னார். அவருடைய ஆற்றொழுக்கு நடையில் அவரையும் அறியாமல் ஒரு தவறு வந்தது என்றாலும், அந்தத் தவறையும் நான் சரிப்படுத்தி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர் சொன்னார் – பகீரதன் காவேரியைக் கொண்டு வருவதற்காகவும், இருந்தான் என்று – இல்லை, காவேரியை அல்ல. அவன் கொண்டு வர விரும்பியது கங்கையை – கங்கையைத் தான் கொண்டு வந்தான். அவன் ஏன் காவேரியைக் கொண்டு வரவில்லை என்றால், கங்கையைக் கூட கொண்டு வர முடியும். காவேரியைக் கொண்டு வர முடியாது என்ற காரணத்தினால் அவன் அந்தக் காலத்திலேயே எதைப் பிடிக்கலாம் என்று காவேரியா? கங்கையா? என்று அலசிப் பார்த்து காவேரி என்றால் அதற்கு நடுவர் மன்றம் அல்லவா வைக்கப்பட வேண்டும்? நம்முடைய சடாமுடியில் கொண்டுவரப்படக்கூடிய காரியமல்ல அது. ஆகவே நடுவர் மன்றம் கொண்டு வர வேண்டும் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றத்திற்கெல்லாம் போக வேண்டும், "ஏ அப்பா! நம்மால் ஆகாது. அந்த வேலையென்று" பகீரதனே பதைபதைத்துப் போய் கங்கையோடு விட்டுவிட்டான். எனவே, அப்படி தண்ணீர் தேவை மக்களுக்கு அவ்வளவு ஆழமாக, அவ்வளவு அவசியமாக உயிர்ப்பிரச்சினையாக இன்றல்ல, என்றைக்கும் இருந்திருக்கிறது.

ஒரு சேரமன்னன், கணைக்கால் இரும்பொறை சிறைச்சாலையிலே கேட்டவுடன் தண்ணீர் கொடுக்கவில்லை என்பதற்காக தன்னுடைய மானத்தை நிலைநாட்டினான் மரணத்தைத் தழுவி என்று இலக்கியத்திலே படித்திருக்கிறோம். அதைப்போலவேதான் தண்ணீருக்காக தவம் இருந்தவர்கள், தண்ணீருக்காக தங்களுடைய குழந்தை குட்டிகளையெல்லாம் கூட விற்று விட்டவர்கள், தாங்கள் தங்களுடைய தாகத்தை போக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக படாதபாடுபட்ட

ஏழையெளியவர்கள், பட்டினியால் சுருண்டாலும் பரவாயில்லை ஒரு சொட்டு தண்ணீர் கிடைக்காதா என்று எண்ணியவர்கள் எல்லாம் கூட எத்தனையோ நாடுகளில் இன்றைக்கும் தொலைக்காட்சிகளிலே காணுகிறோம், படக்காட்சிகளிலே காணுகிறோம், பத்திரிகைகளிலே படங்களாகக் காணுகிறோம், தவித்த வாய்க்கு ஒரு சொட்டு தண்ணீர் கிடைக்காமல் எத்தனை வதங்கிய இலைகளைப் போல கசங்கிய மலர்களைப் போல, குழந்தை குட்டிகளோடு பல நாடுகளில் அதிலும் குறிப்பாக கறுப்பர்கள் வாழும் நாடுகளில் மக்கள் அந்த தண்ணீர்ப் பஞ்சத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் காணுகிறோம்.

**நீர்வளம் நிலவளம்**

அவைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய தமிழகம் – நம்முடைய தாய் நாடு – நாம் பிறந்த இந்த மண் எவ்வளவோ பரவாயில்லை என்றாலும்கூட, ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே நாமும் அந்தத் தண்ணீர் தேவைக்காக கண்ணீர் விட வேண்டியவர் களாகத்தான் இருக்கிறோம். அதை மறந்து விட முடியாது. நீங்கள் பழைய புத்தகங்களை எடுத்துப் படித்தால், அது நாவல் ஆனாலும், சரித்திரம் ஆனாலும், நவீன கதைகள் ஆனாலும் அவைகளில் முதலில் ஊர் வர்ணனை வரும். அப்போது நீர் வளம், நில வளம் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் – நெல்லை மாவட்டத்தில் – பாண்டிய மண்டலத்தில் என்று ஊர்ச்சிறப்பைச் சொல்லும்போது எடுத்தவுடன் நிலவளத்தைக் கூடச் சொல்லாமல், நீர்வளம், நிலவளம் நிறைந்த அந்த ஊரில் இன்னின்னார் வாழ்ந்தார்கள், இன்னார் பிறந்தார், அவருக்குப் பிள்ளையாக இன்னார் பிறந்தார் என்றெல்லாம் சரித்திரத்தை ஆரம்பிப்பார்கள்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நீர்வளம் அவ்வளவு முக்கியமானது. நீர்வளம் இல்லாமல் வாழ முடியாது. நீர், நிலம் என்றுதான் ஆரம்பமாகும். "நீரின்றி அமையாது உலகு" என்றான் வள்ளுவன். நிலமின்றி அமையாது உலகு என்று சொல்லவில்லை, சொல்ல மாட்டான். ஏனென்றால் நிலம் இருப்பது தானே உலகு என்கிற போது, அவன் நிலமின்றி அமையாது உலகு என்று சொல்லமாட்டான். நிலம் இருக்கலாம், காடு இருக்கலாம், மரங்கள் இருக்கலாம், அவ்வளவு இருந்தாலுங்கூட நீர் இருந்தால் தான் உலகம் என்று அமையும் என்று சொன்னான். அதைப்போல நாடு என்று அமைய, நகரம் என்று அமைய, ஊர் என்று அமைய, வீடு என்று அமைய, வீடுகளில் மனிதர்கள் என்று அமைய மக்கள் ஜீவராசிகள் என்று அமைய வேண்டுமேயானால் நீர் மிகமிகத் தேவை. அந்த நீர்த் தேவையை நிறைவு செய்கிற அரசாக எந்தவொரு அரசும் முழு மனநிறைவோடு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இன்னும் அமையவில்லை.

ஒவ்வொரு மாநிலத்தையும் நீங்கள் பார்த்தால் ஏதோ ஒரு நதி நீர்ப் பிரச்சினை அவர்களுக்கு. தமிழ்நாட்டில் மூன்று பக்கங்களிலிருந்தும் நதி நீர்ப் பிரச்சினை. கர்நாடகத் திலேயிருந்து நதிநீர்ப் பிரச்சினை, கேரளத்திலேயிருந்து நதி நீர்ப் பிரச்சினை. ஆந்திராவிலேயிருந்து நதிநீர்ப் பிரச்சினை. இப்படி மூன்று புறங்களிலிருந்தும் நதிநீர்ப் பிரச்சினை. இவர்கள் எல்லாம் கொடுக்கவில்லையே, தரவில்லையே என்று பிரச்சினை. இன்னொரு பக்கத்திலே புதுச்சேரி மாநிலம் இருக்கிறது. அங்கேயும் நதி நீர்ப் பிரச்சினை தான். அவர்கள் நீங்கள் எங்களுக்குக் கொடுக்கவில்லையே என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். இப்படி நம்மைச் சுற்றியிருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் இந்தத் தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு ஏராளமாக தண்ணீர் இருக்கிறது. எங்கே இருக்கிறது ? கொடுக்க முடியாது என்று சொல்பவர்களிடம் இருக்கிறது. தருவதற்கு தயக்கம் காட்டுகிறவர்களிடம் இருக்கிறது. ஏன் தர வேண்டும் என்று கேள்வி கேட்பவர்களிடம் இருக்கிறது. இந்தியா ஒரே நாடு என்று சொல்லி விட்டு, அதை, அந்த நிலையை உறுதிப் படுத்தாதவர்களின் நெஞ்சங்களிலே அந்தத் தடை இருக்கிறது. அந்தத் தடை நீக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்கு இந்தப் பகுதியிலே – சென்னை மாநகரத்திற்காக தண்ணீர் கிடைத்த ஒரு மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தண்ணீரைத் தேக்கி வைத்து அனுப்புகிற – ஒரு தூய்மைப்படுத்தும் நிலையத்தை உருவாக்கியதற்காக மகிழ்ச்சி அடைந்து கொண்டி ருக்கிறோம். அதே நேரத்தில் இந்தியா முழுமையும் இருக்கின்ற இந்தச் சங்கடத்தை நாம் உணர்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த நிலைமையிலே அதை உணர்ந்து பார்த்தால்தான் அதற்கொரு முடிவு வந்தால் தான் ஒரு இடத்திலே தண்ணீர் தேங்கியிருக்கிறது, இன்னொரு இடத்திலே தண்ணீர் இல்லாமல், நம்முடைய கண்களிலே

கண்ணீர் தேங்கவுமான நிலை மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் – கர்நாடகத்திலே மிதமிஞ்சிய தண்ணீர் வருகிறது என்றால் மழை பொழிந்து வருகிறது என்றால், துரைமுருகன் முகத்திலே மகிழ்ச்சியைக் காண முடிகிறது. காரணம் விவசாயிகளின் முகத்திலே மகிழ்ச்சி ஏற்படும் என்று அவர் கருதுகிறார், நான் கருதுகிறேன், எங்களுடைய நெஞ்சம் எல்லாம் பூரிக்கிறது. ஆனால் மழை வந்து கர்நாடகத்திலிருந்து தண்ணீர் வராவிட்டால் வறண்டு கிடக்கின்ற நிலத்தைப்போல எங்கள் உள்ளமும் வறண்டு போகிறது. அங்கே மழை வந்து, மழைபொழிந்து வெள்ளக்காடாக ஆகின்ற நேரத்தில் அந்த வெள்ளக்காடு இங்கேவந்து, நம்மை வாழ வைக்கின்ற வெள்ளக்காடாக இல்லாமல், நம்முடைய வாழ்வை வதைக்கின்ற – நம்மைக் கெடுக்கின்ற – இங்கே வெள்ளம் பெருக்கெடுத்தது, ஆறு உடைந்தது, கரைகள் எல்லாம் உடைந்தன, நான்கு பேர் தொலைந்தார்கள், நாற்பது பேர் மாண்டார்கள் என்று அந்தச் செய்திகளைச் சொல்கின்ற வெள்ளம் தான், அப்படி வெள்ளக் காடாக வருகிறது. சீராக வர வேண்டிய தண்ணீர் வந்து எல்லோரும் சிறப்பாக வாழ ஒரு சமத்துவ நிலையை இங்கே, இந்தியாவிலே உற்பத்தியாகின்ற கங்கை ஆனாலும், காவேரி ஆனாலும், தாமிரபரணி ஆனாலும், மகாநதி ஆனாலும் எந்த நதியானாலும் அந்த நதிகளால் நாம் பெற முடியவில்லை என்றால், அதற்குக் காரணம் அதைப் பெறக் கூடிய மதியை நாம் பெறவில்லை. மதியைப் பெறுகிறோமோ இல்லையோ, அந்த விதியை நாம் இந்த நாட்டு மக்களுக்கு ஒழுங்காக எழுதுகின்ற நிலையைப் பெறவில்லை. அந்த நிலையை நாம் பெற்றாக வேண்டும். அந்த நிலையைப் பெற்றால்தான் தண்ணீர் எப்படி உற்பத்தியான பொருள்கள் எல்லாம் அனைவருக்கும் சொந்தம். பொது உடைமை, என்று கூறுகிறோமோ அதே நேரத்திலே இயற்கை அளிக்கின்ற வரம் தண்ணீர் அதுவும் எல்லோருக்கும் பொது என்கிற அந்த நிலையை நாம் உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால் தான் – அதைத் தான் நதி நீர் இணைப்பு என்று சொல்கிறோம். அந்த நதிநீர் இணைப்பு ஏற்பட்டு விட்டால் இங்கே ஒரு விழா கொண்டாட வேண்டிய அவசியமே நமக்கு இருக்காது.

நாம் தூய்மைப்படுத்தப்பட்ட தண்ணீரை சென்னைக்கு அனுப்புவதையே ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடுகிறோம் என்றால், தண்ணீரை இங்கே பார்ப்பதே – தண்ணீரை தூய்மையாகப் பார்ப்பதே இவ்வளவு பெரிய காரியமாக இருக்கிறது. தண்ணீர் கிடைப்பதே அவ்வளவு பெரிய காரியமாக ஆகிவிட்டது. அப்படியாகிவிட்ட காரணத்தினாலே தான், அது அனைவருக்கும் கிடைக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று, ஆன்றோர், சான்றோர், அறிஞர் பெருமக்கள், விஞ்ஞானிகள், பொறியாளர்கள், அத்தனை பேரும் இன்றைக்குச் சிந்திக்கின்றார்கள். ஆனால் அதற்கு வழிவிடாமல் தடுப்பது ஒன்றே ஒன்றுதான் அதற்குப் பெயர்தான் அரசியல்.

விஞ்ஞானம் நதிகள் பொதுவாக வேண்டுமென்று சொல்கிறது. பொறியாளர் களுடைய துறை நதிகள் பொதுவாக வேண்டுமென்று சொல்கிறது. அப்போதுதான் நாடு வாழும், நலிவு தீரும் என்று சொல்கிறது. ஆனால் இயற்கை வழங்குகிறது எல்லோருக்கும் பொதுவாக ஆனால் அப்படி வழங்கப்படுகின்ற தண்ணீரை அனுப்ப முடியாது என்று மறுக்கிறது அரசியல். அந்த அரசியல் ஒரு மனிதனுடைய உள்ளத்தின் காரணமாக மறுக்கப்படுகிறதா என்றால் அவன் மறுக்கக் கூடிய அளவிற்கு அங்கே இருக்கும் அரசியல் சூழ்நிலை அவனைத் தள்ளுகிறது. அவன் கூட நினைப்பான். பாவம் தமிழ்நாட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்களே, அவர்களுக்குத் தண்ணீரைத் தந்து உதவுவோம் என்று பக்கத்து மாநிலத்திலே இருக்கிற ஒருவன் – அந்தப் பக்கத்து மாநிலத்தின் அதிபர் எண்ணலாம், கருதலாம், நல்ல உள்ளத்தோடு சிந்திக்கலாம். வழங்கலாம் என்று வழங்க முன் வரலாம். ஆனால் அவனை அங்கே தடுப்பது அவனை சூழ்ந்திருக்கிற அரசியல். அந்த அரசியலைப் புனிதப்படுத்துவோம், அந்த அரசியலுக்கு இரக்கக் குணத்தை உண்டாக்குவோம். நாம் முதலில் மனிதனுடைய இரக்க குணத்தை வளர்ப்போம் என்பதை விட அரசியலுக்கு இரக்கக் குணத்தை உருவாக்குவோம். இந்த இரக்கக் குணத்தை அரசியலுக்கு உருவாக்கினால்தான் பக்கத்து மாநிலங்களிலே வாழ்கின்ற மனிதர்கள் வாழ முடியும். எல்லோரும் வாழ முடியும்.

இந்தியா ஒன்று என்று சொல்கிறோமே, அது நன்று என்று பக்கத்திலே உள்ள நாட்டுக்காரன் சொல்ல வேண்டுமேயானால், இன்று இந்தியா ஒன்று என்று சொன்னாலுங்கூட, அது என்று என்று கேட்கக் கூடிய நிலையிலே தான் நாம்



இருக்கிறோம். ஆகவே இந்தியா ஒன்று. ஒருமைப்பாடு, ஒற்றுமை – இந்தியா வலிமை பெற்ற நாடு என்கின்ற இந்த கனவுகள் எல்லாம் நனவுகளாக ஆக வேண்டுமேயானால், நான் இன்றைய தினம் செம்பரப்பாக்கம் குடிநீருக்காக மாத்திரம் மகிழ்ச்சியடைய முடியாது. செம்பரம்பாக்கத்திலே உட்கார்ந்து கொண்டு நான் கருதுகிறேன், செந்தமிழ் நாடு முழுவதையும் எண்ணிப் பார்க்கிறேன். சிந்து நதியும், மற்ற நதிகளும் பாய்ந்திட்ட இந்தியா முழுமையையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். அப்படி எண்ணிப் பார்க்கும் போது, நான் மாத்திரமல்ல, நானும் சுதர்சனமும், யசோதா அம்மையாரும், கழக நண்பர்களும் மற்றக் கட்சி நண்பர்களும், எல்லா கட்சி நண்பர்களும், கட்சி மாச்சரியங்களை யெல்லாம் விட்டு விட்டு, நாமனைவரும் தமிழர்கள், திராவிடர்கள் என்ற நிலையையும் கூடக் கடந்து, இந்தியர்கள் – அந்த நிலையையும் கடந்து மனிதர்கள் – அந்த மனிதனின் தாகத்தைத் தீர்க்க – மனிதனின் தேவைகளை நிறைவு செய்ய – தண்ணீரை முதலில் பொதுவுடைமையாக்குவோம். தண்ணீரை பொதுவுடைமையாக்கி நதி நீரை இணைத்து இந்தியாவின் ஒற்றுமையைப் பலப்படுத்த இது போன்ற நிகழ்ச்சிகளில் நாம் சபதம் எடுத்துக் கொள்வோம் என்று சொல்லாவிட்டாலும் கூட இத்தகைய நிகழ்ச்சிகளில் அதை ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். ஞாபகத்திலேயே அந்த நிகழ்ச்சிகள் இருக்குமேயானால், அது சபதமாக மாறும். அந்தச் சபதம் நிறைவேறும். அது நிறைவேறினால் தான் இந்தியா வாழும் என்று கூறி, அப்படிப்பட்ட இந்தியா வாழ்கின்ற நிலைமையை உருவாக்க இந்த விழா பயன்படட்டும் என்று எடுத்துரைத்து, விழாவிலே கலந்து கொண்டுள்ள என்னுடைய அத்தனை தோழர்களுக்கும், இந்த வட்டாரத்துப் பொது மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

செம்பரம்பாக்கத்தில் 19.7.2007 அன்று
சென்னைக்கு நாள்தோறும் 530 மில்லியன் லிட்டர்
குடிநீர் வழங்கும் சுத்திகரிப்பு நிலையத்தை தொடங்கிவைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
புதுதில்லியில் 25.7.2007 அன்று
மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 25.7.2007 அன்று, புதுதில்லியில், மாண்புமிகு நாடாளுமன்ற பேரவைத் தலைவர் திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவித்தார்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.7.2007 அன்று, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உதவி பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கினார்கள்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.7.2007 அன்று ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரத்தில் நடைபெற்ற விழாவில், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மூன்றாவது கட்டமாக அரசின் உதவித் தொகைகளை வழங்கினார். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் உடன் உள்ளார்.

36ஆம் பக்கத் தொடர்ச்சி...

மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்கள் தலைமையில்
30.7.2007, 31.7.2007 ஆகிய
இரு நாட்கள்
சென்னை –
தலைமைச் செயலகம் –
நாமக்கல் கவிஞர் மாளிகையில்
உள்ள மாநாட்டுக் கூடத்தில்
நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மற்றும் காவல் துறை அதிகாரிகள்
மாநாட்டில்;
கலந்தாலோசனைக்குப் பின்னர்
மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்
பின்வருமாறு:–



1. அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டம் குறித்தும் நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசு சார்பில் பண்படுத்தப்பட்ட நிலம் வழங்கும் திட்டம் குறித்தும் இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற கொள்கையை நீண்ட காலமாக ஏற்று நடைமுறைப்படுத்தி வருகின்ற இந்த அரசு 1996ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பையேற்றவுடன் இந்தத் திட்டத்தை சிறப்புத் திட்டமாக எடுத்து நிறைவேற்ற வேண்டுமென்று முடிவெடுத்து, அதன்படி வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கத் தொடங்கியது.

அதன் பயனாக 1996–1997ஆம் ஆண்டு 1,10,343 பேருக்கும், 1997–98 இல் 2,50,811 பேருக்கும், 1998–99 இல் 2,27,414 பேருக்கும், 1999–2000 இல் 1,98,052 பேருக்கும், 2000–2001இல் 1,63,829 பேருக்கும், 2001–2002 இல் 25,628 பேருக்கும், 2002–03 இல் 70,197 பேருக்கும், 2003–04 இல் 88,148 பேருக்கும், 2004–05 இல் 94,456 பேருக்கும், 2005–06 இல் 82,196 பேருக்கும், 2006–2007 இல் 76,622 பேருக்கும் என மொத்தம் 14 இலட்சத்து 87 ஆயிரத்து 696 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு இதை மேலும் ஒரு சிறப்புத் திட்டமாக கடைப்பிடித்து ஏழையெளியோருக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்பதை குறிக்கோளாக எடுத்துக் கொண்டு 2008ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிவடைவதற்குள் 3 இலட்சம் பேருக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

2. நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தின்

கீழ் இதுவரை 91,576 குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 1 ஆயிரத்து 623 ஏக்கர் நிலம் வழங்கிட அரும்பாடுபட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் பாராட்டுத் தெரிவித்தார். மேலும் நிலம் வழங்கும்போது நிலத்தை வரையறுத்து எல்லைக்கல் பதித்து வழங்கிட வேண்டுமென்றும்; நிலத்தை வழங்காமல் பட்டா மட்டுமே வழங்கப்பட்டது என்ற புகார் எழாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும்; இந்தத் திட்டத்தை மேலும் சிறப்பாக நடத்துவதற்கு என்னென்ன வழிமுறைகளை பின்பற்றலாம் என்பது குறித்து முடிவு செய்து நடைமுறைப் படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுள் சிலரைக் கொண்ட குழு ஒன்றினை உடனடியாக அமைத்து, அவர்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்று, இத்திட்டத்தை மேலும் செம்மையாக நடத்துவதென்றும் இன்றையக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது.

3. தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் 45 சதவீதத்தில் இருந்து 38 சதவீதமாக தற்போது குறைந்திருக்கிறதெனினும், இன்னும் பெருமளவுக்கு குறைப்பதற்கான முயற்சிகளில் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபடுவதென்றும்; "காவல்துறையின் நண்பர்கள்" அமைப்பின் செயல்பாடுகளை இன்னும் செம்மையாக மேம்படுத்துவது என்றும்; காவல் நிலையத்திற்கு வரும் புகார்களை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தும், அவற்றைப் பின்பற்றாத காவல் துறை அதிகாரிகள் மீதும், காவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுப்பதென்றும்; பொது விநியோக முறையில் விற்கப்படுகின்ற அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களை கடத்துவதைத் தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளையும், தமிழகத்தின் எல்லையோர மாவட்டங்களில் கண்காணிப்பையும் இன்னும் தீவிரப் படுத்துவதென்றும்; தீவிரவாதப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ள பின்தங்கிய மற்றும் மலைப்புறங்களில் வறுமை ஒழிப்பு நடவடிக்கையாக சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை காவல்துறையுடன் இணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிறைவேற்றுவ தென்றும்; காவல்துறை நேரடியாகத் தலையிடக்கூடாத உரிமையியல் பிரச்சினை களில் தலையிடும் சூழ்நிலைகளைக் கட்டாயம் களைந்திட வேண்டுமென்றும் முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிருவாகத் துறையைப் பொறுத்தவரை, 1996–2001 கால கட்டத்தில் ஊராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட "நமக்கு நாமே திட்டம்" மிகுந்த பயன்களை அளித்து, நாட்டு வளர்ச்சியில் நமது பங்குப்பணியைச் செலுத்துகிறோம் என்ற நல்லுணர்வினை பொதுமக்களிடையே ஏற்படுத்தி பெருத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. எனினும், கடந்தகால ஆட்சியில் இந்த திட்டம் கைவிடப்பட்டது. தற்போது, அந்தத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவது பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்வதென்றும்;

தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் மத்திய, மாநில திட்டங்களிலேயே மிகப் பெரிய திட்டமான "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட''த்தின் செயல்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் நேரில் கண்டறிந்து ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதென்றும்; ஒரு கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றும்போது, மத்திய, மாநில அரசுகளின் அனைத்துத் திட்டங்களின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து நிறைவேற்ற வேண்டுமென்றும்;

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ள 10 மாவட்டங்களில், வேலை

செய்வோருக்கு வழங்கப்படும் வாராந்திர ஊதியத்தை வெளிப்படையாகவும், நியாயமாகவும் வழங்குவதை உறுதி செய்திடும் பொருட்டு ஊதியம் வழங்குவதற்கென வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளை நிர்ணயம் செய்து, அதற்கென அமைக்கப்பட்டுள்ள "ஊதியம் வழங்கும் குழுவினரின்" முன்னிலையில் வழங்குவதென்றும்; இத்திட்டத்தின்கீழ் எக்காரணம் கொண்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாதென்றும்; இந்த 10 மாவட்டங்களிலும் உள்ள அனைத்துக் கிராமங்களும் பயன்பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்;

சுயஉதவிக் குழுக்களில் ஒருவரே பல குழுக்களிலும் உறுப்பினராக இருப்பதைக் கண்காணித்துத் தடுக்க வேண்டுமென்றும்; சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களில் 45 சதவீதத்தினர் எழுத்தறிவு இல்லாத வர்களாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு 'அனைவருக்கும் கல்வித் திட்டத்தில்' தொடக்கநிலைக் கல்வி அறிவைப் புகட்டுவதென்றும்; சுயஉதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் புதிய திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதென்றும்; முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

5. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுத்தவரை கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை முறையாகப் பராமரித்து வருவதற்கான நடவடிக்கை களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும்; பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு தனி மின்பாதை அமைக்கும் பணியினை விரைவுபடுத்தி நிறைவேற்றுவதென்றும்; சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்று நீரைத் தேவையான அளவுக்குத் திறந்து விடுவது பற்றி ஆலோசனை செய்வதென்றும்; இந்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பேரூராட்சியிலும் பணிகளை எடுத்துச் செய்யும்பொழுது மத்திய, மாநில அரசுகளின் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து நிறைவேற்ற வேண்டு மென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

6. இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதற்கென அறிவிக்கப்பட்ட நாளில் தாமதமின்றி தவறாமல் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பதற்காக கால தாமதம் செய்யக் கூடாதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

7. அனைவருக்கும் கல்வி இயக்கம் எனும் திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் கட்டட வசதிகளை ஏற்படுத்துவதற்கென 330 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டிருப்பதால், கட்டுமானப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதென முடிவு செய்யப்பட்டது.

8. எரிசக்தித் துறையைப் பொறுத்தவரையில் தெருவிளக்குகள், குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதென்றும்; மின்சாரத் துணை நிலையங்கள் அமைக்க அரசு நிலங்களைத் தேர்வு செய்யும்போது, அந்த நிலங்களில் முன்நுழைவுக்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்குவதைப் பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

9. மினி பஸ் திட்டத்தின் கீழ் மாவட்டங்களுக்கு 7,000 சிற்றுந்து அனுமதிச் சீட்டுகள் (permits) வழங்கப்பட்டிருந்தும், இதுவரை 3,965 அனுமதிச் சீட்டுகளே மாவட்ட ஆட்சித் தலைவர்களால்

வழங்கப்பட்டிருப்பதால், எஞ்சியுள்ளவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தக்க வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழித்தடங்களைக் கண்டறிந்து, அனுமதிச் சீட்டுக்களை வழங்கிட வேண்டுமென்று 14.8.2007க்குள் முடிவு செய்யப்பட்டது.

10. 2008ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ஏழை எளியோர்க்கு வழங்கப்பட வேண்டிய 159 இலட்சம் சேலைகள், 161 இலட்சம் வேட்டிகள் அனைத்தையும், பொங்கலுக்கு முன்னதாகவே வழங்கக்கூடிய வகையில், 15.12.2007க்குள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைத்திட வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது.

11. படித்து, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்குவதோடு நில்லாமல், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன் பயிற்சிகள் அளிப்பதற்கான ஏற்பாடுகளிலும், திறன் பெற்றோர் உரிய வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஈடுபாடு காட்ட வேண்டுமென்றும்; 8 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்பற்றோர் நிதியுதவி பெறும் 50 ஆயிரம் இளைஞர்களுக்கான திறன் பயிற்சித் திட்டம், 25 கோடி ரூபாய் செலவில் ஆதிதிராவிட இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், 10 கோடி ரூபாய் செலவில் 13 ஆயிரம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இளைஞர்களுக்கான தொழில் பயிற்சித் திட்டம், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சிறுபான்மையின இளைஞர்களுக்கும், பெண்களுக்குமான வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம், 4 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 5 ஆயிரம் இளைஞர்களுக்கான தொழில் பயிற்சித் திட்டம் ஆகிய தமிழக அரசின் திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

12. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவ மனைகளில், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைகளை உடனடியாகப் பெற இயலாத நிலை இருப்பதானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தது. இக்குறையைக் களையும் நோக்கத்தோடு, தனியார் மருத்துவமனை களோடு இணைந்து, இத்தகைய அறுவை சிகிச்சைகளை உடனடியாக மேற்கொள் வதற்கான பின்வரும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். அத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் இதய அறுவை சிகிச்சைக்காகப் பதிவு செய்து காத்திருப்போரில் ஆண்டுதோறும் ரூ. 50,000/–க்கும் குறைவான வருவாய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தை களுக்குத் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்வதற்காக, தமிழ்நாடு நோயாளர் நிதி உதவி அமைப்பின் மூலமாக பின்வருமாறு நிதி உதவி வழங்கப்படும்.

| | |
|---|---|
| மூடிய இதய அறுவை சிகிச்சை | .. ரூ. 10,000 |
| சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சை | .. ரூ. 30,000 |
| கடினமான திறந்த இதய அறுவை சிகிச்சை | .. ரூ. 70,000 |

இத்திட்டத்தில் பங்கு பெற வசதியுள்ள தனியார் மருத்துவமனைகள் முன்வரலாம். இம்மருத்துவமனைகளை அரசின் வல்லுநர் குழு ஆய்ந்து, தகுதியுள்ள மருத்துவமனைகளைத் தெரிவு செய்யும் என்றும் இன்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

❖ ❖ ❖




# தமிழகத்தையே பூங்காவாக மாற்றுவோம்!

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி**
அவர்கள் 10.08.2007 அன்று,
சென்னையில்
ரூ.100 கோடி மதிப்பிலான
"அடையாறு பூங்கா"விற்கு
அடிக்கல் நாட்டி
ஆற்றிய உரை

அடையாறு பூங்கா அடிக்கல் நாட்டு விழா மிக எழுச்சியோடு, நாமெல்லாம் மகிழத்தக்க வகையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பூங்காவை இன்று தொடங்கி வைக்கப் போகிறோம் என்று முன்கூட்டியே விளம்பரங்கள் வந்தபோது எனக்கொரு ஐயப்பாடு, அச்சமும்கூட; முன்கூட்டி அறிவிப்பதால் "தடை" ஏதும் ஏற்படுமோ என்று! நல்லவேளையாக தடை ஏதும் ஏற்படவில்லை, இனிமேலும் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

ஏனென்றால் இந்த ஆட்சி அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஈடுபாடு கொண்டிருக்கின்ற மாநகராட்சி எந்தவொரு நல்ல திட்டத்தை மக்களுக்காக நிறைவேற்ற முன் வந்தாலும் அந்தத் திட்டத்தைக் குறை சொல்லி, வம்புக்கு இழுத்து, வழக்காடி ஏதோ ஒரு வகையில் நிறுத்தி வைப்பது என்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள் இன்றைக்கு நாட்டிலே சில பேர் இருக்கிறார்கள்.

சில பேர் தான் இருக்கிறார்கள், பெரும்பாலோர் அப்படி இல்லை என்ற காரணத்தினால் தான் நாம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறோம், அவர்கள் எதிர்தரப்பிலே இருக்கிறார்கள். அந்த சிலர் பலராக ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம் வருமா வராதா என்பதை கடந்த கால நிகழ்ச்சிகளை தயவுசெய்து எண்ணிப்பார்த்து, தமிழ்ப்பெருமக்கள், சென்னை வாழ் மக்கள் புரிந்துகொள்ள முடியும் என்றே தான் நான் கருதுகிறேன்.

**வெளிநாடுகளிலே கண்ட காட்சி விரைவிலே வரவேண்டும்**

இந்த விழாவில் உரையாற்றிய நம்முடைய கவிஞர் தம்பி வைரமுத்து அவர்களும் மற்றும் தம்பி துரைமுருகன்



அவர்களும், மேயர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்களும், மற்றவர்களும் இந்தத் திட்டத்தால், இந்தத் தொடக்க விழாவினால், இதனுடைய விரிவாக்கத்தினால் சென்னை மக்கள் எந்த அளவிற்கு எதிர்காலத்திலே மகிழ்ச்சி அடைவார்கள், விறுவிறுப்போடு தங்கள் பணிகளை ஆற்றுவதற்கு இந்தத் திட்டம் கைகொடுக்கும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

எனக்கு இந்தப் பூங்காவைத் தொடங்கி வைக்கின்ற நேரத்தில் எனக்குள்ள ஆசையெல்லாம் நான் வெளிநாடுகளிலே கண்ட காட்சிகள், சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை, நெல்லை போன்ற நகரங்களிலே விரைவிலே வர வேண்டுமே என்பதுதான். ஏனென்றால் வெளிநாடுகளுக்கு நாம் சென்றால் அங்கெல்லாம் அந்த நாட்டின் தலைநகரத்தை, பெருநகரத்தை அழகுபடுத்துவதற்கென்று அங்குள்ள பூமி பயன்படுகிறதோ இல்லையோ, நிலம் பயன்படுகிறதோ இல்லையோ, மரம் செடி கொடிகள் பயன்படுகிறதோ இல்லையோ, தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கின்ற ஆறுகள் அந்த நகரங்களின் நடுவிலே பாய்ந்து சென்று அந்த நகரத்திற்கு ஒரு புது எழிலை உருவாக்கிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

அப்படிப்பட்ட நதிகளிலே படகுகள் செல்லவும், அந்தப் படகுகளில் வாலிபர்களும், மாணவர்களும், தாய்மார்களும், ஆடவர்களும் பயணம் செய்வதும் பார்ப்பதற்கே ரம்மியமான காட்சியாக இருக்கும். அப்படிப்பட்ட காட்சிகள் சென்னை போன்ற நகரங்களில், தமிழகத்திலே உள்ள பெருநகரங்களில் எப்போது வரும், வரும் என்று நான் வெளிநாடு சென்று திரும்புகிற நேரத்தில் எல்லாம் எண்ணி ஏங்கியதுண்டு. அப்படிப்பட்ட ஏக்கத்தைப் போக்குகின்ற நாளாக, தொடக்க நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது என்றே நான் நம்புகிறேன். அதற்கேற்றாற்போல், இந்த விழாவை அமைத்துள்ள நம்முடைய நண்பர்கள், அரசுப் பொறுப்பிலே அல்லது நகராட்சி மன்றப் பொறுப்பிலோ இருப்பவர்கள் அரும்பாடுபட்டு இந்த விழாவை நடத்துகிறார்கள் என்பதும், இதற்காக எத்தனை நாள் அவர்கள் தங்களுடைய உழைப்பைச் செலவிட்டி ருக்கிறார்கள் என்பதும் எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

இங்கே மாலையிலே நாங்கள் வந்த போது ஒரு வண்டியிலே அமர வைத்து, இங்கேயிருக்கின்ற காட்சிகளையெல்லாம் தம்பி ஸ்டாலின் எனக்குக் காட்டினார். என்னென்ன இங்கே வரப் போகிறது என்றெல்லாம் சொன்னார். என்னென்ன அமைப்புகள் இங்கே இடம் பெற இருக்கின்றன என்பவைகளையும் என்னிடம் சொன்னார். அவைகளையெல்லாம் நான் மிகுந்த உற்சாகத்தோடு கேட்டேன், உணர்ச்சியோடு கேட்டேன்.

**கூவம் மணக்கப் போகின்ற நாள்...?**

இருந்தாலும் என்னுடைய உள்ளத்திலே ஒரு தாக்கம்; இவ்வளவு அழகும் எழிலும், இவ்வளவு அருமையான நிழலும், அங்கே உட்கார்ந்து உரையாடுகின்ற தம்பதியர்களுடைய காட்சிகளும் நிறைந்த இடமாக இந்தப் பூங்கா அமையப் போகிறது என்றாலும் கூட இந்த நகரத்தில் தானே கூவமும் இருக்கிறது?

அந்தக் கூவம் அகலப் போகிற நாள், அந்தக் கூவம் அகற்றப்படுகின்ற நாள், அந்தக் கூவம் மணக்கப் போகிற நாள் என்றுவரும் ? என்கிற கேள்வி என் உள்ளத்திலே எழாமல் இல்லை. அந்த நாள் விரைவிலே வருவதற்கு நாம் பாடுபட்டாக வேண்டும். நாம் இது போன்ற உள்ளம் உடையவர்களை ஆதரிக்கின்ற மனப்பக்குவத்தை பெற்றாக வேண்டும்.



ஒரு மாநிலம் இந்தியாவிலே, தமிழ்நாடு இன்றைக்கு தொழில் வளம் மிக்க மாநிலமாக வளர்ந்து வருகிறது. இதைப் போல பல மாநிலங்கள் இந்தியத் திருநாட்டில் இருக்கின்றன. தொழில் வளம் மிக்க மாநிலங்களாக அவை வளருகின்றன என்றாலுங்கூட, தமிழ்நாடு அவைகளையெல்லாம் முந்திக் கொண்டு இன்றைக்கு வளருகின்ற நிலையை நானல்ல, இங்கேயுள்ள மக்கள் அல்ல, வெளிமாநிலங்களிலே உள்ள ஏடுகள் பாராட்டுகின்றன, பத்திரிகை நண்பர்கள் புகழுகிறார்கள், காணும்போதெல்லாம் தங்கள் களிப்பை வெளிப்படுத்துகிறார்கள். அத்தகைய ஒரு நல்ல சூழ்நிலை இன்றைக்கு இந்தியாவிலே தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கின்றது.

### தடைகளைத் தகர்த்து திட்டம் நிறைவேற்றம்

இந்தியாவிலே மத்தியிலே உள்ள தொழில்கள் தமிழகத்தை என்றைக்கும் மிகச் சாதாரணமாக, விரைவாக, எளிதாக எட்டிப் பார்ப்பதில்லை என்ற நிலையை மாற்றியுள்ள பெருமை நமக்குண்டு. அந்தப் பெருமைக்கு அடையாளம்தான், தமிழகத்திலே இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற, தம்பி டி.ஆர். பாலு முன்னின்று நடத்தி வருகின்ற சேது சமுத்திரத் திட்டம் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். அந்தத் திட்டத்திற்கும் எதிர்ப்பு இல்லாமல் இல்லை. அந்தத் திட்டமும் கூடாது என்று கூறுகின்றவர்கள் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறார்கள். அதையும் மீறி, அந்தத் தடைகளையும் தகர்த்துத்தான் ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது.

திட்டங்கள் நிறைவேறும்போதெல்லாம், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான இடையூறுகளும் கூடவே முளைப்பதை நாம் காணுகிறோம். அந்த இடையூறுகளை நம்முடைய ஒற்றுமையால் நம்முடைய மக்களுடைய ஆதரவால் போக்கி, இடையூறு இல்லாத நிலையை உருவாக்கி இங்கே தமிழ்நாட்டை எதிர்பார்க்கின்ற வளம் உள்ள பூமியாக ஆக்கிட வேண்டும். ஒரு சென்னையை மாத்திரமல்ல, ஒருசில நகரங்களை மாத்திரமல்ல, சில கிராமங்களை மாத்திரமல்ல, சென்னையை தலைநகராகக் கொண்டு தமிழகத்தையே வளம் உள்ள பூமியாக, தொழில் வளம் மிக்க பூமியாக, உலகத்தொடர்புடைய ஒரு மாநிலமாக வாணிபத்தில், ஏனைய நாகரிகத்தைப் பரப்புவதில் தமிழகம் ஒரு காலத்தில் முன் நின்றது, இன்றைக்கு அந்த நிலையை மீண்டும் அடைகின்ற வகையிலே படிப்படியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வளர்ச்சியைத் தடுப்பதற்காகவும் பலர் இருக்கிறார்கள். நான் அதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச விரும்பவில்லை.

அவர்கள் தமிழகத்திற்கு எதுவும் செய்ய முடியாவிட்டாலும், செய்பவர்களையாவது தடுக்காமல் இருந்தால் வேகவேகமாக, விரைவாக இன்னும் விறுவிறுப்பாக இந்தக் காரியங்களைச் செய்ய முடியும். நகராட்சியிலே, மாநகராட்சியிலே ஒரு பூங்கா இன்றைக்கு அமைக்கிறோம் என்றால், நான் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன், இதற்கும் கூட தடை வாங்குவதற்கான முயற்சி நடைபெற்றது என்று. நடைபெறாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

நாம் நம்முடைய ஆட்சியிலோ, நகராட்சியிலோ, மாநகராட்சியிலோ ஒரு நற்காரியத்தைச் செய்யத் தொடங்கும்போது அதற்கு எந்தவிதமான தடங்கலும்



இல்லாமல் நிறைவேறினால் நாமே ஆச்சரியப்படுவோம். என்ன ஒரு தடங்கலும் இல்லையா ? என்று ஆச்சரியப்படுவோம்.

"தடைக்கற்கள் உண்டென்றால் தடந்தோள் உண்டு" என்று பாரதிதாசன் சொன்னாரே, அந்தப் பாட்டைப் பாடநேரமே கிடைக்காதா என்கிற ஏக்கத்தோடுதான் நாம் சில சாதனைகளைச் செய்ய விரும்புகிறோம். அப்படி சாதனைகளைச் செய்யும்போது என்னைப் பொறுத்தவரையிலே, அதிலே எந்த விதமான தடையும் இல்லாமல், கண்ணாடி பலகையிலே விளக்கெண்ணெயை விட்டு, அதிலே நகர்ந்துபோவதைப் போன்ற அவ்வளவு எளிமையாக காரியம் நடைபெறாமல், கல்லும் மண்ணும் பாறையும், பாதையிலே இருந்து அதிலே பயணம் நடத்துவதைத் தான் நான் விரும்புகிறவன். அப்படிப்பட்ட பயணம்தான் எனக்குப் பிடிக்கும்.

**நான் கற்ற பாடம்**

எதிர்ப்புகள் நிறைய இருக்க வேண்டும், இந்தப் பக்கத்திலே கட்டாரி, இன்னொரு பக்கத்திலே ஈட்டி என்றெல்லாம் பகைவர்களால் எதிர்ப்புகள் வாரி இறைக்கப்பட வேண்டும் அதிலே நான் என்னுடைய படையைத் திரட்டிக் கொண்டு அந்தப் பாதையிலே பயணம் செய்து எடுத்த காரியத்தை முடித்தால்தான் எனக்கு நிம்மதி ஏற்படும், அதுதான் நான் கற்றப் பாடம், நான் பயின்ற பாசறை எனக்குத் தந்துள்ள பக்குவம். அப்படிப்பட்ட பக்குவத்திற்கு இன்றையதினம் என்னை ஆட்படுத்திய தலைவர்களையெல்லாம் இந்த நேரத்தில் நான் தாள்பணிந்து வணங்குகிறேன், அவர்களுக்கெல்லாம் நான் இதயமார நன்றி கூறுகிறேன்.

**எளிய மக்களை உயர்த்தும் காரியம்**

அத்தகைய ஒரு நிலையில் என்னைப் பெற்றெடுத்து உங்கள் மத்தியிலே விட்டிருக்கின்ற என்னுடைய பெற்றோர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் காரியத்தைச் செய்வதற்கு என்னை சூழ்ந்திருக்கின்ற தோழர்களுக்கெல்லாம், தம்பிமார்களுக்கெல்லாம் துணையாக இருக்கின்ற தொண்டர்களுக்கெல்லாம் அவர்களுடைய தாள் தொட்டு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் நான் செய்கின்ற காரியம், நான் புரிகின்ற செயல் எனக்காக அல்ல, என்னுடைய குடும்பத்திற்காக அல்ல, என்னுடைய வீட்டிற்காக அல்ல, நான் வாழ்கின்ற ஒரு சிலருக்காக அல்ல, நான் ஈடுபடுகின்ற எந்தக் காரியமானாலும், இந்த நாட்டிலே கடைக் கோடியிலே இருக்கின்ற கருப்பன், முத்தன், கந்தன், கடம்பன் என்றெல்லாம் பேசப்படுகின்ற சாதாரண கிராமப்புற தோழர்களிலிருந்து நகர்ப்புறத்திலே இருக்கின்ற பாட்டாளி தோழர்கள் வரையிலே, அத்தனை பேரையும் சென்றடைகிற காரியங்களைத் தான் நான் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். அதைத் தான் செய்து கொண்டிருக்கிறேன். அதற்கு நான் இன்றைக்கு எடுத்திருக்கின்ற முயற்சிகள் எல்லாம் அந்தக் காரியத்தில் ஏழையை, எளியவனை, சாதாரண சாமான்யமான மக்களை உயர்த்தி வைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்ற காரணத்தினால் அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே நான் செய்கின்ற காரியத்தை நாலு பேர் ஏதோ பேசி என்னைச் சலிப்படையச் செய்து, அந்தக்

காரியத்தைக் கெடுத்து விடலாம் என்று கருதுவார்களானால் இறுதியிலே தோற்கப் போகிறவர்கள் அவர்கள் தான், வெற்றி பெறப் போகிறவன் நான் தான் என்பதையும், அந்த வெற்றியிலே தான் இந்த நாட்டுப் பாட்டாளி மக்கள், ஏழையெளிய மக்களின் நல்வாழ்வு இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**கடமையை நிறைவேற்றுவோம்**

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சென்னை மாநகரத்திலே எத்தனையோ நற்காரியங்கள், நம்முடைய தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப்போல், உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் எடுத்துக் காட்டியதைப் போல், தம்பி வைரமுத்து எடுத்துச் சொன்னதைப் போல் சென்னையை உயர்த்த, சென்னை மாநகரத்தை வளர வைக்க இன்று நேற்றல்ல, எத்தனையோ ஆண்டு காலமாக நாம் பாடுபட்டிருக்கிறோம். பதவிப் பொறுப்பிலே அமர்ந்தல்ல, பதவிக்கு வராத காலத்திலேயே பாடுபட்டிருக்கிறோம். இந்தச் சென்னை மாநகரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களும், நானும் நம்முடைய கழகத்தைச் சேர்ந்தவர்களும் கைத்தறி துணிகளை மூட்டைகளாகக் கட்டி தோளிலே போட்டுக் கொண்டு "கைத்தறி வாங்கலையோ கைத்தறி" என்று கூவி கூவி விற்றோம். அப்படி விற்பனை செய்தது இழிவல்லவா ? என்று கருதவில்லை. இந்த நாட்டிலே உள்ள கைத்தறி நெசவாளன் வாழ முடியாமல் தவிக்கிறானே, அதை விட இழிவல்ல இது, அவனைக் காப்பாற்றுவது இழிவல்ல என்று கைத்தறியாளனுக்காக கண்ணீர் உகுத்த கழகம், கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

அந்தக் கழகத்தின் தலைவன் இன்றைக்கு நான். எனவே கண்ணீரைத் துடைக்க, கவலையைத் தீர்க்க ஏழையெளியவர்களை உப்பரிகையிலே ஏற்றி உட்கார வைக்கப் பாடுபடக் கூடிய, பயன்படக் கூடிய இயக்கம் இந்த இயக்கம் என்ற காரணத்தால், இந்த இயக்கத்தை வளர விடாமல் செய்தால், பாமர மக்கள், சாமான்ய மக்கள், சாதாரண மக்கள் என்றென்றும் ஆதிக்கக்காரர்களுக்கு அடிவருடிகளாக இருப்பவர்கள் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு நடைபோடுகிறவர்கள் தொடர்ந்து வெற்றி பெற்றுக் கொண்டிருப்பார்கள். அந்த வெற்றியைத் தடுத்து நிறுத்துவது தான் இந்த இயக்கத்தின் கடமை. அந்தக் கடமையை நாங்கள் எந்த அளவிற்கு பலி கொடுத்தாயினும், உயிர் கொடுத்தாயினும் நிறைவேற்றுவோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

இங்கே ஒரு பூங்கா அமைத்திருப்பது – நூறு கோடி ரூபாயிலே அடையாறு பூங்கா என்று ஒரு பூங்காவை அமைத்திருப்பது நாங்கள் எண்ணுகின்ற எண்ணங்களிலே, நாங்கள் கட்டியிருக்கின்ற மனக்கோட்டையிலே ஒரு சாதாரண விஷயம்தான். நாங்கள் தமிழகத்தையே பூங்காவாக ஆக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருப்பவர்கள். அப்படி பூங்காவாக ஆக்கும்போது, அதிலே புயல் புகுந்து விடக் கூடாது என்று கருதுகிறவர்கள் நாங்கள். அப்படி புயல் புகுமேயானால், அந்தப் புயலைத் தடுக்க தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை மக்களும் சுவர்களாக எங்கள் பக்கத்திலே இருக்க வேண்டுமென்று எண்ணுகின்றவர்கள் நாங்கள்.

எனவே பூங்கா, சென்னைக்கு மாத்திரமல்ல அடையாறுக்கு மாத்திரமல்ல, நம்மை வந்து இதுவரையிலே "அடையார்" பலர் – அவர்கள் எல்லாம் – "அடையாறு பூங்கா" இன்றைக்கு ஏற்பட்டிருப்பதைக் கண்டு "அடைவோம்" என்று கூடக் கருதலாம். அதைத் தான் கவிதை வரிகளிலே நான் எழுதி, இந்தக் கல்லிலே அதைச் செதுக்கி வைத்திருக்கிறார்கள், "அடையாறு பூங்காவில் அடைவார்கள் தேனீக்களைப் போல" என்று.

தேனீக்களைப் போல அடைந்து, தேனை உருவாக்கி, தேனை மற்றவர்களுக்கும் பருகக் கொடுத்து, நாமும் அமைதியாக கொஞ்சம் இனிமையாக அனுபவிக்க, பொழுதைக் கழிக்க இந்தப் பூங்காவை பயன்படுத்தலாம் என்று சொல்வதற்குக் காரணமே, இந்தப் பூங்கா போன்ற சாதனைகளால் நாம் பெறுகின்ற சுகம், துளியளவு. நமக்குள்ள சுயநலம் எள்




முனையளவு, அதனால்தான் நான் தனிமைச் சுகத்தையும் இங்கே பெறலாம் என்று தனிமைச் சுகத்தைப் பெறுவதற்காக பூங்கா என்று குறிப்பிடலாம், தனிமைச் சுகத்தையும் இங்கே பெறலாம் என்று எழுதினேன்.

அந்தத் தனிமைச் சுகத்தை இது போன்ற பூங்காக்களிலே பெறுபவர் தம்பி வைரமுத்து என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவருக்கு பாட்டு எழுத இது மாதிரியான பூங்காக்கள்தான் தேவை. எனக்கு இதைப் போன்ற பூங்காக்களைப் பார்த்தால் என்னுடைய எண்ணம் எல்லாம், இந்தப் பூக்களை உருவாக்க, இந்தப் பூஞ்செடிகளை உருவாக்க புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதைப் போல "எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ, உங்கள் வேரினிலே" என்று, அந்தப் பாட்டுத் தான் எனக்கு நினைவுக்கு வரும். இப்படிச் சொல்வதால் வைரமுத்துவிற்கு இந்தப் பாட்டு நினைவுக்கு வராது என்று பொருள் அல்ல, அவருக்கும் நினைவுக்கு வரும்.

**கனவை நிறைவேற்றுவோம்**

"சித்திரைச் சோலைகளே, உம்மை நன்கு திருத்த இந்தப் பாரினிலே, எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ உங்கள் வேரினிலே" என்று புரட்சிக் கவிஞர் கேட்டார். அதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறோம். அதையும் நினைவிலே செதுக்கி வைத்திருக்கிறோம். அப்படி பூங்காவாக, இங்கே தமிழகத்தையே ஆக்க வேண்டும் என்ற அந்தப் பெரிய திட்டத்தையும், பெரும் கனவையும் சிந்தையிலே தேக்கி வைத்திருக்கிறோம். அந்தக் கனவு நிறைவேற, இவைகள் எல்லாம் அடித் தளங்கள் ஆகட்டும்.. அந்தக் கனவு நிறைவேற இவைகள் எல்லாம் அஸ்திவாரங்கள் ஆகட்டும். இந்த முயற்சிகள் எல்லாம் அச்சாரங்களாகட்டும்.

அந்தக் கனவை நிறைவேற்றுவோம், அந்தக் கனவு நிறைவேற வேண்டுமேயானால் நான் ஒருவன் மாத்திரமல்ல, இந்த அவையிலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் மாத்திரமல்ல, அந்தக் கனவு நிறைவேற வேண்டுமேயானால் நீங்கள் அத்தனை பேரும் எனக்கு, இந்த ஆட்சிக்குக் கைகொடுக்க வேண்டும். அப்படி கை கொடுத்தால்தான் – நாம் நம்முடைய கையை நம்பி – நம்முடைய உழைப்பை நம்பி – நம்முடைய வலிவை நம்பி – நம்முடைய நல்ல எண்ணத்தை நம்பி நாட்டு மக்களுக்கான தொண்டைத் தொடருவோம், இதுபோன்ற பல நன்மைகளை தொகை தொகையாக மக்களுக்கு, நாட்டுக்குச் செய்திடுவோம் என்று கூறி இந்த முயற்சியிலே ஈடுபட்ட நம்முடைய அரசு அலுவலர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், குறிப்பாக நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலினுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன். ♦



# அமர்த்தியா சென் ஆய்ந்து அறிவிப்பது என்ன?

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிக்கை

தூத்துக்குடி மாவட்டத்தில் டைட்டானியம் டை ஆக்ஸைடு தொழிற்சாலை ஒன்றை 2,300 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்க டாட்டா நிறுவனம் முன் வந்தது குறித்துத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கருத்துத் தெரிவித்துள்ளன. அநேகமாக எல்லாக் கட்சிகளும் அங்கே சென்று மக்களிடம் கருத்துக்களைக் கேட்பதாக கூறி அவ்வாறே செய்தும் வருகின்றன. அந்தக் கருத்துக் கேட்பின் போது, அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப தங்கள் தங்கள் அபிமானிகளை அழைத்து வந்து கருத்துக்களைச் சொல்ல வைக்கும் ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் எதிர்ப்புக் கருத்துக்களும் சொல்லப்பட்டு அதனை இந்து போன்ற நாளேடுகள் வெளியிடவும் தவறவில்லை. இந்தத் தொழிற்சாலைக்கான மூலப் பொருள் கிடைக்கும் இடத்தை விட்டு விட்டு வேறு எங்கேயோ தொழிற்சாலையை ஆரம்பித்தால் என்ன என்ற கேள்விகளும் கேட்கப்படுகின்றன. அவர்கள் கருத்துப்படி அங்கே தொழிற்சாலை ஆரம்பித்தால் கூட, மூலப்பொருள் உள்ள தொலை தூரத்திலிருந்து அதனை எடுத்துத் தானே கொண்டுபோக வேண்டும். வேறு சிலர் அரசாங்கமே இந்தத் தொழிற்சாலையை நடத்தினால் என்ன என்று யோசனைகளையும் வழங்குகிறார்கள். 2,300 கோடி ரூபாய் உடனடியாக முதலீடு செய்ய அரசாங்கத்திடம் நிதி வசதி உள்ளதா என்பதைப் பற்றி அவர்கள் யோசிக்கவில்லை. டாட்டா தொழிற்சாலையைப் பொறுத்தவரை இந்தியாவிலே நேர்மையாக எவ்வித ஊழலுக்கும் இடமின்றி தொழில் நிறுவனங்களை நடத்துவோர் என்பது தொழில் துறை பற்றி அறிந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். வேறு சிலர் டாட்டா நிறுவனம் முதன் முதலாக இப்போது தான் தமிழகத்திற்கு வருவதாகச் சொல்கிறார்கள், அவர்களுக்கு டாட்டா நிறுவனத்தின் சார்பில் தமிழகத்தில் ஏற்கெனவே பல நிறுவனங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன என்ற விவரம் கூடத் தெரியாத நிலை.

இதே டாட்டா நிறுவனம் மேற்குவங்க மாநிலத்தில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவது குறித்து அங்கே பிரச்சினைகள் தோன்றி அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறுகின்றன. நந்திகிராமம் என்ற பெயர் திடீரென நாடு முழுதும் பேசப்படுகிற ஒன்றாகி விட்டிருக்கிறது.

இந்த நிலையில் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் கல்வி நிறுவனம் ஒன்றை தோற்றுவித்து நடத்திய "சாந்திநிகேதனில்" பிறந்தவரும், நோபல் பரிசு பெற்றவரும், உலகப் புகழ் பெற்ற பொருளாதார நிபுணருமான அமர்த்தியா சென் அவர்கள் மேற்கு வங்கத்தில் தொடங்கப்படும் டாட்டா தொழிற்சாலை பற்றி கொல்கத்தாவில் இருந்து வெளியாகும் "டெலிகிராப்" இதழுக்கு ஒரு சிறப்புப் பேட்டியினை அளித்துள்ளார். அந்தப் பேட்டியில் உள்ள சில கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுபவை என்பதால் அவற்றை இந்தக் கடிதத்தில் தொகுத்து தந்துள்ளேன். அது வருமாறு :–

கேள்வி :- தொழில் துறைக்கு வேளாண் நிலங்களை கையகப்படுத்துவது குறித்தும், நந்திகிராமம் - சிங்கூர் விவகாரம் குறித்தும் தங்களுடைய கருத்து என்ன?

அமர்த்தியா சென் :- இது மிகவும் சிக்கலான கேள்வி. இதற்கு பல பரிமாணங்கள் உண்டு. அவற்றைத் தனித்தனியாகப் பார்க்கலாம். முதலில் மேற்கு வங்கத்திற்குத் தேவையான தொழில் கொள்கை குறித்து ஆராய்வோம். இது ஒரு நீண்ட கால கேள்வி மட்டுமன்றி அதி முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட. மேற்குவங்கத்தில் தொழில் துறை எவ்வளவு தூரம் பின்னடைந்து இருக்கிறது என்பதை நாம் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். இந்தியாவில் மட்டுமன்றி, உலகத்தில் உள்ள முக்கியமான தொழில் மையங்களில் ஒன்றாகவும் கொல்கொத்தா இருந்தது. ஐரோப்பியர்கள் எழுதிய புத்தகங்களில் உலகத்திலுள்ள வளமான தொழில் மையங்களில் ஒன்றாக கொல்கொத்தா குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற ஒரு பெருமையை இத்தாலியின் சில பகுதிகள் பிற்காலத்தில் ஈட்டின. வரலாற்று ரீதியாகப் பார்த்தால் 300 ஆண்டுகளுக்கு முன்பாக ஜோப் சார்னோக் மற்றும் வர்த்தகத்தின் அடிப்படையிலும், நகர்ப்புறக் குடியிருப்புகளும் அங்கிருந்தன. இந்தியாவில் கிடைக்கும் ஆவணங்களில் மட்டுமின்றி டாலமி, பிளினி, எல்டர் போன்ற ஐரோப்பிய எழுத்தாளர்களின் எழுத்துக்களிலும் இது குறித்த தகவல்கள் காணக் கிடைக்கின்றன. கொல்கத்தாவின் தொழில் வளத்தை ஐரோப்பியர்கள் நன்கறிந்திருந்தனர். கொல்கொத்தாவிற்கு அருகிலேயே வளம் மிக்க தொழிற்பேட்டைகள் இருந்தன. கி.பி. 401 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து பத்தாண்டுகள் இங்கே தங்கியிருந்த பாஹியானின் பயணக் குறிப்புகளிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. கொல்கொத்தாவிற்கு அருகில் உள்ள தம்ராலிப்தாவில் இருந்து படகு மூலம் அவர் புறப்பட்டுச் சென்றார். இவையெல்லாவற்றையும் பரந்து விரிந்து கிடந்த கொல்கொத்தாவின் பகுதியாகத் தான் கருத வேண்டும். கொல்கொத்தா ஒரு தொழில் வர்த்தக மையமாக வெகு காலத்திற்கு முன்பு இருந்ததை இவையெல்லாம் சுட்டிக் காட்டுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சியின் தொழில் கொள்கையானது நன்றாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஒன்றல்ல. தொழிற்சாலைகளில் நடைபெற்ற போராட்டங்கள், தொழிலாளர்களுக்குச் சில உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கலாம். ஆனால் கொல்கொத்தாவிலிருந்து தொழிற்சாலைகள் வெளியேறியதன் காரணமாக பல உரிமைகளை அவர்கள் இழக்க வேண்டியிருந்தது. ஜோதிபாசுவிற்கு இந்தப் பிரச்சினைகள் தெரியும். பெரிய தொழிற்சாலைகள் அமைய வேண்டியதன் அவசியத்தை புத்ததேவ் பட்டாச்சார்யாவும் உணர்ந்திருக்கிறார். இது மிகவும் அவசியமான ஒன்று. தொழில் உற்பத்தியானது ஹுக்லி நதிக்கரையிலும், கங்கை நதிக்கரையிலும் உள்ள வளமான நிலங்களில் தான் நடைபெற்றது என்பதை நாமெல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே வளமான வேளாண் நிலங்களைத் தொழில் துறைக்கு விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று கூறுவது மேற்கு வங்கத்தின் தொழில் கொள்கைக்கு விரோதமானது மட்டுமின்றி வங்காளத்தின் இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றுக்கும் எதிரானது.

நிலங்கள் வளமானவைகளாக இருந்தாலும், அவற்றை தொழிற்சாலைகளுக்கு அளிக்கும் பட்சத்தில் அங்கு உற்பத்தி செய்யும் பொருட்களின் மதிப்பானது வேளாண் உற்பத்திப் பொருட்களை விட எத்தனையோ மடங்கு அதிக மதிப்புடையதாக இருக்கும். மான்செஸ்டரிலும், லங்காஷயரிலும் தொழிற்சாலைகள் வளமான வேளாண் நிலங்களில் தான் அமைக்கப்பட்டுள்ளன.

கேள்வி:- நிலம் கையகப்படுத்துவது குறித்து உங்களுடைய கருத்து என்ன?

அமர்த்தியாசென் :- இதில் சில தவறுகள் நடைபெற்றன. இதை அரசு ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். இதை ஓரளவுக்கு மேற்கு வங்க அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

கேள்வி:- நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு அரசு வழங்கிய இழப்பீடு குறித்து ?

அமர்த்தியா சென் :– சந்தையில் கிடைக்கும் விலையை விட அதிக அளவிலான தொகையை அரசு கொடுத்தது. அரசுக் கோணத்தில் பார்த்தால் அரசு சரியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அரசு செய்த பெரிய தவறு எது என்று யோசித்தால் நடைமுறைக்குத் தக்கப்படி யோசிக்காமல் இழப்பீட்டை முடிவு செய்ததுதான். வேளாண் நிலங்களின் மதிப்பீட்டில் எடுத்துக் கொண்டால் வழங்கப்பட்ட இழப்பீடு நல்ல தொகை தான். ஆனால் தொழிற்சாலைக்கான நிலம் என மதிப்பீடு செய்தால் அரசு வழங்கிய தொகை மிகச் சொற்பமானது. சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக நாம் மாறும்போது தொழிற்சாலைகளுக்கான நிலத்தின் மதிப்பீட்டையும் நாம் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் இழப்பீடு வழங்க வேண்டும். இந்த விஷயத்தை அரசு புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் அரசு செய்தது தவறு என்று கருதுகிறேன். இது ஒரு நேர்மையான தவறு. அதை எதிர்காலத்தில் சரி செய்து விட முடியும்.

கேள்வி :– உங்களைப் பொறுத்தவரை வேறு என்னென்ன பிரச்சினைகள் இருப்பதாக கருதுகிறீர்கள் ?

அமர்த்தியா சென் :– பிரச்சினை எதுவானாலும் நாம் இப்போது தீர்ப்பு கூற முடியாது. ஒரு சுதந்திர நாட்டில் மக்கள் எங்கே வேண்டுமானாலும் முறைப்படி போகலாம். எங்கே வேண்டுமானாலும் வரலாம். இதை அரசாங்கமோ எதிர்கட்சிகளோ கட்டுப்படுத்த முடியாது. ஆனால் மேற்குவங்கம் தொழில் மயமாவதைத் தடுப்பவர்கள் மக்களின் நலன்களை கவனத்தில் கொள்ளவில்லை என்று தான் கூற வேண்டும்.

ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வேளாண்மையில் வளம் கொழித்தாலும், அங்கெல்லாம் மிகச் சிறிய அளவிலான மக்களே வேளாண்மையில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பாலான மக்கள் தொழில் துறையில் நுழைந்து விட்டனர். தொழில் துறை தான் வசதியாக இருக்கிறது. எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் வேலை அளிக்கும்.

வேளாண்மையை மக்கள் கை விட்டதன் காரணமாக ஒட்டு மொத்த உற்பத்தி வீழ்ச்சி அடைவதில்லை. அதற்குப் பதிலாக தனி நபர் வருமானம் உயர்கிறது. தொழில் துறை, வேளாண்மை, பொருளாதாரம் ஆகியவை வளர வேண்டுமானால் தொழில் மயமாக்குதல் வேண்டும். அரசியல் மூலமாக தொழிலதிபர் களுக்கு நெருக்கடியை உருவாக்குபவர்களும், அவர்கள் நிலங்களை வாங்குவதாகத் தடுப்பவர்களும் மக்களின் நலன்களை உதாசீனப் படுத்துகிறார்கள். உலகத்திலேயே செல்வம் கொழிக்கும் பகுதிகளில் ஒன்று என்ற பெயரை கொல்கொத்தா மீட்டெடுக்க வேண்டுமானால் தொழில் மயமாதல் நடந்துதான் ஆக வேண்டும். தொழில்களைத் தொடங்க வேளாண் நிலங்களை கொடுக்க மறுத்தால் அது மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தும்.''

உடன்பிறப்பே, பொருளாதார மேதையான திரு. அமர்த்தியா சென் அவர்கள் மேற்கு வங்கத்திலே தொழிற்சாலை தொடங்குவது பற்றி தெரிவித்த கருத்துக்கள் தமிழகத்திற்கும் பல விதங்களிலே பொருந்தும் என்பதால்தான் இந்தக் கருத்துக்களை நான் தொகுத்துத் தந்துள்ளேன்.

தென் மாநிலங்கள் முன்னேற வேண்டும், அந்தப் பகுதிகளிலே உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வேண்டும், பொருளாதாரத்திலே அங்குள்ளவர்கள் செழிப்படைய வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுகின்ற அரசைப் பற்றியும், அரசு செய்கின்ற நல்ல காரியங்களுக்கு குந்தகம் விளைவிக்க எண்ணுவோரைப் பற்றியும், அரசு எந்த நோக்கத்தோடு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முயலுகிறது என்பதைப் பற்றியும் அந்தப் பகுதியிலே உள்ள மக்களே சிந்தித்துப் பார்த்து முடிவுக்கு வரட்டும். அதே நேரத்தில் அரசின் சார்பில் எந்தக் காரியத்தைத் தொடங்க நினைத்தாலும், அதற்கு ஏதாவது குறை கூறி திட்டங்களை தாமதம் செய்விக்க முயல்வோர் யார் என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளட்டும்.

◆ ◆ ◆



# கிருஷ்ணகிரியில் உலகத்தரத்தில் ரூ.2,300 கோடி மதிப்பில் புதிய தொழில் மையம் - 70 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

**த**மிழகத்தின் வட மாவட்டங்களில் குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வாய்ப்புகளை முடுக்கிவிடும் நோக்கத்திலும், பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் பல்வகைப் பொருள்களின் உற்பத்திக்காக உலகத் தரத்திலான கட்டமைப்பு வசதிகள் கொண்ட தொழில் மையம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் புதிதாக அமைக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1,330 எக்டேர் பரப்பில் அமையும் இத்திட்டத்திற்காக மத்திய அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. சென்னையையும், பெங்களூரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை ஆகியவற்றின் அருகில் இத் தொழில் மையம் அமைகிறது.

உலகத்தரத்தில் கட்டமைப்பு வசதிகள், பசுமைசூழ் சாலைகள் (Green Corridors), உயர்தர சமூகக் கட்டமைப்பு வசதிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்புகள் ஆகியவற்றுடன் இத் தொழில் மையம் வடிவமைக்கப்படவுள்ளது.

ஏற்றுமதியை ஊக்குவிக்கும் மின்னணுத் தொழில்கள், ஆடை உற்பத்தித் தொழில்கள், பொறியியல் தொழில்கள், தகவல் தொழில்நுட்ப

மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள் உயிரி தொழில்நுட்பம் மற்றும் நேனோ தொழில் நுட்பம் சார்ந்த அறிவுசார் தொழில்கள் ஆகியவை இம்மையத்தில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 2,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைய விருக்கும் இத்தொழில் மையம் ஏறத்தாழ 11 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் முதலீடுகளை ஈர்க்கும். இங்கு ஆண்டுக்கு 16 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அமையும்; ஏறத்தாழ 70,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்புகளை வழங்கும்.

இத்திட்டத்தைச் செயல் படுத்துவ தற்காகத் திருவாளர்கள் ஜி.எம்.ஆர். குழும நிறுவனம் பன்னாட்டு அளவிலான போட்டி ஏலத்தின் மூலம் டிட்கோவின் கூட்டுத்துறை பங்குதாரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டிட்கோவும் ஜி.எம்.ஆர். நிறுவனமும் இணைந்து கூட்டுத் துறை நிறுவனம் ஒன்றை உருவாக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், 6.8.2007 அன்று இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ்.இராமசுந்தரம், ஜி.எம்.ஆர். கூட்டமைப்பு நிறுவன இயக்குநர் பி.வி. நாகேஸ்வரராவ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆற்காடு நா.வீராசாமி, தலைமைச் செயலாளர், எல்.கே. திரிபாதி,இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., ஜி.எம்.ஆர். குழுமத்தின் தலைவர் ஜி.மல்லி கார்ஜுனராவ் ஆகியோர் உடனிருந்தனர். ★

# பெரம்பலூரில் ரூ.62 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்



**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

பெரம்பலூரில் 12.8.2007 அன்று நடந்த விழாவில் ரூ.62 கோடி மதிப்பிலான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி, ரூ.3 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மாவட்டங்கள் தோறும் சுற்றுப் பயணம் செய்து மக்கள் நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்து வருகிறார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை மற்றும் பெரம்பலூர் ஒன்றியங்களில் 306 குடியிருப்புகளுக்கு ரூ.62 கோடி மதிப்பில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும், பெரம்பலூர் மற்றும் ஆண்டிமடம் பகுதிகளில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடக்க விழா மற்றும் பல்வேறு நலத்திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடந்தது. விழாவுக்கு மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.ஆ.ராசா அவர்கள் தலைமை வகித்தார். பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அனில்மேஷராம்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு , மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் புதிய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார். ★



# இந்தியாவிலேயே அதிக மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தலைமையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து 17-7-2007 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர், நகராட்சிகள் நிருவாக ஆணையாளர், பேரூராட்சிகள் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நகராட்சி நிருவாகம் குறித்த ஆய்வில் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், நகர்ப்புற மக்களுக்கான அடிப்படை வசதிகள் வழங்கும் திட்டம் போன்றவைகளின் கீழ் இதுவரை 3,053 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 162 பெரிய திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும், இந்தியாவிலேயே அதிக மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது என்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

கோவை, மதுரை மாநகராட்சிகளில் இத்திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள மேம்பாட்டுப் பணிகளை விரைந்து செயல்படுத் திடவும்,

உலக வங்கியின் உதவியுடன் 19.10.2005இல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகளை விரைவுபடுத்திடவும்,

நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்துதல், நவீன இறைச்சிக் கூடங்கள் கட்டுதல், நவீன எரிவாயு தகன மேடைகள் அமைத்தல், திடக் கழிவு மேலாண்மைப் பணிகள்,

பணியாளர் நலன் குறித்த அறிவிப்புகள், அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப் படுத்தும் திட்டம் ஆகிய பல்வேறு அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை விரைவுபடுத்திடவும்;

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 505 கிலோ மீட்டர் நீள உட்புறச் சாலைகள், 112 கிலோ மீட்டர் நீள நடைப்பாதை பணிகள் புதுபிக்கப்பட்டுள்ள நிலையில் புதியதாக 4 மேம்பாலங்கள் கட்டுதல், ஏறத்தாழ 100 கோடி ரூபாய் செலவில் அடையாறு சிற்றோடைப் பகுதியில் பூங்கா அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளை விரைவு படுத்திடவும்;

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கும் அளவை உயர்த்திட குடிநீர் ஆதாரங்களின் திறனை மேம்படுத்துதல், குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை விரைவுபடுத் திடவும்;

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கும் அளவை உயர்த்திட குடிநீர் ஆதாரங்களின் திறனை மேம்படுத்துதல், குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை விரைவு படுத்திடவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், பேரூராட்சிகள் தொடர்பான ஆய்வின் போது அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் செயல்பாடு, 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளுவதாக அறிவிக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் , சாலைப் பணிகள், பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள், மின்வசதித் திட்டங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், சந்தை மேம்பாட்டுப் பணிகள், கணினி மயமாக்கல், நவீன இறைச்சிக்கூடப் பணிகள், புதிய அலுவலகக் கட்டடப் பணிகள், உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு,



செம்பரம்பாக்கம் ஏரியில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் துணை கொண்டு குடிநீர் விநியோகப் பணிகளை விரைவுபடுத்திடவும்;

கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளின் நடவடிக்கைகளை விரைவுபடுத்திடவும்;

மே மாதம் 2006க்கு பிறகு, 7,742 குடியிருப்புகளுக்கு முழு அளவு குடிநீர் வழங்கிட வகை செய்யப்பட்டுள்ள நிலையில், மேலும் 63 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் முன்னேற்றப் பணிகளை விரைவு படுத்திடவும்; தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி, கரூர் மற்றும் இனாம் கரூர் ஆகிய நகரங்கள் மற்றும் இதர 29 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை விரைவுபடுத்திடவும்;

பகுதி–II – திட்டப்பணிகள் மற்றும் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனராமைப்புத் திட்டம் மற்றும் உபதிட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள 75 திட்டப் பணிகளின் முன்னேற்றங்களையும் விரைவுபடுத்திடவும் முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்காக 2006–2007 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 947 கோடியே 90 இலட்சத்தில், 906 கோடியே 35 இலட்சம் ரூபாய்க்கான, அதாவது 95.62 சதவீத நிதி செலவிடப்பட்டு சாதனை படைத்துள்ளமைக்கும், திட்டம் சாராப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,256 கோடி 30 இலட்சம் ரூபாயில், 1,296 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, சாதனை நிகழ்த்தப்பட்டு, அதாவது 103.17 சதவீதம் அளவிற்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமது பாராட்டுகளைத் தெரிவித்தார். ❖



# உள்ளாட்சித்துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பாராட்டு

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள், மத்திய மாநில அரசுகளின் திட்டப் பணிகள் மற்றும் ஊராட்சி நிருவாகப் பணிகள் குறித்து 21.7.2007 அன்று தலைமைச் செயலகத்தில் விரிவாக ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலர், நிதித் துறைச் செயலர் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

2006–2007 மற்றும் 2007–2008 நிதி ஆண்டுகளில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இத்துறையின் கீழ் செயல்படும் அமைப்புகளின் மூலம் செயல்படுத்திட அரசு அறிவித்துள்ள அனைத்து அறிவிப்புகளைப் பொறுத்தும் உரிய நிதி ஒதுக்கீடு அளித்து, அவற்றிற்கான அரசாணைகள் வெளியிடப் பட்டுப் பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருவதற்காகவும், முந்தைய அரசு நிலுவையாக விட்டுச் சென்ற 1 இலட்சத்து 54 ஆயிரம் பணிகளில், 1 இலட்சத்து 53 ஆயிரம் பணிகளை இத்துறை இதுவரை முடித்துள்ளமைக்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிகவும் மகிழ்ந்து தமது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

குறிப்பாக, தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கடந்த ஆட்சி காலத்தில் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில், 2006 மே முதல் இதுவரை 363 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகளை, ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்கள் மூலம் அல்லாமல், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் விதமாக, மனித உழைப்பின் மூலம் நிறைவேற்றப் பட்டுள்ளமைக்கும், இத்திட்டத்திற்கெனக் குறைந்தபட்ச தினசரி ஊதியமாக 80 ரூபாயைப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊராட்கள் அனைத்திலும், கிராமக் குளங்களைச் சீரமைத்தல், சிமெண்டு சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் விநியோகப் பணிகள், சந்தை வசதி, நூலகம், விளையாட்டு மையங்கள் முதலியவற்றை அமைத்திடும் பணிகளுக்காக 2006–2007–இல் 2540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் செலவிலும், 2007–2008–இல் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் செலவிலும் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளவைகளுடன், தற்போது நடைபெற்று வரும் பணிகளை விரைவுபடுத்திடவும். அரசுப் பணியிடங்களில் காலியாக உள்ள இடங்களை நிரப்பிட இந்த அரசு வழங்கிய அறிவுரைகளையொட்டி, முதல் துறையாக ஊரக வளர்ச்சித் துறை விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் இதுவரை 14,298 காலிப் பணியிடங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டமைக்குப் பாராட்டுகள் தெரிவித்து, எஞ்சிய பணியிடங்களையும் விரைந்து நிரப்பிடவும். துறையின் நிருவாக மேம்பாட்டிற்காக அனுமதிக்கப்பட்டு, ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளபடி, 123 புதிய வாகனங்கள், 385 நிகரி எந்திரங்கள், 416 படிப்பெருக்கிகள் ஆகியவற்றை விரைந்து வழங்கிட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்றபின், நகர்ப்புற சுய உதவி குழுக்களுக்கு, சுழல் நிதி வழங்க ஆணையிடப்பட்டு அதன் அடிப்படையில், 2006–2007 ஆம் ஆண்டில் ஊரக நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 56,602 சுய உதவிக் குழுக்களுக்கு 572 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டதற்கும், புதிதாக 22,843 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் 9,957 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதற்கும், சிறந்த தொழில் நிறுவனங்கள் மூலம் 4,677 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய தொழில் புரிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், சுனாமி அவசர கால நிதி உதவித் திட்டத்தின் கீழ் முந்தைய ஆட்சியில் 5 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்த நிலையில், மே 2006க்கு பின், இதுவரை இத்துறையின் முயற்சியால் 264 கோடி ரூபாய் செலவில் நலத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு இதுவரை 74 சதவீத நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்நிதியில், 30,773 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 80 கோடி ரூபாய் சுழல் நிதியும், 2,058 குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளுக்காக 26 கோடி ரூபாய் மானியமும், 32,527 உடல் ஊனமுற்றோருக்கு 33 கோடி ரூபாய் மானியமும் வழங்கப்பட்டு,450 கி.மீ. நீள சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் 2008 ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும் இத்திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளையும் விரைவாக முடித்திட முடிவு செய்யப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கடந்த இரண்டாண்டு காலமாக ராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தன்னார்வ அமைப்புகளால் கட்டப்படாமல் இருந்த 2,118 வீடுகளுடன், கடற்கரையிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் உள்ள 11,500 வீடுகள், மேலும் 1,000 மீட்டருக்குள் உள்ள 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 8,500 தொகுப்பு வீடுகள் ஆகிய 20,000 வீடுகளையும் அடிப்படை வசதிகளுடன் 476 கோடி ரூபாய் செலவில் புதிதாகக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளப் பணிகளை விரைந்து நிறைவேற்றிடவும், கிராம ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி அளித்தல், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம், சுய உதவிக் குழு பெண்களுக்கு அடிப்படைக் கல்வி அளிக்கும் திட்டம் போன்ற பணிகளை விரைவில் நிறைவேற்றிடவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பகிர்வு குறித்து பரிந்துரைத்திட மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில உயர்நிலைக் குழுவின் பணிகளின் முன்னேற்றம் மற்றும் உள்ளாட்சிகளின் நிலை உயர்த்துதல், எல்லை சீரமைப்பு தொடர்பாக மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆய்வு செய்தார்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை மேம்படுத்திட மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி, அவற்றிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதி 8 சதவீதத்தில் இருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டு, முந்தைய ஆண்டைவிட 30 சதவீதம் அதிக நிதியாக, அதாவது ஆண்டுக்கு 361 கோடி ரூபாய் கூடுதலாக நிதி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா 3 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சிகளுக்கான பகிர்வு நிதி ஒதுக்கீடு முன்பு 47 சதவீதமாக இருந்தது தற்போது 60 சதவீதமாக உயர்த்தப்பட்டு ஊராட்சிகளின் நிதித் திறன் மேம்பட இதன்மூலம் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளமைக்கும். முன்பு கிராம ஊராட்சிகளுக்கு மின் நுகர்வு கட்டணம் காரணமாக மிகுந்த நிதிச் சுமை இருந்ததால். 1 யூனிட்டுக்கு ரூபாய் 3.40 என்று இருந்த மின் கட்டணம் தற்போது 3 ரூபாய் எனக் குறைக்கப்பட்டு, நிலுவையில் இருந்த 13.3.2007க்கு முந்தைய அபராத வரியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இத்திட்டம், அனைத்துக் கிராம ஊராட்சிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளமைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார். ◈



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுடன் மாண்புமிகு மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் அவர்கள் சந்திப்பு

மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள், 26-7-2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சந்தித்தார். அப்போது மாண்புமிகு மத்திய அமைச்சர் பெருமக்கள் திரு.டி.ஆர்.பாலு, திரு.ஆ.ராசா ஆகியோர் உடன் இருந்தனர்.

28-5-2007 அன்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அர்ஜுன்சிங் அவர்கள் சென்னையில் செம்மொழியாம் தமிழுக்கென மத்திய அரசு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து தனக்கு எழுதிய கடிதத்தினை நினைவூட்டிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அதற்கு மத்திய திட்டக் குழுவின் கொள்கை ரீதியிலான இசைவு கிடைத்த போதிலும், இறுதி ஒப்புதல் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சகத்திடம் இருந்து தமிழக அரசுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று கூறினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் விரைவில் அதனைக் கவனித்து ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு மத்திய அமைச்சரிடம் மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்வது குறித்து உச்ச நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்கினைச் சுட்டிக் காட்டி, அதிலும் விரைவில் நல்ல முடிவு காண்பதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் தமிழக அரசும் தன்னை இணைத்துக் கொண்டிருப்பது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்.

செம்மொழிக்கான மத்திய அரசின் நிறுவனம் ஒன்றைத் தமிழகத்திலே அமைப்பது குறித்தும், அதற்கான குழுவின் பணிகளைத் தொடங்கி வைக்கும் வகையிலும், சென்னையில் நடைபெறும் விழாவில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்களை கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாளன்று நடைபெறும் அந்த விழாவில் தான் கலந்து கொள்வதாக மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் உறுதியளித்து, அதன்படி இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் அரசு கால்நடை மருத்துவமனைகளில் 220 கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழகம் முழுவதிலும் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கால்நடை உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். 2001 ஆம் ஆண்டில் முந்தைய அ.தி.மு.க அரசு நடைமுறைப்படுத்திய பணி நியமனத் தடைச் சட்டம் காரணமாகக் காலிப் பணியிடங்கள் இருந்தும் அரசுத் துறைகளில் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படாதது போலவே, அரசு கால்நடை மருத்துவ மனைகளிலும் காலிப்பணியிடங்களில் கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம் செய்யப்படவில்லை.

தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் பணி நியமனத் தடைச் சட்டத்தை இரத்து செய்தது. அதன் தொடர்ச்சியாக, தற்போது அரசு கால்நடை மருத்துவமனைகளில் காலியாக உள்ள 250 பணியிடங்களில் கால்நடை உதவி மருத்துவர்களை நியமனம் செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் முறைப்படி எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு முதலிய தேர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு தகுதியானவர்களைத் தேர்வு செய்துள்ளது.

தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களில் முதற்கட்டமாக, 220 பேர் அரசு கால்நடை மருத்துவமனைகளில் கால்நடை உதவி மருத்துவர்களாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர். இவர்களில் 10 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு, அவர்களது நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 24.7.2007 அன்று வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார். ◆




# வேலை உறுதியளிப்புத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறப்பாகச் செயல்படுகிறது

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் 2.8.2007 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10,171 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி ரூ.659.767 இலட்சம் மதிப்பிலான 163 புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து ரூ.3665.420 இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றும்போது :

"செங்கம் பகுதி வறட்சிப் பகுதியாக உள்ளது என்று சட்டமன்ற உறுப்பினர் கூறினார். இப்பகுதி வறட்சிப் பகுதி, புரட்சிப் பகுதியாக மட்டுமின்றி எழுச்சிப் பகுதியாகவும் உள்ளது. காரணம் உணவு அமைச்சர் பேசும் போது கூறியதைப்போல திருவண்ணாமலையிலிருந்து செங்கம் வரை வரும் வழியில் மக்கள் வெள்ளம் – இதை பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ரூ.28 கோடி மதிப்பில் பால் பவுடர் தொழிற்சாலை செங்கம் வட்டத்தைச் சேர்ந்த அம்மாபாளையம் மேல்முடியனூர் கிராமத்தில் அமைப்பதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஏறக்குறைய 2 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு பதப்படுத்தவும், 20 டன் பால் பவுடர் தயாரித்திடவும் இயலும். இந்த மாவட்டத்தைச் சுற்றியுள்ள திருச்சி, விழுப்புரம், சேலம் மற்றும் வேலூர் ஆகிய கூட்டுறவு ஒன்றியங்களும் இதனால் பயன் பெறும். இத்தொழிற்சாலை விரைவில் மக்களின் பயன்பாட்டிற்குச் செயல்படும்.

உலக அளவில் பால் பவுடர் தொழிலில் டென்மார்க் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் குஜராத்தில் உள்ள அமுல் கூட்டுறவு பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. அந்த உயர்வை ஆவின் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூ.36 கோடி மதிப்பில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் புதிய நூலக கட்டடம், புதிய குளம் அமைத்தல், பொது விநியோகக் கட்டடம் கட்டுதல், திருவண்ணாமலை நகராட்சியின் மூலம் நவீன ஆடுவதைக் கட்டடம், நவீன எரிவாயு தகன உலை போன்ற 177 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ரூ. 659.767 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 163 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டுறவு அமைப்பின் சார்பிலும் கடனுதவி மானியத் தொகை வழங்கப்படுகிறது. திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று இந்த ஓராண்டில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் 1 கிலோ அரிசி 2 ரூபாய் திட்டம், விவசாயிகள் கடன் 7 ஆயிரம் கோடி தள்ளுபடி, சத்துணவில் வாரம் 2 முட்டை வழங்கப்படுகிறது. தற்போது கடந்த 15ந் தேதி கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட அரசு உத்தரவிட்டு அன்று முதல் வாரம் 3 முட்டை வழங்கப்படுகிறது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி வழங்கப்பட்டு அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டு தமிழகத்தில் உள்ள சமத்துவபுரங்களுக்கு வழங்கப்பட்டது. 2ஆவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டு 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தலா 10 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. தற்போது 30 லட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்க டெண்டர் விடப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

செங்கம் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதாகத் தெரிவித்தார்கள். கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சாத்தனூரிலிருந்து செங்கத்திற்கு குடிநீர் கொண்டு வர நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகள் தாமதமாக நடைபெறுவதாகக் கூறினார்கள். நிச்சயமாகப் பணி நிறைவேற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் வேலூரிலிருந்து தனியாக திருவண்ணாமலை ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். கூட்டுறவுத் தேர்தல் முடிந்திருந்தால் அந்தப் பணியும் முடிந்திருக்கும். கூட்டுறவுத் தேர்தல் முடிந்தவுடன் தனி ஒன்றியம் பிரிக்கப்படும்.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளும் 5 ஆண்டு காலத்தில் எல்லா வசதிகளும் குறிப்பாக அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். கடந்த ஆண்டு 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,500 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் பணிகள் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆண்டு 508 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,534 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு பணிகள் நடைபெறுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 860 கிராம ஊராட்சிகளில் கடந்த ஆண்டில் 167 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.183.60 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்றது. நடப்பு ஆண்டில் 170 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப் பட்டு ரூ.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,372 பணிகள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 561 பேரூராட்சிகளில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. திருவண்ணா மலை மாவட்டத்தில் உள்ள 10 பேரூராட்சிகளில் புதுப்பாளையம், கீழ்பென்னாத்தூர், களம்பூர் ஆகிய 3 பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**வேலை உறுதியளிப்புத் திட்டம்**

வேலை உறுதியளிப்புத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் சிறப்பாகச் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் பங்கு 90 சதவிகிதமாகவும், மாநில அரசு 10 சதவிகிதமாகவும் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் மட்டும் அல்ல; அனைத்துத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுவது தமிழகத்தில்தான் என்று பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் கூறினார்.

மகளிர் சுய உதவிக்குழு முதன் முதலாக தருமபுரி மாவட்டத்தில் தான் இந்த அரசால் தொடங்கப்பட்டது. பெண்கள் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும். யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் தன் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்று மகளிர் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு மகளிர் சுய உதவிக்குழுக்களைத் தொடங்கி இன்று நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வங்கிகளில் கடன் பெற்றுச் சிறப்பாகச் செயல்படுகிறது'' என உரையாற்றினார். ❖



# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் புதிய உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணையினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை நிறுவிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி வாரியத்தில் பல ஆண்டுகளாக முந்தைய அரசால் முடக்கி வைக்கப்பட்ட சலுகைகள் மற்றும் பதவி உயர்வுகளை வழங்கிட ஆணை பிறப்பித்ததன் பயனாக பல நலத் திட்டங்கள் குறுகிய காலத்திலேயே திரும்ப வாரியப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி,

★ 858 தொகுப்பு ஊதியப் பணியாளர்கள் கால முறை ஊதியத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

★ 173 மதிப்பூதியப் பணியாளர்களின் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதிகளின் வரைமுறைகளை தளர்த்தி தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றி ஆணையிடப்பட்டது.

★ 20 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 54 ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

★ 10 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 33 ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது.

★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு 28.8.2006 அன்று, கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004–05 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகையும் 2005–06 ஆம் ஆண்டிற்கான போனசும் மொத்தம் சுமார் 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 8,000 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

★ 25 ஆண்டுகள் மாசற்ற பணி முடித்த 6 அலுவலர்களுக்கு கிசான் விகாஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

★ ஐந்து ஆண்டு காலமாகப் பதவி உயர்வுகள் வழங்கப்படாமலிருந்த பல பிரிவு பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் விதிமுறைகளின்படி 432 நாட்களில் 528 நபர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் ஆய்வுகள் மேற்கொண்டு, பணிகள் செவ்வனே துரிதமாக நடைபெற அறிவுறுத்தியதற்கிணங்க, பெரிய குடிநீர்த் திட்டமான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைத் துரிதமாகச் செயல்படுத்திட இரண்டு வட்ட அலுவலகங்கள் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன.

இதே போல ஊரகக் குடிநீர்த் திட்ட வேலைகள் துரிதமாகச் செயல்படுத்திட திருவள்ளுவர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டிலும் இரு ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டன. இப்புதிய வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டதால் மேலும் பொறியாளர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு பெற்றிட வழிவகை செய்தது.

குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள், தரத்துடன் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையில் உதவிப் பொறியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டியது அவசியம். இதனடிப்படையில் நடப்பு ஆண்டில் 100 உதவிப் பொறியாளர்கள் காலியிடங்கள் விதிமுறைகளின்படி நிரப்பப்படும் என தமிழக சட்டமன்றப் பேரவையில் 12.4.2007 அன்று நடைபெற்ற நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து முதற்கட்டமாக வாரிய விதிமுறைகளின்படி வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக புதியதாகப் பணி நியமனம் செய்யப்படும் 19 உதவிப் பொறியாளர்கள் மற்றும் வாரியத்தில் கீழ் நிலைப் பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்களில் தகுதி வாய்ந்த வரைவாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், மின் கண்காணிப் பாளர்களில் 67 நபர்களுக்கும் 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில், உதவிப் பொறியாளர் களாகத் தேர்வு செய்யப்பட்டனர். இதற்கான பணி நியமன ஆணையை 23.7.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். ★

# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏழு மாவட்ட கிராம ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்ற மண்டலக் கருத்தரங்கம்





திரு. எஸ். பாண்டியன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.


மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 25.7.2007 அன்று திருச்சிராப்பள்ளியில் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 7 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்ற மண்டலக் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

இம்மண்டலக் கருத்தரங்கில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆஷிஷ் வச்சானி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரிய கருப்பன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி. பூங்கோதை ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைச் செயலாளர் திரு.க.அசோக் வரதன் ஷெட்டி, இ.ஆ.ப., விளக்கவுரை யாற்றினார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிருவாக இயக்குநர் திரு.சுவரன்சிங், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.ககன் தீப்சிங்பேடி, இ.ஆ.ப., மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி.என். வெங்கடேஷ், இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அனில்மேஷ்ராம், இ.ஆ.ப., புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.ஜே. சிரு இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) திரு. முத்துக்கருப்பன், திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தென்காசி ஜவகர் இ.ஆ.ப., ஆகிய



7 மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் 7 மாவட்டங்களைச் சேர்ந்த கிராம ஊராட்சித் தலைவர்கள் 2,618 பேர் பங்கேற்க தங்கள் ஊராட்சிகளின் தேவைகளையும், அதனைச் சீர்செய்ய உரிய கருத்துக்களையும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமையேற்று உரை ஆற்றும் போது, "இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்ட ஊராட்சித் தலைவர்களுக்கு ஒரு படிவம் கொடுக்கப் பட்டது. அந்தப் படிவத்தில் நீங்கள் சுட்டிக்காட்டிய குறைகளை முழுமையாகப் படித்துப் பார்த்து எந்தெந்தக் குறைகளை உடனே நிவர்த்தி செய்ய முடியுமோ அவற்றை உடனேயும், ஆய்வு செய்து தீர்க்க வேண்டியவற்றைப் பின்னர் தீர்த்து வைப்போம் என்று உறுதி அளிக்கிறேன். நேற்று கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த 6 மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் கருத்தரங்கம் நடைபெற்றது. இன்று திருச்சி மத்திய மண்டலத்தில் 7 மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர்களின் கருத்தரங்கம் இரண்டாவது நாளாக நடந்து வருகிறது.

அடுத்து 3–ஆவது கட்டமாக திருவண்ணா மலையில் காஞ்சிபுரம், வேலூர் உள்பட சில மாவட்டங்கள் அடங்கிய கருத்தரங்கம் ஆகஸ்ட் முதல் வாரத்திலும், அதற்கடுத்து மதுரையில், மதுரை முதல் கன்னியாகுமரி வரை உள்ள மாவட்டங்களின் கருத்தரங்கமும் நடத்தப்பட இருக்கிறது. இப்படி 4 மண்டலங்களாகப் பிரித்து நடத்த இருக்கிறோம்.

இந்தக் கருத்தரங்கில் திருச்சி மாவட்டத்தில் உள்ள 408 கிராம ஊராட்சித் தலைவர்களில் 387 பேரும், கரூர் மாவட்டத்தில் உள்ள 158 பேரில் 151 பேரும், பெரம்பலூர் மாவட்டத்தில் 322–க்கு 293 பேரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 498–க்கு 466 பேரும், தஞ்சை மாவட்டத்தில் 589 பேருக்கு 541 பேரும், திருவாரூர் மாவட்டத்தில் 430–க்கு 409 பேரும், நாகை மாவட்டத்தில் 434 பேருக்கு 371 பேரும் பங்கேற்று இருக்கிறார்கள். இந்த 7 மாவட்டங்களிலும் மொத்தம் உள்ள 2,839 கிராம ஊராட்சித் தலைவர்களில் 2,618 பேர் வந்து உள்ளனர்.

**மக்கள் நலப்பணிகளுக்கு அங்கீகாரம்**

இது 92 சதவீத வருகை ஆகும். இதுவே இந்தக் கருத்தரங்கிற்கு கிடைத்த வெற்றி ஆகும். ஒன்றரை ஆண்டு காலம் இந்த அரசு செய்து வரும் மக்கள் நலப்பணிகளுக்கு கிடைத்த அங்கீகாரமாகவே இதனை கருதுகிறேன். இதுபோன்ற கருத்தரங்கம் மூலம் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கிராம

ஊராட்சித் தலைவர்களையும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்து உள்ளது.

"இந்தியாவின் இதயமே கிராமத்தில் தான் இருக்கிறது" என்று சொன்னார் தேசப்பிதா மகாத்மா காந்தி. "தம்பி. . . மக்களிடம் செல், மக்களிடம் நெருங்கிப் பழகு, கிராம மக்களுக்கு பணி செய், அவர்களின் வாழ்க்கையை வளமாக்க பாடுபடு" என்று சொன்னார் அறிஞர் அண்ணா. இந்த வாசகங்களை அடியொற்றி நமது தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சிப் பணி அரசு நிருவாகத்தில் ஆலமரத்து வேர் போன்றது என்றும், மனிதனை ஒப்பிட்டால் நாடி நரம்புகள் போன்றது என்றும் உள்ளாட்சிப் பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி இருக்கிறார். மறைந்த இளம் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களால் 'பஞ்சாயத்து ராஜ்' மற்றும் 'நகர் பாலிகா' சட்டங்கள் கொண்டு வரப்பட்ட போது அதனை முதல் முறையாக அமல்படுத்தியது தமிழகம் தான்.

தமிழகத்தில் 1996–ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் முதல் அமைச்சராக இருந்த போதுதான் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு செய்து உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டது.

**பெண் தலைவர்கள்**

தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் மகளிர் மட்டும் 4,275 ஊராட்சிகளில் தலைவர்களாக இருக்கிறார்கள். சட்டம் சொல்லி இருப்பது 33 சதவீதம். ஆனால் தமிழ்நாட்டில் இன்று பெண்கள் 34 சதவீதம் பேர் தலைவர்களாக இருக்கிறார்கள். இதே போல் 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களில் 146 பேர் மகளிர். இது 36 சதவீதம் ஆகும். மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் 29–ல் 10 பேர் பெண் தலைவர்கள் உள்ளனர். இது 34 சதவீதம். 6 மாநகராட்சிகளில், 3 மாநகராட்சிகளில் பெண் மேயர்கள் உள்ளனர். இது 50 சதவீதமாகும். நகராட்சிகளைப் பொறுத்த வரை 152 தலைவர்களில் 59 பேரும். பேரூராட்சிகள் 561–ல் 218 பேரும் பெண்கள் தலைவர்களாக உள்ளனர். இந்த அளவிற்கு நிர்ணயிக்கப் பட்டதை விடப் பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்புக்கு வந்திருப்பதற்குக் காரணம் இந்த சட்டத்தை முதல் முதலாக தமிழகத்தில் தலைவர் கலைஞர் அமல்படுத்தியது தான். அதற்காக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மேடையில் நான் அரசியல் பேசுவதாக நினைக்க வேண்டாம். ஆனால் கடந்த ஆட்சியில் இதுபோல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது உண்டா? 5 வருடத்தில் உள்ளாட்சித் துறைக்கு 3 அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள். அதுவும் கடைசி 3 வருடங்கள் பொறுப்பு அமைச்சர் தான் இந்த இலாகாவைக் கவனித்தார். அந்த அளவிற்கு உள்ளாட்சித் துறை மீது அக்கறை இல்லாமல் அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். அது மட்டும் அல்ல. இருந்த அதிகாரத்தையும் கூடப் பறித்தார்கள். ஆனால் இப்போது நாங்கள் நிபுணர் குழுக்களை அமைத்து இருக்கிறோம். இந்த 2 குழுக்களும் எனது தலைமையில் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுக்களில் அமைச்சர்கள், அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், மேயர்கள் இடம் பெற்று உள்ளனர். குழு உறுப்பினர்களைக் கூட்டி நாங்கள் ஆலோசனை நடத்தி இருக்கிறோம். எங்களது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

**அடையாள அட்டை**

இந்தக் கருத்தரங்கில் கிராம ஊராட்சித் தலைவர்கள் பல கோரிக்கைகளை வைத்தார்கள். பயணப்படி நீண்டகாலமாக உயர்த்தப்படவில்லை என்றார்கள். பயணப்படியை இன்னும் கொஞ்சம் உயர்த்தும் முயற்சியில் இந்த அரசு உள்ளது. விரைவில் இதற்கான அறிவிப்பு வெளிவரும். அடையாள அட்டை பற்றி குறிப்பிட்டார்கள். இது நியாயமான கோரிக்கை தான். இது பெரிய பிரச்சினையே அல்ல. ஒவ்வொரு ஊராட்சித்

தலைவருக்கும் அவர்களது கழுத்தில் தொங்கும் வகையில் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை விரைவில் வழங்கப்படும். அந்த அடையாள அட்டையில் அவர்களது பதவிக் காலம், வருடம் பற்றியும் குறிப்பிடப்பட்டு இருக்கும். புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதாக கூறப்பட்டது. ஆக்கிரமிப்பு பற்றி தகவல் கிடைத்ததும் அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் வருவாய்த்துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதைப் பற்றி பேசப்பட்டது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் இலவச கலர் டி.வி திட்டம் உள்ளது. 2 ரூபாய்க்கு ரேசன் அரிசி வழங்கும் மாநிலமும் தமிழகம் தான்.

மக்களுக்குத்தான் இதுபோன்ற திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறோம். எனவே இதனை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு பேசவேண்டும். அரசியலுக்காகப் பேச வேண்டும் என்றால் எதையும் பேசலாம். உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடந்த 2006–2007ஆம் ஆண்டு ரூ.1,225 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. 2007–08ஆம் ஆண்டு நிதிப் பங்கீடு ரூ.1,586 கோடியாக உயர்ந்தது.

இது கடந்த ஆண்டை விட 30 சதவீதம் கூடுதல் ஆகும். கட்சிப் பாகுபாடு இன்றி 5 ஆண்டுகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் எல்லாப் பணிகளும் அனைத்து ஊராட்சிகளில் ரூ.508 கோடி பணிகளும், இந்த ஆண்டு 2,540 கிராம ஊராட்சிகளில் ரூ.508 கோடி பணிகளும், இந்த ஆண்டு 2,534 பணிகளுக்காக ரூ.507 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. திருச்சி மண்டலத்தைப் பொறுத்தவரை 570 கிராமங்களில் இந்த ஆண்டு 21 ஆயிரத்து 655 பணிகள் செய்வதற்காக 114 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் நடந்து வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி டெல்லியில் நான் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்துப் பேசிய போது கேட்டார். நான் இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் பற்றிக் கூறினேன். இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த பிரதமர் இந்தியா முழுவதும் இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் ஒட்டுமொத்த இந்தியாவே வளம் பெறும் என்று பாராட்டினார். கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள், சலுகைகள் வழங்குவது பற்றி இன்னும் 2 அல்லது 3 மாதங்களில் அறிவிக்கப்படும்.

ஊதியம் வேண்டும் என்று கேட்டார்கள். நாம் மக்கள் பிரதிநிதி. நமக்கு எதற்கு ஊதியம் என்று நினைக்க வேண்டாம். மக்களுக்காகப் பணியாற்ற வந்து இருப்பதால்தான் நான் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கிராம ஊராட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருகிறேன்.

நான் சென்னையில் இருக்கும் நாட்கள் கூட மிகவும் குறைவு. இப்படி ஊர் ஊராகச் சுற்றுகிறாயே உனது உடம்பு என்னத்துக்கு ஆகும்? என்று எனது தாயார் பாசத்தின் மிகுதியால் கேட்டபோது தலைவர் கலைஞர், ஊர் ஊராகச் சுற்ற வேண்டும் என்பதற்காகதான் ஊரக வளர்ச்சித் துறையை அவனுக்கு ஒதுக்கி இருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய பல்வேறு ஊராட்சித் தலைவர்களும் பேசும்போது, "இது போன்று ஊராட்சித் தலைவர்களை அழைத்து அவர்களது கருத்துக்களை இதுவரை யாரும் கேட்டதில்லை என்றும் ஊராட்சித் தலைவர்களை மதித்து எங்களது கருத்துக்களைக் கேட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவிருக்கும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்கள்'' என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★




# போக்குவரத்துக் கழகங்களில் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி ஆணை

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி பணிக்காலத்தில் உயிர்நீத்த 474 பேரின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் ஒட்டுநர் மற்றும் நடத்துநர்க்கான பணி ஆணையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மத்திய பணிமனையில், அனைத்து போக்குவரத்துக் கழகங்களில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்குதல், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் புதிய பேருந்துகளை இயக்கிவைத்தல், என்ஜின் அதிக உழைப்புத்திறன் பெற்றமைக்காக ஒட்டுநர் மற்றும் பராமரிப்புப் பணியாளர்களுக்கு பரிசு வழங்கல் மற்றும் 24 மணிநேர நடமாடும் பராமரிப்பு வாகனத்தைத் தொடங்கி வைத்தல் ஆகிய விழாக்கள் அனைத்தையும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள்தலைமை தாங்கினார். போக்குவரத்துத்துறை அரசுச் செயலாளர் தேவேந்திரநாத் சாரங்கி முன்னிலை வகித்தார். நிர்வாக இயக்குநர் திரு.இரா.பாலசுப்பிரமணியம் வரவேற்புரை யாற்றினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும்போது கூறியதாவது :–

“என்றைக்கும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் கலைஞர்தான். ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் நமக்கு முதல்வர் கலைஞர்தான்.

உங்களை சந்திக்க அமைச்சராக, எம்.எல்.ஏ. வாக, தி.மு.க. துணைப்பொதுச் செயலாளராக பல பொறுப்புகளோடு வந்திருக்கிறேன், என்று எண்ண வேண்டாம். உங்களில் ஒருவனாக இருந்து உங்களுக்காகக் குரல் கொடுப்பவனாக வந்து உள்ளேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் சென்னையில் பிரமாண்டபேரணியை நடத்தினீர்கள். கடந்த ஆட்சியில் இழந்த சலுகைகளை இந்த அரசு வழங்கவேண்டும் என்று உரிமையோடு எடுத்துக் கூறினீர்கள். அதன் அடிப்படையில் இந்த நிகழ்ச்சியில் முதல் கட்டமாக பணிக்காலத்தில் இறந்த 474 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் ஓட்டுநர், நடத்துனர் ஆகியோருக்கு பணிஆணை வழங்கப்படுகிறது.

முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளைத் திட்டமாக்கி நிறைவேற்றி வருகிறார். இது சொன்னதையும், சொல்லாததையும் செய்யும் ஆட்சி. அப்படிப்பட்ட ஆட்சிக்கு எப்போதும் போல் தொழிலாளர்கள் துணை நிற்கவேண்டும்''.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், பணிக்காலத்தில் இறந்த வாரிசுதாரர்கள் 474 பேருக்கு கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஓட்டுநர் மற்றும் நடத்துனராக பணி நியமன ஆணைகளையும், 5 லட்சம் கிலோ மீட்டர் பழுதின்றி இயக்கப்பட்ட அதிக உழைப்புத்திறன் பரிசினை 2006–2007 ஆம் ஆண்டுக்கான ஓட்டுநர்கள் மற்றும் பராமரிப்பு பணியாளர்கள் 80 பேருக்கு கைக்கடிகாரங்களையும் வழங்கினார்.

மாநகர் போக்குவரத்திற்காக 25 தொடர் பேருந்துகளும், 3 தாழ்தளப் பேருந்துகளும் 47 நவீனரக மாசற்ற பேருந்துகளும் வழங்கப்பட்டன. இவைகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இயக்கப்படும். இந்த பேருந்துகளைப் பராமரிக்க 24 மணிநேரமும் இயங்கும் வாகனமும் வழங்கப்பட்டது.

★ ★ ★

# வாரியங்களுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

## தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களைத் தமிழக அரசு அமைத்து வருகிறது. அதன்படி, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தின் தலைவராக, தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும்;

அரசுப் பிரதிநிதிகளாக, தொழிலாளர் ஆணையர், நிதித் துறைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், தொழில் மற்றும் வர்த்தகத் துறை ஆணையர் ஆகியோரையும்;

வேலையளிப்போர் பிரதிநிதிகளாக, மதுரை திரு.எஸ்.அமீர் சாதிக், சென்னை திரு.எஸ்.காந்திமணி, இராணிப்பேட்டை திரு. இரா. சிவஞானம், சென்னை திரு.ஆர்.ரமேஷ் பிரசாத், தருமபுரி திரு.ர.வேலுமுருகன் ஆகியோரையும்;

தொழிலாளர் பிரதிநிதிகளாக, திண்டுக்கல் திரு.கே.கருப்பையா, வேலூர் திரு.சௌந்தர்ராஜன், ஆம்பூர் திரு.எஸ்.ஆர். தேவதாஸ், திண்டுக்கல் திரு.கே.ஆர். கணேசன், திருவள்ளூர் திரு. ஆதிசரவணன், தருமபுரி திரு.இரா. திருவேங்கடம் ஆகியோரையும் நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களைத் தமிழக அரசு அமைத்து வருகிறது. அதன்படி, தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தின் தலைவராக, தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும்;

அரசுப் பிரதிநிதிகளாக, தொழிலாளர் ஆணையர், நிதித் துறைச் செயலாளர், சென்னை அரசு கலை மற்றும் கைவினைக் கல்லூரி முதல்வர், அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறைச் சிறப்பு ஆணையர், கைவினை வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோரையும்;

வேலையளிப்போர் பிரதிநிதிகளாக, சென்னை திரு.எஸ். கோபி, டாக்டர் ஜே.பி.கிருஷ்ணா, விருத்தாசலம் திரு.ஜிரகுபதி, மதுரை திரு.ஆர்.பிராசன், தஞ்சாவூர் திரு.எம்.முருகேசன், சென்னை திரு.எஸ்.தியாகராஜன், திரு.கே.புகழேந்தி ஆகியோரையும்;

தொழிலாளர் பிரிதிநிதிகளாக, திண்டுக்கல் திரு.டி.சந்தியாகு, செங்கம் திரு.கே.கே.தேவேந்திரன், அம்பத்தூர் திரு.பி.என்.உண்ணி, திருவண்ணாமலை திரு.பி.அன்பு, சென்னை கரோ (எ) கே.போஸ், நாகர்கோவில் திரு.அரிதாசு ஆகியோரையும் நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் இந்தியாவிற்கான உலக வங்கியின் புதிய இயக்குநர் சந்திப்பு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை 24.7.2007 அன்று இந்தியாவிற்கான உலக வங்கியின் புதிய இயக்குநர் திருமதி. இசபெல் குரேரோ அவர்கள் சந்தித்தார். அப்போது மாண்புமிகு நிதியமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர். இச்சந்திப்பினபோது உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழகத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் 9 திட்டங்கள் ரூபாய் 10 ஆயிரத்து 635 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ரூபாய் 2 ஆயிரத்து 160 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ரூபாய் 597 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம், ரூபாய் 717 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து உலக வங்கியின் இயக்குநர் தமிழக அரசுக்குத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார். இவர் நமது நாட்டில் பொறுப்பேற்றுள்ள உலக வங்கியின் முதல் பெண் இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது. ●



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.7.2007 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாண்புமிகு மத்திய உள்துறை இணையமைச்சர் திருமதி.ராதிகா செல்வி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆர்.பழனியாண்டி,இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

# சென்னைப் பெருநகர வளர்ச்சிக்காக அரசு பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்**
**திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்**




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 10.8.2007 அன்று நடைபெற்ற FICCI கூட்டத்தில் ஆற்றிய உரை :–

**தமிழக நகரங்கள்**

"நகரமயமாதல்" என்பது இன்று தவிர்க்க முடியாத நிகழ்வாக உள்ளது. நகரமயமாதலும், சமூக பொருளாதார வளர்ச்சியும் ஒன்றை மற்றொன்று சார்ந்தும், ஊக்குவித்தும் வளர்ந்து வருகிறது. இன்னும் 20 ஆண்டுகளில் உலகின் மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் நகரங்களில் மட்டுமே வசிப்பர் என்று கணக்கீடும், ஆராய்ச்சியும் தெரிவிக்கின்றன.

உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நமது இந்திய நாட்டில் தமிழகம் 3ஆவது பெரிய பொருளாதார மாநிலமாக உருவாகியுள்ளது. தமிழக மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கள்

தொகையின் பங்கு 44 சதவீதம் ஆகும். அதிக நகர மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் தமிழகம் முதன்மை இடம் வகிக்கிறது.

### மக்கள்தொகை வளர்ச்சி

சென்னை ஒரு நல்ல வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்நகரம் சுதந்திரத்திற்குப் பின் அபாரமான வளர்ச்சி அடைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 43 இலட்சங்களாக இருந்த சென்னை மாநகராட்சிப் பகுதியின் மக்கள் தொகை, 59 இலட்சங்களாக அடுத்த 20 ஆண்டுகளில் உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர எல்லையின் மக்கள் தொகை அடுத்த 20 ஆண்டுகளில் 126 இலட்சங்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தொகை வளர்ச்சியை முழுவதுமாகத் தடுக்க இயலாது. ஆனால் முடிந்த அளவு நகர்ப்புற வளர்ச்சிகளைச் சீர்படுத்தி மக்களுக்காக, மக்களை மேம்படுத்தும் திட்டங்கள் தரும் கடமை அரசுக்கும், திட்டமிடும் துறைகளுக்கும் உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதே நோக்கத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் மனதில் கொண்டு, இந்த அரசு பல முற்போக்கான திட்டங்களை முன்னிறுத்தி வருகிறது. பல்வேறு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

சென்னை பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் எடுத்துக்கொண்ட இந்த முயற்சி சென்னை நகரின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதோடு, அது சீரான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

### வெளிவட்டச் சாலை

சென்னைக்கான இந்த இரண்டாம் முழுமைத்திட்டம் ஒரு தொலைநோக்கோடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நாட்டில் ஏற்படும் அனைத்து வளர்ச்சிகளும், அனைத்து மக்களிடமும் சேரவேண்டும். சமூக நல்லிணக்கங்கள் வளரவேண்டுமானால், சமுதாய இருப்பிடங்கள் சமமான வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டும் என்பதில் இந்த அரசு தெளிவாக உள்ளது.

சென்னைப் பெருநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டும், பெருநகர வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் பெருநகரின் வெளி ஓரத்தில் வெளிவட்டச் சாலை அமைக்க திட்டம் நடைபெற்று வருகிறது. இச்சாலையானது வண்டலூரில் தேசிய நெடுஞ்சாலையையும், மீஞ்சூரில் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையையும் இணைக்கிறது. இச்சாலையின் நீளம் 62.3 கி.மீ ஆகும். சுமார் 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சென்னை மெட்ரோ ரயில்

அடுத்ததாக, சென்னைக்கு ஒரு மாபெரும் முற்போக்குத் திட்டமாக விளங்கப் போகும் "சென்னை மெட்ரோ ரயில்" திட்டம் தெற்காசிய நாடுகளில் ஒரு முன்மாதிரித் திட்டமாக விளங்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன். இந்தத் திட்டம் சென்னை நகரில் இரண்டு வழித் தடங்களில் செல்லும். இது சுமார் 50 கி.மீ தொலைவை உள்ளடக்கியிருக்கும். இத்திட்டம் ரூ.18,000 கோடி மதிப்பீட்டில் நான்கு ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற அரசு திட்டம் தீட்டியுள்ளது.

மேலும், உலகவங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3–ன் கீழ் சென்னைப் பெருநகரம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்தவும், இரயில் பாதைகளில் மேல் மேம்பாலங்கள் அமைக்கவும் திட்டம் வகுக்கப்பட்டு செயல் நிலையில் உள்ளது. இதனால் பெருநகரத்தின் பல பகுதிகளுக்கு ஒரு சீரிய போக்குவரத்து இணைப்பு வசதி கிடைக்க உள்ளது. இதனால் மக்கள் துரிதமாக ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செல்ல இயலும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சியையும், தேவையையும் மனதில் கொண்டு பல சிறப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் மொத்த உணவு தானிய அங்காடி வளாகம், சென்னை மற்றும் பெருநகரங்களில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடங்கள், சிறப்புத் தகவல் தொழில்நுட்பப் பகுதி, ஜவுளி வளாகம், மோட்டார் நகரம் போன்ற திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை யாகும்.

நகர வளர்ச்சியிலும், திட்டமிடுதலிலும் "போக்குவரத்துத் திட்டம்" இன்றியமையாதது. சென்னையிலும், தமிழகத்தின் ஏனைய முக்கிய நகரங்களிலும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு தலைமைச் செயலாளரின் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு பல்வேறு போக்குவரத்துத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞரின் கடந்த ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட மேம்பாலங்கள் தான், இன்று சென்னையில் அசுர வேகத்தில் வளர்ந்துள்ள போக்குவரத்தைத் தாக்குப்பிடிக்கிறது. தொடர்ந்து இந்த அரசு பல்வேறு இடங்களில் மேம்பாலங்கள் அமைப்பதுடன், புதிய போக்குவரத்து வழித் தடங்கள் கண்டறியப்பட்டு பலநூறு புதிய வாகனங்கள் விடப்பட்டுள்ளன.

நகர வளர்ச்சியில் அடுத்து ஒரு இன்றியமையாத அம்சம் குடிநீர் விநியோகம். சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் சென்னையில் மாபெரும் குடிநீர் சுத்திகரிக்கும் திட்டத்தை திறந்துவைத்தார் என்பதை நினைவு கூற கடமைப்பட்டுள்ளேன்.

அனைத்திற்கும் மேலாக மக்கள் அனைவருக்கும் அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து அனைத்து மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி "செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை" மக்களின் விழிப்புணர்வை கொணர பாடுபட்டு வருகிறது. ஏனென்றால் சமமான வளர்ச்சி என்பது கட்டமைப்புகளில் மட்டுமல்லாமல், அறிவு வளர்ச்சியிலும் இருக்க வேண்டும் என்பதே உண்மையான வளர்ச்சி.

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

எனவே, தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சியையும், அதனைச் சார்ந்த பொருளாதார வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டு மாநிலத்தை முதல் நிலைக்கு எடுத்துச் செல்ல அரும்பாடுபட்டு வருகிறது. இதற்கென தனியார் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. பல்வேறு நிறுவனங்கள் கட்டமைப்புப் பணிகளைத் துவக்கியுள்ளன. நிறுவனங்கள் தமிழகத்தைத் தனது தளமாகத் தேர்ந்தெடுக்க ஏதுவாக அரசு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருகிறது என்பதும் தாங்கள் நன்கு அறிந்ததே.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும், அதனைச் சார்ந்த பொறியியல் துறை நிறுவனங்களும், மோட்டார் வாகனத் தொழிற்சாலைகளும் தமிழகத்தில் தொடங்கி இருப்பது வரவேற்கத்தக்க வளர்ச்சியாகும். அதே நேரத்தில் அதிகப் பரப்பளவு கொண்ட, சுமார் 100 முதல் 500 ஹெக்டேர் வரையிலான நிலங்கள் தேவைப்படுகிறது. இதற்கான நிலங்கள் நகரியப் பகுதிக்குள் கிடைக்க வாய்ப்பில்லை. எனவே நகரைச் சார்ந்த கிராமப்புறப் பகுதிகளை நிறுவனத்திற்கு இடமாகத் தேர்வு செய்ய நேரிடுகிறது. ஆகையினால் நகர்ப்புற வசதிகளான போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், அடிப்படை வசதிகளை அங்கேயும் ஏற்படுத்தும் கட்டாயம் எழுந்துள்ளது. அதற்கான ஆக்கபூர்வமான ஏற்பாடுகளை அரசு செய்து வருவதும் நீங்கள் அறிவீர்கள்.

நகர்ப்புற வசதிகளை கிராமப் பகுதிகளுக்கும் குறிப்பாக தொழில் நிறுவனங்கள் அமையும் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதும், அந்த இடைவெளியை நிரப்புவதையும் அரசு முன்னுரிமையாகக் கொண்டு செயல்படுகிறது. ஆனால் இந்தப் பெரும் பொறுப்பை அரசு மட்டும் நிறைவேற்ற இயலுமா ? பயன்பெறுகிற, லாபம் ஈட்டுகின்ற நிறுவனங்களின் பங்கு இதில் என்ன ? சிந்திக்க வேண்டுகிறேன். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் அரசும், தொழில்

நிறுவனங்களும் கைகோர்த்து செயல்பட வேண்டும். வளர்ச்சிக்கான தேவைகளை நிறைவு செய்வதில் பங்கேற்றுச் செயல்படத் தொழில் நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

தொழில் நிறுவனங்கள் தொடங்குகின்ற பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரங்கட்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதோடு மட்டும் அல்லாமல், அங்கு தோற்றுவிக்கப்படுகின்ற நகரிய வசதிகளின் பலன்கள் அப்பகுதியைச் சார்ந்த மக்களின் தேவையை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும். அதனைப் பயன்படுத்தவும், அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் தங்கு தடையற்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். அங்கு நிலவி வருகின்ற சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும். பசுமைக் கட்டட கருத்துருக்கள் (Green Building concept) முடிந்த வரையில் செயல்படுத்தப் பட வேண்டும்.




கட்டமைப்பும் அடிப்படை வசதிகளும் உலகத் தரம் வாய்ந்தவையாக ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

**வளர்ச்சித் திட்டக்குழு**

உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்த அரசு திட்டம் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதைப் போன்றே குடிநீர் வசதி, கழிவு நீர் வெளியேற்றம் கட்டமைப்பு வசதிகளில் முன்னுரிமை பெறுகிறது. நிலத்தடி நீர் பாதிக்காத வண்ணம் புதிய நீர் ஆதாரங்களை தோற்றுவித்து, தேவையான அளவு குடிநீர் விநியோகிக்க திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், சமூகக் கட்டமைப்புகளான கல்வி, மருத்துவம், கலாச்சார வசதிகளை ஏற்படுத்த ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது. தங்கு தடையற்ற மின் விநியோகம், தொலைதொடர்பு வசதியை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, சென்னைப் புறநகர்ப் பகுதியில், பல்வேறு கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள தொழில் நிறுவனங்கள், அதனுடைய தாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசானது, எனது தலைமையில், தலைமை செயலர், அரசு செயலாளர்கள் மற்றும் வல்லுநர்கள் அடங்கிய "வளர்ச்சித் திட்டக் குழு" (Development Planning Committee) அமைத்துள்ளது. அக்குழு, நிறுவனங்கள் மற்றும் மக்களின் தேவைகளுக்கேற்ப பகுதிவாரியாக திட்டம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தமிழகத்தை தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னோக்கி எடுத்துச் செல்கின்ற அதே வேலையில், கிராமப்புறங்களில் நகரிய வசதிகளை ஏற்படுத்தி அம்மக்களும் வளர்ச்சியின் அனைத்து பரிமாணங்களிலும் பங்கேற்கவும், பயனடையவும் வழிகாண வேண்டும் என விரும்புகிறேன்.

இந்த அருமையான நிகழ்ச்சியில் பங்கேற்று, என்னுடைய கருத்துக்களை உங்கள் முன் வைப்பதற்கு வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். □



# கோ–ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை...
# காலத்திற்கேற்ற ரசனை !



புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.

- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை



கோ-ஆப்டெக்ஸ்

**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

தமிழரசு

